கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

239

ஆவணி
01.08.2024
100/-

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்




ஐங்கரன் விக்கினேஸ்வரா
மகாலிங்கம் பத்மநாபன்
ஏ.பீர் முகம்மது
பா.சிவதர்சன்
முல்லை அமுதன்
எம்.கே.முருகானந்தன்
ஷெல்லிதாசன்
ஜலீலா முஸம்மில்
யே.கிறித்துறாஜா
கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்
செல்வகலா
கோகிலா மகேந்திரன்
வ.ந.கிரிதரன்
தமிழ்க்கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2024 - ஆவணி (01.08.2024)

# பொருளடக்கம்


## சிறுகதைகள்

மகாலிங்கம் பத்மநாபன் - 05
பா.சிவதர்சன் - 12
ஷெல்லிதாசன் - 21
யோ.கிறித்துராஜா -28

## கவிதைகள்

முல்லை அமுதன் - 18
ஜலீலா முஸம்மில் - 25
கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் - 33
செல்வகலா - 39







## அஞ்சலி


கதிர் பாலசுந்தரம்
எஸ்.முத்துமீரான்
சுலைமா சமி இக்பால்

## தொடர் நாவல்


வ.ந.கிரிதரன் - 34
தமிழ்க்கவி - 41

## கட்டுரைகள்

**ஹங்கேரிய கவிஞர் சாந்தோர் பெட்டோவியும்! கவிஞர் கே.கணேஷின் மொழித்திறனும்!!**
ஐங்கரன் விக்கினேஸ்வரா - 03




**எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரையின் ஆபிரிக்க புதினங்கள்**
ஏ.பீர்.முகம்மது - 10



**குப்பிழான் ஐ.சண்முகனின் "இரசனைக் குறிப்புகள்"**
எம்.கே.முருகானந்தன் - 29

**முடிவைத்தொடுவாய் முயன்று - 8**
கோகிலா மகேந்திரன் - 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2024 ஆவணி இதழ் - 239**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசிர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## ஜீவநதியின் ஆளுமைச் சிறப்பிதழ்கள்

ஜீவநதி ஆரம்பித்த காலம் தொடக்கம் சிறப்பிதழ்களை வெளியிட்டு வருவதை அனைவரும் அறிவீர்கள். ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிகமான சிறப்பிதழ்களை வெளியிட்ட சஞ்சிகை ஜீவநதி என்பதும் அனைவரும் அறிந்ததே. கடந்த சில வருடங்களாக வாழும் மூத்த ஆளுமைகளின் இலக்கிய செயற்பாட்டைக் கருத்தில் கொண்டு அவர்களை கௌரவித்து மகிழ்வித்து நன்றி செலுத்தும் முகமாக ஆளுமைச்சிறப்பிதழ்களை வெளியிட்டு வருகின்றேன். இந்த ஆளுமைச் சிறப்பிதழ்களை வெளியிடுகின்ற சமயத்தில் ஜீவநதி குறித்த படைப்பாளரிடம் எந்த பணத்தையோ பொருளையோ எதிர்பார்ப்ப தில்லை. அனேகமாக 5 - 10 பிரதிகள் வரை குறித்த ஆளுமைக்கு கௌரவப் பிரதிகளாக கொடுத்து அன்பைத் தெரிவித்து வருகின்றது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றேன். அதே போல எந்த ஆளுமையும் எனக்கு சிறப்பிதழ் செய்யுங்கோ என என்னிடம் தாங்களாக கேட்பதுமில்லை என்பதையும் வாசகர்களுக்கு தெரிவித்து கொள்கின்றேன்.

40 ஆளுமைகளுக்கு இதுவரையில் சிறப்பிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. இனி வரும் காலத்தில் மறைந்த கவனிக்கப்படாத சரியாக ஆவணப்படுத்தப்படாத ஆளுமைகளுக்கும் ஆவணச் சிறப்பிதழ் வெளியிட ஜீவநதி எண்ணியுள்ளது. காலம் விரைந்து கொண்டு இருக்கின்றது. எங்கள் அடையாளங்களை இழந்து கொண்டு இருக் கின்றோம். முடிந்தவரையில் எங்கள் அடையாளங்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்குடன் தான் ஜீவநதியின் சிறப்பிதழ்கள் அமைகின்றன. எனவே மறைந்த ஆளுமைகள் குறித்த ஆவணச் சிறப்பிதழும் வாசகர்களுக்கு பயனுடையதாக இருக்கும் என நம்பு கின்றோம். சென்ற மாதம் வரதரின் நூற்றாண்டை முன்னிட்டு வரதர் சிறப்பிதழ் வெளியானது அந்த இதழ் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளுங்கள். அடுத்த மாதம் பிரபல எழுத்தாளர் நெல்லைக க. பேரன் சிறப்பிதழ் வெளியாகும் என்ற செய்தியை வாசகர்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

ஜீவநதி முடிந்தவரையில் தன்னாலான ஆவணப்படுத்தல்களை யும் இலக்கிய முயற்சிகளையும் படைப்பாளர்களையும் படைப்புகளையும் வெளிக் கொண்டு வரும். எந்த சலசலப்பிற்கும் ஜீவநதி அஞ்சுவது கிடையாது. தான் வரித்துக் கொண்ட பாதையில் ஜீவநதி பயணிக்கும்.

-க.பரணீதரன்

**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை.
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# ஹங்கேரிய கவிஞர் சாந்தோர் பெட்டோவியும்! கவிஞர் கே.கணேஷின் மொழித் திறனும்!!




கவிதைகள் மூலம் மக்களிடையே கருத்தை சுதந்திரமாக வெளிக்கொணர்வது ஈழப் போராட்டத்தின் உச்ச காலகட்டத்தில் கடினமாகவே இருந்தது. ஆயினும் மொழி பெயர்ப்புக் கவிதைகள் அப்பணியை செவ்வனே நிறைவேற்றின. அவற்றுள் முக்கியமாக சமத்துவ சோசலிச நாட்டுக் கவிதைகளின் தாக்கம் ஈழத்தில் வலுப்பெற்றே இருந்தது. குறிப்பாக ஹங்கேரிய தேசிய கவிஞரான பெட்டோஃபியின் கவிதைகள் இளம் எழுத்தாளரிடையே கனதியான தாக்கத்தை உருவாக்கி இருந்தது. இதன் மூல காரணியாக மலையகத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான கே.கணேஷின் மொழிபெயர்ப்பு புலமையானது குறிப்பிடத்தக்கது. முல்க்ராஜ் ஆனந்த், கே. ஏ. அப்பாஸ், லூசுன், ஹோ சி மின், சாந்தோர் பெட்டோஃபி முதலிய எழுத்தாளர்களின் படைப்புக்களை கணேஷ் தமிழுக்குத் தந்துள்ளார். கே.கணேஷின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கை இருபதுக்கும் மேலாகும்.

ஹங்கேரிய தேசிய கவிஞரான பெட்டோஃபியின் (Sandor Petofi ) கவிதைகளை தமிழில் தந்த பெருமைக்கு மூலகர்த்தாவான பிரபல எழுத்தாளரும் கவிஞருமான கே.கணேஷ் ஆவார். ஹங்கேரியக் கவிஞன் சாந்தோர் பெட்டோவ்ஃபி "எத்தனைநாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே" எனும் நூல் தேசியகலை இலக்கிப் பேரவை வெளியிட்டது.

இலக்கிய வரலாற்றில் ஏறக்குறைய எல்லாக் காலகட்டங்களிலும் அனுபவம் கொண்டவர் கே.கணேஷ். இலங்கையின் சுதந்திர போராட்ட காலத்திலும் அதற்கு பிற்பட்ட காலத்திலும் மட்டுமன்றி யதார்த்த பூர்வமாக இலக்கிய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்.

**எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே!**

ஹங்கேரியக் கவிஞன் சாந்தோர் பெட்டோவ்ஃபி ஜனவரி முதலாம் நாள் 1823 ஆம் ஆண்டு பிறந்தார். ஹங்கேரிய நாட்டில்ஒரு சிறு கைப் பணியாளனின் மகனாகத் தோன்றினார் பெட்டோவ்ஃபி.

உலககெங்கும் 1973 முதல் ஐ.நா.வின் கிளையான ஐ.நா.கல்வி விஞ்ஞான கலாசார நிறுவனம் அவர் நினைவாக ஆண்டு தோறும் கொண்டாடுகிறது.

"உயிரொரு பெருநிதி - காதல்
உயர்வுடை யதனினும் ஆம்
சுயம்பெரு விடுதலை - காண
துறப்ப னவற்றினை நான்."

நாட்டு விடுதலைக்காக அனைத்தையும் தியாகம் செய்ய உந்தும் இத்தகைய உத்வேகமான கவிதைகளை எழுதி உலகனைத்திலும் விடுதலை வீரர்களின் உள்ளத்தில் கனலைத் தூண்டிய வீராவேசக் கவிஞரே சாந்தோர் பெட்டோவ்ஃபி, புரட்சிக் கவிஞர்களின் ஆதர்சகவியாக மிளிர்கிறார்.

உலக கவிஞனாகிய அவன் தனது நாடு அன்னியர் ஆட்சிக்குட்பட்டு அவதியுற்ற காலத்தில் பேனா ஏந்திய தன் கையால் வாளேந்தவும் தயங்கவுமில்லை. தனது ஹங்கேரியாம் "மக்யார்" நாடு, ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் மன்னர் ஆட்சியை அகற்றவும் நாட்டிலே முடியரசை ஒழித்துக் குடியரசை நிலை நாட்டவும் போர் வீரனானான்.

நீ மனிதனாயின் மனிதனாயிரு
நீ -
மனிதனாயின்
மனிதனாயிரு

ஆட்டுவிப்பார் தம்வழியில்
ஆடுகின்ற பொம்மையென
நாட்டு மக்கள் உனைக்கண்டு
நகைத்திட நீ வாழ்வதுவோ?

வல்லரக்கர் சினங்கண்டு
வால்மடக்கும் நாயெனவே
புல்லர்களுக்குக் கஞ்சுவதோ
புரிபோர் நீ! நிமிர் தலையை!

நீ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனாயின்
மனிதனாயிரு

பெற்றோரின் ஏழ்மை காரணமாக போர்வீரனாகவும், நடிகனாகவும், தொழில் நடாத்த வேண்டியிருந்த அவன், சத்திரங்களிலும், சாவடிகளிலும் தங்கி ஊர்சுற்றிய காலத்தே மக்களினூடே பழகிய அனுபவத்தில் கவிதைகள் படைக்கத்தொடங்கினான்.

மரபுவழி உவமை அணிமுறைகளில் விலகி, புது உத்தியில் தனது உள்ளக் குமுறல்களைக் கவிதையாக்கினான். அவை இன்று விடுதலை வேட்கை கொண்ட பலநாட்டினரதும் உள்ளக் கனலைத் தூண்டும் போர்க் கவிதைகளாய் விளங்குகின்றன. அவ்வுலகக் கவிஞனின் பாடல்கள் உலகெங்கும் ஒலிக்கின்றன.

ஆட்டுவிப்பார் தம்வழியில்
ஆடுகின்ற பொம்மையென
நாட்டு மக்கள் உனைக்கண்டு
நகைத்திட நீ வாழ்வதுவோ?

வல்லரக்கர் சினங்கண்டு
வால்மடக்கும் நாயெனவே
புல்லர்களுக்குக் கஞ்சுவதோ
புரிபோர் நீ! நிமிர் தலையை!

நீ -

மனிதனாயின்
மனிதனாயிரு


காதலையும் வீரத்தையும் பாடிய அவனது கவிதைகள் நாட்டின் விடுதலை நாடிப் பாடத் தொடங்கின. மகாகவி பாரதியாரின் கவிதைகளில் காணும் ஆவேசத்தையும் துடிப்பையும் ஒத்தன அவனது கவிதைகள். 1849 இல் நடைபெற்ற விடுதலைப்போரில் இருபத்தியாறே வயதில் பகைவனின் ஈட்டிக்கு சாந்தோர் பெட்டோவ்ஃபி இரையானான்.

**ஆக்க இலக்கிய கர்த்தா கே.கணேஷ்:**

ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும் கவிஞராகவும் மட்டுமன்றி உயிரோட்டம் நிறைந்த மொழிபெயர்ப்பையும் கே.கணேஷ் முற்போக்கு தமிழ் இலக்கியத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு செய்துள்ளார்.

கண்டியில் உள்ள அம்பிட்டி என்னும் இடத்தில் 2 மார்ச் 1920 பிறந்தவர் 5 ஜீன் 2004 காலமானார். கணேஷ் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியிலும், பின்னர் மதுரை தமிழ்ச்சங்கத்திலும், திருவையாறு ராஜா கல்லூரியிலும் கல்விகற்றார்.

ஹோசிமின் சிறைக் குறிப்புக்கள் உள்ளிட்ட சோவியத், சீன, வியட்னாமிய கதைகளையும், முல்க்ராஜ் அனந், கே.ஏ. அப்பாஸ் போன்றோரின் படைப்புக்களையும் மொழிபெயர்த்த இவரின் மொழிபெயர்ப்பு கவிதைத்தொகுப்பு, காலத்தின் தேவையால் சிகரம் வைத்தாற் போல் திகழ்கிறது.



கே.கணேஷ் இலங்கை இந்திய எழுத்தாளர் களுடன் இலக்கிய அமைப்புக்களுடனும் மட்டுமன்றி சோசலிஷநாட்டு எழுத்தாளர்களின் அமைப்புக்களுடனும் தொடர்பு கொண்டவர். அத்துடன் வெளிநாடுகளில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாடுகளில் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. நவசக்தி, லோகசக்தி போன்ற தமிழக இதழ்களில் கவிதைகள் எழுதினார். 1940களில் மணிக்கொடி இதழில் இரண்டு சிறுகதைகள் எழுதியுள்ளார். வீரகேசரி, தேசாபிமானி ஆகியவற்றில் சிறுகதைகள் எழுதினார். 1940களின் பிற்பகுதியில் வீரகேசரியில் ஆசிரியர் குழுவிலும், 1950களில் சுதந்திரனில் செய்தியாசிரியராகவும் பணியாற்றினார்.

**முற்போக்கு எழுத்தாளர் சங்க அமைப்பாளர்:**

பத்திரிகையாளராக, கவிஞராக, திறனாய்வாளராக, பேச்சாளராக, அமைப்பாளராக, ஆலோசகராக பன்முகச் செயலாற்றல் படைத்தவர் கே. கணேஷ். சென்னையில் கற்றவேளையில் முனைப்புடன் இளைஞர் காங்கிரஸில் இயங்கி 1936 ஆம் ஆண்டில் லோக சக்தி எனும் பத்திரிகையை வெளியிட்டவர்.

1945 இல் கே. ஏ. அப்பாஸ், வெங்கடாச்சாரி, குயிலன், தி.க. சிவசங்கரன் ஆகியோருடன் இணைந்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை ஆரம்பித்துச் சிறந்த அமைப்பாளராகத் தம்மை இனங் காட்டினார்.

கணேஷ் தமிழகத்திலும் இலங்கையிலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை ஆரம்பிப்பதில் பெரும் பங்காற்றியவர். 1946 இல் "பாரதி" என்ற முற்போக்குக் கலை இலக்கிய இதழை கே. இராமநாதனுடன் இணைந்து தொடங்கி 1948 வரை நடத்தினார்.

மார்ட்டின் விக்கிரமசிங்க, எதிர்வீர சரத்சந்திர போன்ற சிங்கள இலக்கியப் பிரமுகர்களுடன் இணைந்து இலங்கையின் தமிழ் - சிங்கள எழுத்தாளர்களது ஒன்றிணைந்த ஸ்தாபனத்தைக் கட்டியெழுப்பினார்.

அதே முனைப்புடன் செயல் புரியும் ஆர்வம் தளராதநிலையில் தொடர்ந்து இளம் இலக்கியவாதிகளுடன் தொடர்பை விருத்திச் செய்தது இவரது செயலூக்கத்துக்கு சிறந்ததொரு சான்றாகும்.

தமது பன்முக இலக்கியப் பணியின் ஓரம்சமாக அனைத்துலக மக்களது நல்ல படைப்புகளை தமிழாக்கித்தரும் பணியை தொடர்ச்சியாகச் செய்து வந்தவர். இத்துறையில் சீன இலக்கியங்கள் அதிகம் கவனஞ்செலுத்தப்பட்டன. ஏற்கனவே லூசுனின் சிறுகதைகளைஇரு தொகுதிகளாய் தமிழ்கூறு நல்லுலகுக்கு வழங்கியவர், வேறு சில சீனப்படைப்பாளர்களை அறிமுகம் செய்தவர்.


இவரது மொழிபெயர்ப்புகள் மூல மொழி சார்ந்த மக்களதும், தமிழ் மக்களதும் அறநெறிகள், தார்மீகக் கோட்பாடுகள் பண்பாட்டுக் கோலங்கள், அழகியற் தார தம்மியங்கள் ஆகியவற்றைத் தமது நுண் மாண் நுழை புலத்தால் தேர்ந்து தெளிந்து மொழி பெயர்க்கும் ஆக்கத்தினை சுவை படத்தரும் ஆற்றல் படைத்தவர்.

அதற்கென இலக்கியத் தேடலுக்கும் அப்பால் சமூகபண்பாட்டு ஆய்வுகளை நிகழ்த்திப் பெற்ற அறிவொளியுடனேயே தனது மொழி பெயர்ப்புப் பணியை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாலிங்கம் பத்மநாபன்

# ஓடிப்போனவள்



நான் மாற்றலாகிப் போனது ஒரு நகரமுமல்லாத கிராமுமல்லாத இரண்டும் கெட்டான் ஊர். நான் கணித பாடத்தையும் மனைவி சமூகக்கல்வியையும் கற்பிப்பதால் இருவருக்கும் ஒரே பாடசாலைக்கு இடமாற்றம் கிடைப்பது வழமை. மகன் ரமணனை அதே பாடசாலையில் ஆறாம் வகுப்பிலும் மகள் கோதையை நான்காம் வகுப்பிலும் சேர்த்தோம். பிள்ளைகள் கண்பார்வை யில் இருப்பது தான் இந்த நாட் களில் பாதுகாப்பு. பாடசாலைக்கு அருகாமையில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டோம்.

பக்கத்து வீட்டுக் கமலம் அக்கா என் மனைவிக்குப் பெரும் உதவி. சந்தையில் மரக்கறி வாங்கி வந்து கொடுப்பா. சனி ஞாயிறுகளில் நான் சைக்கிளில் சந்தைக்குப் போய் மீனோ கோழி இறைச்சியோ வாங்கி வருவேன். சில நேரங்களில் ரமணன் ஓடி வந்து சைக்கிள் கரியரில் ஏறிக் கொள்வான். சூழலை அறிந்து வைத்திருப்பது நல்லது தானே என்று நானும் ஏற்றிக் கொண்டு போவேன்.

நாங்கள் மாற்றலாகிப் போகும் இடங்களில் எல்லாம் ஊர்ப் பெண்களையும் மாணவர்களின் தாய்மாரையும் என் மனைவி சிநேகம் பிடித்து விடுவா. அந்த வகையில் அறிமுகமானவ தான் றொசலின். றொசலினின் நடை உடை பாவனை எல்லாம் அவரை நன்கு படித்தவராக அடையாளம் காட்டின. அவள் கணவன் சத்தியன் ஒரு கூலித் தொழிலாளி. அதிகம் படிக்காதவராகத் தோன்றினார்.

ஒரு நாள் றொசலின் என் மனைவியுடன் கதைத்து விட்டுச் செல்வதைக் கண்ட கமலம் அக்கா, அவசரமாக எங்கள் வீட்டிற்கு வந்து, "ரீச்சர், அவவோடை அதிகம் கதை பேச்சு வைச்சுக் கொள்ளாதீங்கள். அவ ஓடி வந்தவ, வரும் போது முந்தின புரிசனுக்குப் பிறந்த பொடியனையும் கொண்டு வந்தவ." என்றா. ஒரு நாளும் கோபம் வராத என் மனைவிக்குச் சுள்ளென்று கோபம் வந்தது. சத்தியன் கமலம் அக்கா வீட்டில் வேலை செய்வதை நாங்கள் பல முறை அவதானித்திருக்கிறோம். என் மனைவி "கமலம் அக்கா, நாங்கள் வடிவாய்த் தெரியாமல் ஒருத்தரைப் பற்றியும் கதைக்கக்கூடாது. அப்பிடிப் பார்த்தால் சத்தியனையும் கூட்டி வந்தவன் அல்லது இழுத்து வந்தவன் எண்டு சொல்லலாம் தானே. பிழை நடந்திருந்தால் இரண்டு பேரும் தானே பொறுப்பு." என்றா. ரீச்சர் முகத்திற்கு நேரே இப்படிக் கேட்பா என்று எதிர் பாராத கமலம் அக்கா, "என்ன பிரச்சினை எண்டாலும் பொம்பிளை வீட்டை விட்டு ஓடி வாறதோ" என்றா.

"அக்கா என்ன நடந்தது எண்டு ஒருத்தருக்கும் தெரியாது. தெரியாமல் நாங்கள் கதைக்கக் கூடாது. ஒரு பதின்ம வயதுப் பெண் ஓடி வந்தால் இளமை மோகம் Infatuation என்று நினைக்கலாம். இவ ஒருத்தனுடன் வாழ்ந்து ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையும் பெத்தாப் பிறகு பிள்ளையையும் கொண்டு ஓடி வாறா எண்டால் அவ என்ன கஷ்டத்தில் வேறு வழியின்றி ஓடி வந்தாவோ யாருக்குத் தெரியும்?" என்று சாந்தமாகவே சொன்னா. உள்ளே இருந்து கேட்டுக் கொண்டிருந்த எனக்கு என்னை அறியாமல் உதட்டில் புன்னகை தோன்றியது.

இந்த சம்பவத்தின் பின் இரண்டு மூன்று நாளாய் றொசலின் வரவில்லை. கமலம் அக்கா இங்கு வந்து கதைத்ததை றொசலின் கண்டு விட்டாவோ? எண்டு என் மனைவி அந்தரப்பட்டா. நான்காம் நாள் சற்றுக் களைத்த தோற்றத்தில் றொசலின் வந்தா. அவவாகவே கதையைத் தொடங்கினா. "ரீச்சர் என்ரை அப்பா கொழும்பிலை ஒரு பெரிய முதலாளி. எனக்கு இரண்டு அண்ணன்மாரும் ஒரு தங்கச்சியும் இருக்கினம். அண்ணன்மாரும் அப்பா மாதிரிப் பெரிய முதலாளி மார். நானும் தங்கச்சியும் இங்கிலிஸ் மீடியத்திலை தான் படிச்சனாங்கள். எங்களை அப்பா இல்லாட்டில் அண்ணன்மார் காரில் தான் ஸ்கூலுக்கு ஏத்திப் போவினம். நாங்கள் ஒரு நாளும் பஸ்ஸில் ஏறினதில்லை. நான் எஸ். எஸ். சி. பாஸ் பண்ணியதும என்னை அப்பா தன்ரை சிநேகிதரின்ரை மகனுக்குக் கலியாணம் கட்டிக் கொடுத்தார். அவரைக் கலியாணம் செய்ய எனக்கு துளியும் விருப்பமில்லை. சரியான குடிகாரன், சிநேகிதர் களுடன் சேர்ந்து குடிச்சுப் போட்டு எல்லாரோடையும் சண்டை பிடிப்பார். நான் அவரைச் செய்ய மாட்டன் எண்டு அழுதன். அப்பாவும் அம்மாவும் அவர் கலி யாணம் செய்தாப் பிறகு திருந்திவிடுவார் என்றார்கள். அப்பா அவரைத் தன்ரை சிநேகிதன்ரை மகன் எண்டு பார்த்தாரே தவிர நல்ல மனுசனா எண்டு பார்க்கேல்லை. கலியாணம் "சேர்ச்சிலை" கிராண்டாய் நடந்தது.

கலியாணத்துக்குப் பிறகு இரண்டு மூண்டு கிழமை ஒழுங்காய் இருந்தார். பிறகு பழைய குருடி கதவைத் திறவடி எண்ட கதை தான். சிநேகிதர்களுடன் சேர்ந்து குடிச்சுப் போட்டு வந்து அது சரியில்லை இது சரியில்லை எண்டு என்னை அடிப்பார். அடி தாங்கே லாட்டி அம்மா வீட்டிற்குப் போவேன். இரண்டு நாள் பார்த்துவிட்டுக் குடிக்காமல் நல்லபிள்ளை போல வருவார். அம்மாவிடம் "அன்ரி உங்கடை மகள் சரியான வாயாடி. பொறுக்கேலாமல் இரண்டு தட்டுத் தட்டு வேன். அதுக்கு இஞ்சை வந்து நிக்கிறாள்." என்பார். அம்மா நம்பிவிடுவா, "பிள்ளை வேலையாலை களைச்சு வாற ஆம்பிளையளை வீட்டிலை இருக்கிற பொம்பிளையள் தான் அனுசரிச்சுப் போகோணும்." எண்டு புத்தி சொல்லி அவருடன் அனுப்பி விடுவா. வீட்டிற்குப் போனதும் நல்லாய் குடிச்சுப் போட்டு "ஏய், உன்ரை வீட்டை சொன்னால் நான் பயந்திடுவனோ?" என்று சொல்லி அடிப்பார். நான் வீட்டிற்குள் அடைஞ்சு கிடந்து அழுவேன். அடி தாங்கேலாட்டி அம்மா வீட்டிற்குப் போய் விடுவேன். அப்பாவிற்கும் அம்மா விற்கும் கலியாணமான பெண் புரிசனை அனுசரிச்சுப் போகாமல் இஞ்சை ஓடி வாறாளே எண்டு என்னில் தான் கோபம்.

இந்த நரகத்திலிருந்து எப்படித் தப்பிப்பது எண்டு தெரியாமல் தவித்துக் கொண்டு இருந்த போது நான் கர்ப்பமானேன். அடி உதை கொஞ்சம் குறைஞ்சது, பிள்ளை பிறக்கத் திருந்தி விடுவாரென்று நம்பினேன். பிள்ளை பெற அம்மாவின் வீட்டிற்குச் சென்றேன், அந்த நாட்கள் இனிமையான நாட்கள். அழகான ஆண் பிள்ளை பிறந்தது. எல்லோரும் மகிழ்ந்தார்கள், பெயர் சூட்டல் ஞானஸ்தானம் என்று நாட்கள் மகிழ்ச்சியாக கழிந்தன. மூன்று மாதங்களின் பின் என் கணவர் வந்து எங்கள் வீட்டிற்குக் கூட்டிச் சென்றார்.

பிறகு என்ன பழைய குருடி கதவைத் திறவடி எண்ட கதை தான். இப்போது ஒரு புதிய குற்றச்சாட்டும் வந்தது. நான் அம்மா வீட்டில் இருந்த போது இவர் வரும் வேளைகளில் என் தங்கை தேநீர் கொடுத்து உபசரித்திருக் கிறாள். அவள் என்னை விட உயரமாயும் நல்ல நிறமும் கொண்ட அழகி. அப்பிடி ஒரு அழகான பெண்ணை வைச்சுக் கொண்டு என்னை மாதிரி ஒரு குரங்கைத் தனக்கு என்ரை அப்பா அம்மா கட்டி வைச்சிருக்கிறார்களாம் எண்டு சொல்லி அடிக்கத் தொடங்கினார். கைக்குழந்தை யுடன் அம்மா வீட்டிற்கு ஓடத் தொடங்கினேன் . அவர்கள் என் மீது தான் குற்றம் சொன்னார்கள்.

அடிக்கிறது போதாதெண்டு சிகரெட் நெருப் பால் முதுகு நெஞ்செல்லாம் சுடத் தொடங்கினார். அப்படிச் சுடும் போது பிள்ளையின் முதுகிலும் சூடு பட்டது. அவன் வீரிட்டு அழத்தொடங்கினான். "ஆருக் கெடி பெத்தாய் இந்தக் குரங்கை" என்று பெத்தவனே பேசக் கேட்ட எனக்கு நெஞ்சிலிருந்து ஏதோ கழன்று விழுந்தது போலிருந்தது. பிள்ளையுடன் அம்மா வீட்டிற்கு ஓடினேன். சிகரெட்டால் சுட்ட காயத்தைக் கண்டால் அம்மா தாங்க மாட்டா எண்டு தங்கையைத் தனி அறைக்கு அழைத்துச் சென்று காட்டினேன். பார்த்தவள் "ஐயோ அத்தான் இப்படி எல்லாம் செய்வாரா?" என்று கேட்டவள் "அக்கா உனக்குத் தெரியும் தானே அத்தானின் ஒன்று விட்ட தம்பியார் வெளி நாட்டில் வேலை பார்க்கிறார். அவரைத் தான் எனக்குப் பேசி வைச்சிருக்கு. அவர் லீவுக்கு வர எங்களுக்குக் கலியாணம். நீ இப்ப பிரச்சினை எழுப்பி னால் என்ரை கலியாணம் பிரச்சினையாகிப் போகும். கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்." என்றாள். உயிராகப் பழகிய தங்கை இவ்வளவு சுயநலமாய் இருக்கிறாளே எண்டு நினைக்க என்ரை இதயமே நொருங்கிப் போச்சு. இந்த உலகத்தில் எல்லாருமே சுயநலவாதிகள் என்பது என் மண்டையில் உறைத்தது.

ஒன்றும் பேசாமல் எங்கள் வீடு திரும்பினேன். எனது ஆதரவற்ற நிலையை எண்ணி இனி வாழ்வதில் அர்த்தமில்லை எண்ட முடிவுக்கு வந்தேன். தங்கையின் கலியாணம் என்னால் தடைப்படுவதை நான் விரும்ப வில்லை. அவளது கலியாணத்தில் என் கவலையைக் காட்டாமல் கலந்து கொண்டேன். அடுத்த நாள் தங்கை கை நழுவிப் போன கோபத்தில் என்னை அடித்து நொருக்கினார். அடி தாங்க முடியாமல் பிள்ளையையும் தூக்கிக் கொண்டு வீதிக்கு ஓடினேன். தூரத்தில் ஒரு லொறி மிக வேகமாக வருவதைக் கண்டேன். லொறி கிட்ட வர நான் ஓடிப்போய் விழப் பார்த்தேன் . இரண்டு வலிய கைகள் பின்னாலிருந்து என்னைப் பிடித்து நிறுத்தின. மிகவும் கோபத்துடன் திரும்பிப் பார்த்தேன், சத்தியன்! அவனை எனக்குப் பழக்கமில்லை. அயல் வீடுகளில் கூலி வேலை செய்பவன். அவன் "அம்மா கடவுள் தந்த உயிரை எடுப்பது பாவம்." என்றான். "உனக்கென்ன தெரியும் நான் படும் பாடு" என்று விரக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாய் பதில் சொன்னேன். "அம்மா நீங்கள் இப்ப கோப மாய் இருக்கிறீங்கள். வீட்டிற்குப் போய் ஆறுதலாய் யோசித்துப் பாருங்கள்." என்றவன் நான் மகனுடன் வீட்டிற்குள் நுழையும் வரை நிண்டு பார்த்து விட்டே போனான்.

இப்போது சத்தியனை அடிக்கடி கண்டேன். எனது கஷ்டங்களை அவனுக்குச் சொல்லும் அளவிற்கு அவன் மீது ஏதோ நம்பிக்கை வந்தது. ஒரு நாள் சத்தியன் "அம்மா நீங்கள் ஏன் என்னுடன் வரக்கூடாது நான் உங்கள் பிள்ளையை கவனமாகப் பார்ப்பேன்." என்று திடீரென்று கேட்டான். நான் தடுமாறி விட்டேன் "நான் யோசிக்க வேணும்." எண்டு சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றேன். "நான் என்ன குற்றம் செய்தேன், என்ரை பிள்ளை என்ன பாவம் செய்தான்? சத்தியன் கூலிக்காரன், படிக்காதவன். படிச்ச என்ரை புரிசன் மட்டும் என்ன திறம்? நாங்கள் ஏன் அவனிடம் தினமும் அடிபட்டுச் சாக வேணும்? சத்தியனுடன் போனால் என்ன?" எண்டு யோசித்தேன்.

சத்தியனிடம் என் சம்மதத்தைச் சொன்னேன். அவன் "அம்மா இரண்டு நாள் பொறுத்துக் கொள்ளுங் கள்" என்றான். மூன்றாம் நாள் இரண்டு மலிவான சேலை களையும் சட்டைகளையும் பிள்ளைக்கு இரண்டு சோடி கால்ச்சட்டை சேர்ட்டுகளையும் கொண்டு வந்து தந்தான். ஒரு சோடி மலிவான தோடுகளையும் அவற்றுடன் தந்தான். அம்மா "நீங்கள் நாளைக்குக் காலமை உங்கடை நகைகளை எல்லாம் கொண்டு போய் உங்கடை அம்மாட்டைக் கொடுங்கோ. முகத்திலை கவலையைக் காட்டாமல் "இவர் ஒவ்வொரு இரவும் நேரஞ்செல்ல வாறார். இப்ப கள்ளர் பயமாயிருக்கு" என்று சொல்லிக் கொடுத்து விடுங்கோ. இரவு அவர் நித்திரையான பிறகு இந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு பிள்ளையுடன் கேற்றடிக்கு வாருங்கள். நான் உங்களைப் பாதுகாப்பான இடத்திற்குக் கூட்டிப் போவன்." என்றான்.

மறுநாள் அம்மா வீடு போன நான் "அம்மா இப்ப கள்ளர் பயம் கூடுதலாய் இருக்கு. இந்த நகைகள் கொஞ்ச நாளைக்கு இஞ்சை பாதுகாப்பாய் இருக் கட்டும்." என்றேன். அம்மாவும் "அதுவும் சரி தான்." என்று வாங்கிப் பாதுகாப்பாகப் பூட்டி வைத்தா. இவர் படுத்து நித்திரை ஆனதும் நான் சத்தியன் தந்த சேலையைக் கட்டி, அவன் தந்த தோட்டையும் போட்டுக் கொண்டு, பிள்ளைக்கும் அவன் தந்த கால்ச் சட்டை சேர்ட்டைப் போட்டுக் கொண்டு பிள்ளையைத் தூக்கிக் கொண்டு கேற்றடிக்குச் சென்றேன். அங்கே சத்தியன் எங்களை அழைத்துச் செல்ல ஆயத்தமாய் நின்றான்.

சத்தியன் குறுக்கு வீதி வழியே எங்களை அழைத்துச் சென்றான். இரண்டு பஸ்ஸெடுத்து நாகம என்ற ஊருக்கு கூட்டிச் சென்றான். நான் படபடப்புடன் அவனைப் பின் தொடர்ந்தேன். அங்கே அவனுக்குத் தெரிந்தவர்கள் வீட்டில இரவு வரை தங்கினோம். இரவு யாழ்ப்பாண மெயில் றெயினில் மன்னார்ப் பெட்டியில் ஏறி இருந்து கொண்டோம். மெயில் றெயின் மன்னார்ப் பெட்டியை மதவாச்சியில் கழற்றி விட்டுச் சென்றது. எங்கள் பெட்டியில் லைற் எல்லாம் அணைந்தது மனதிற் குத் திகிலாக இருந்தது. சில மணி நேரத்தின் பின் மன்னார் மெயில் வந்து எங்கள் பெட்டியையும் இணைத்தது. விளக்குகள் பழையபடி எரிய பயம் கொஞ்சம் குறைந்தது. முருங்கன் ஸ்ரேசனில் நாங்கள் இறங்கினோம். அங்கே பஸ்ஸில் ஏறி மன்னார் நகரத்திற்குப் போகாமல் அதற்கு முன்னால் உள்ள தள்ளாடி என்ற இடத்தில் இறங்கினோம். அங்கு பஸ் எடுத்துத் திருக்கேதீஸ்வரம் கோவிலெடியில் இறங்கி னோம். எங்கள் குடும்பத்தவர்களின் செல்வாக்கை சத்தியன் நன்கு அறிந்து வைத்திருந்தான். அவர்கள் இலங்கையின் பிரதான பொலிஸ் ஸ்ரேசன்கள் எல்லா வற்றிற்கும் தகவல் கொடுத்திருப்பார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். பிடிபட்டால் அவன் நிலமையும் முக்கியமாக என்ரை நிலமை என்னவாகும் எண்டு நினைக்கவே ஈரக்குலை நடுங்கியது.

திருக்கேதீஸ்வரத்தில் பஸ் எடுத்துப் பூநகரி வாடியடி என்ற இடத்தில் இறங்கினோம். வாடியடியில் பஸ் எடுத்துப் பரந்தனுக்கு முன்னால் இருக்கும் பெரிய பரந்தனில் இறங்கினோம். பெரியபரந்தனில் இருந்த விதானையாரின் கமத்தில் சத்தியன் சில காலம் வேலை செய்திருந்தான். விதானையாருக்குச் சத்தியனில் நல்ல பிடிப்பு. சத்தியன் விதானையாரிடம் என்னைப் பற்றித் தனியாகக் கதைத்தான். விதானையார் பிரச்சினை அடங்கும் வரை தனது கமத்து வீட்டில் தங்கும் படியும் அதற்கு முன் எனக்குத் தாலி கட்டும் படி கூறினார். அடுத்த நாள் விதானையாரும் மனைவியாரும் எங்களைச் சாமி அறையில் இருத்தி, கோவிலில் வைத்து எடுத்து வரப்பட்ட மஞ்சள் கயிற்றைச் சத்தியனைக் கொண்டு எனது கழுத்தில் கட்டுவித்தார். சத்தியன் விதானையாரின் கமத்தில் கடுமையாக உழைத்தார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாபுவுடன் விளை யாடுவார். நானும் பாபுவும் அடி உதைப் பயமின்றி நித்திரை கொள்ள ஆரம்பித்தோம்.

சத்தியன் உழைத்த பணத்தில் ஒரு சைக்கிளை வாங்கினார். ஒவ்வொரு சனிக்கிழமையும் கூடுகின்ற கிளிநொச்சிச் சந்தைக்குச் சைக்கிளில் சென்று எங்களுக்கு மரக்கறிகள் வாங்குவதோடு விதானையார் வீட்டிற்கும் வாங்கி வருவார். கிளிநொச்சிச் சந்தையில் சனங்கள் ஐம்பத்தைந்தாம் கட்டையில் காடு வெட்டுவதைப் பற்றி அறிந்தார். விதானையாரின் கமத்தில் வேலையில்லாத நாட்களில் விதானையாரிடம் சொல்லி விட்டுச் சத்தியன் தானும் இரண்டு ஏக்கர் காட்டை வெட்டத் தொடங் கினார். அரசாங்கக் காட்டை வெட்டியவர்களைப் பொலிஸார் கைது செய்த போது சத்தியனும் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் இரண்டு ஏக்கர் அர சாங்கக் காட்டை வெட்டியதற்கான குற்றப் பணத்தைச் செலுத்தி விடுதலையானார்.

விதானையார் காணிக் கச்சேரி நடக்கப் போவதாகவும் படிவத்தை நிரப்பி அனுப்பும் படியும் சொல்லச் சத்தியனும் அனுப்பி வைத்தார். காணிக் கச்சேரியில் குற்றப் பணம் செலுத்திய பற்றுச் சீட்டைக் காட்ட அதிகாரிகள் அந்த இரண்டு ஏக்கர் காணியையும் திருத்திப் பயிர் செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தைச் சத்தியனுக்கு வழங்கினர்.

இரண்டு ஏக்கர் காணியில் ஒரு ஏக்கர் மேட்டுக் காணியாகவும் மிகுதி பள்ளமாகவும் இருந்தது. சத்தியன் மேட்டுக் காணியை தோட்டச் செய்கைக்கும் பள்ளக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியை வயல்களாக வரம்புகள் கட்டி நெற் செய்கைக்கும் பயன்படுத்தினார். காணியின் நாலு பக்கமும் அலம்பல்வேலி போட்டு தோட்டம் செய்ய ஆரம்பித்தார். அயலில் உள்ளவர்கள் கொட்டில்கள் போட்டுக் கொண்டு தங்கள் குடும்பங்களையும் கொண்டு வந்து விட்டனர். சத்தியனும் ஒன்று பெரிய தும் மற்றது சிறியதும் ஆக இரண்டு கொட்டில்கள் போட்டு தடிகளை வரிச்சுகளாகக் கட்டி மண்சுவர் வைத்து, கிடுகுகளால் வேய்ந்து மக்கள் இருக்கக் கூடிய தாக அமைத்தார். ஒரு நல்ல நாளில் விதானையாரிடம் கூறிவிட்டு வந்து குடியேறினோம். முதலில் வந்தவர்கள் கல் வீடுகளைக் கட்டிக் கொண்டனர். கிராமம் முன்னேறிய கிராமமாக மாறியது. பாடசாலையும் வந்தது. எனது பிள்ளைகள் இருவரும் இங்கு ஓ எல் வரை படித்தனர். பாபு அயல் பாடசாலையில் படித்து ஏ எல் எடுத்தான். கம்பஸ் கிடைக்கேல்லை. தகப்பனுக்கு மேலும் கஷ்டம் குடுக்கக்கூடாது என்று ஒரு என் ஜி ஓவிற்கு வேலைக்குப் போறான். மேனகா இங்கு ஓ எல் பாஸ் பண்ணியவள் ஏ எல்லை பெண்கள் கல்லூரியில் படிக்கிறாள். தகப்பனும் தமையனும் அவள் சொல்லைத் தட்ட மாட்டினம். நாங்கள் எங்கடை பாட்டிலை வாழுறம். ஆனால் இந்த "ஓடி வந்தவள்" என்ற பழிச் சொல் மட்டும் மாறுதில்லை." என்று றொசலின் தன் கதையைச் சோகமாக சொல்லி முடித்தாள்.

ரீச்சர் "றொசலின் உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாது. நாங்கள் பிழைவிடாத போது நாங்கள் யாருக்கும் பயப்படத் தேவை இல்லை." என்றா. றொசலின் என்ன பாடு பட்டிருக்கிறா என்று கவலைப்பட்ட ரீச்சர் அடுத்த நாள் காலமை முதல் வேலையாக கமலம் அக்காவைக் கூப்பிட்டு றொசலினின் கதையைக் கூறினா. கமலம் அக்கா "ஐயோ உண்மை தெரியாமல் றொசலினுக்கு நாங்கள் பிழை விட்டு விட்டோமே!" என்று சொல்லிக் கவலைப்பட்ட அதே நேரம் ஒரு நீளமான வெளிநாட்டுக் கார் வந்து அவவின் வீட்டின் முன்னால் நின்றது. றைவரும் அவர் பக்கத்தில் ஒருவரும் பின் சீற்றில் இரண்டு பெண்களும் இருந்தனர். றைவர் அருகே இருந்தவர் வெளியே தலையை நீட்டி "மெடம், இங்கை சத்தியன் என்பவரின் வீடு எது? நாங்கள் றொசலினின் அண்ணன்மார்." என்று கேட்டார். கமலம் அக்கா வெளியே போய்ச் சரியான பாதையைக் காட்டி விட்டா. அவர் "தாங்க் யூ மெடம்" என்று சொல்லி விட்டுத் தலையை உள்ளே எடுக்க கார் சத்தியன் வீட்டிற்கு முன்னால் போய் நின்றது.

சத்தியனின் வீட்டிற்கு முன்னால் போய்க் கார் நிற்க அயல் வீடுகளிலிருந்து குஞ்சும் குருமானுமாய் சிறுவர்கள் காரைச் சூழ்ந்து கொண்டனர். அண்ணன்மாரும் அண்ணிமாரும் காரை விட்டு இறங்கினர். காணியைச் சுற்றி வேலிக் கரையில் ஆளுயரத் தென்னை மரங்கள் நின்றன. ஒரு பக்கத்தில் ஐந்தாறு மாமரங்களும் சில வாழைகளும் நின்றன. இன்னொரு பக்கத்தில் நிலக் கடலைச் செடிகளும் உழுந்துச் செடிகளும் பூத்தபடி நின்றன. ஒரு பெரிய கொட்டிலும் ஒரு சிறிய கொட்டிலும் வீடாகவும் குசினியாகவும் பயன்படுத்தப் பட்டிருந்தன. தூரத்தில் ஒரு கொட்டிலில் உயரத்தில் கட்டப்பட்ட இலை குழைகளைச் சாப்பிட்டுக் கொண்டு ஒரு கிடாய் ஆடும் இரண்டு மறி ஆடுகளும் நின்றன. அருகே நிலத்தில் கட்டப்பட்ட ஒரு கோழிக்கூடு திறந்த படி இருந்தது. அங்காங்கே சில கோழிகள் எதையோ கிழறி மேய்ந்தன.

பார்த்த அண்ணன்மார் பெருமூச்சு விட்டனர். பெரிய அண்ணன் "எப்படி இருக்க வேண்டியவள் இப்படி இருக்கிறாள்." என்றார். பெரிய அண்ணி "அவள் அடி உதை இல்லாமல் இருக்கிறாள். சத்தியன் நல்ல மனிதர் மட்டும் அல்ல கடும் உழைப்பாளியாயும் இருக்கிறார்." என்றா. அப்போது பெரிய கொட்டில் கதவைத் திறந்து கொண்டு றொசலின் பாபுவுடனும் மேனகாவுடனும் வந்தாள். தமையன்மாரைக் கண்டதும் "அண்ணா" என்றவள் மேலே கதைக்க முடியாமல் அழத் தொடங்கினாள். அண்ணிமார் ஓடிப் போய் றொசலினையும் மேனகாவையும் அணைத்துக் கொண்டனர். மாமன்மார் பாபுவைக் கட்டி அணைத்தனர். பின்னுக்கு வேலையாய் நின்ற சத்தியன் கை கால்கள் கழுவிச் சால்வையால் துடைத்தபடி அவர்களை நோக்கி வந்தார்.

பெரிய அண்ணா "றோஸ், நீ நகைகளைக் கழற்றி வைச்சிட்டு மலிவான உடுப்போடை போனது தெரிந்ததும் உனக்கு எங்கள் மீது எவ்வளவு வெறுப்பு இருந்திருக்கும் என்பது எங்களுக்கு விளங்கியது, நாங்கள் எவ்வளவு பிழை விட்டு விட்டோம் என்று புரிந்து கொண்டோம்." என்று கண்கலங்கினார். சின்ன அண்ணி "கொஞ்ச நாள் அவன் உன்னைத் தூற்றித் திரிந்தான். பிறகு இன்னொரு கலியாணம் செய்தான். ஒரு வருசம் ஆக முன்னம் அவளும் ஓடிவிட்டாள். இப்ப ஒருத்தியைச் சேர்த்து வைச்சிருக்கிறான். அவள் பொல்லாதவள், அவனை இருத்தி எழுப்புறாள். கடையும் நட்டமாய்ப் போச்சு, அவனுக்கும் கடுமையான வருத்தம். கடையின் கீழ்ப் பகுதியை வாடகைக்குக் கொடுத்திட்டு அவன் மேல் மாடியில் இருக்கிறான், வாடகையிலை தான் சீவியம்." என்றா. றொசலின் இது ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

சின்ன அண்ணன் "றோஸ் அம்மா கடும் சுகயீனமாய் இருக்கிறா, கடைசியாய் உன்னைப் பார்க்க ஆசைப் படுறா. நீங்கள் குடும்பமாய் வந்து அம்மாவைப் பார்க்க வேணும்." என்று வந்த நோக்கத்தைச் சொன்னார். சின்ன அண்ணி "றோஸ், தங்கச்சி வெளிநாடு போன பிறகு அவன் உன்னையும் பாபுவையும் சிகரெட் நெருப்பால் சுட்ட கதையைச் சொன்னவள்." என்றா. அது வரை பொறுமையைக் காத்த றொசலின் "அப்ப எல்லாம் தெரிஞ்ச அம்மாவிற்கு இப்ப தான் என்னைப் பார்க்க மனசு வந்ததா?" என்றவள் "எனக்கு அம்மா எண்டு யாரு மில்லை, நீங்கள் போட்டு வாங்கோ." என்று கைகளைக் கூப்பினாள்.

பெரிய அண்ணர் சத்தியனிடம் "நீங்கள் என்றாலும் சொல்லி றோஸை அனுப்பி வையுங்கோ." என்றார். சத்தியன் "என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ, நான் அவவின்ரை விருப்பத்திற்கு மாறாய் ஒன்றும் சொல்வதில்லை." என்றார். இதுவரை அமைதியாய் பார்த்துக் கொண்டிருந்த மேனகா "உங்களைப் போலை கடின மனம் படைத்தவர்களாக எங்கடை அப்பா எங்களை வளர்க்கவில்லை. அம்மா வருவா, துணைக்கு அண்ணாவும் வருவான். பார்த்து விட்டு மறுநாள் அம்மாவும் அண்ணாவும் திரும்பி வந்து விடுவார்கள்." என்று பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தாள். அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லைக் குடும்பத்தில் யாரும் மீறுவதில்லை. சத்தியன் அறைக்குள் சென்று கசங்கிய தாள் காசுகள் உள்ள கட்டு ஒன்றைக் கொண்டு வந்து பாபுவிடம் கொடுத்தார். "தம்பி, அம்மா தாயாரைப் பார்த்ததும் அடுத்த நாள் றெயினில் திரும்பி வந்து விடுங்கள்." என்றார்.

தமையன்மார் முன்னுக்கு இருக்க, றைவர் சீற்றுக்குப் பின்னால் அண்ணிமார் இருக்க, றொசலினும் பாபுவும் கடைசி சீற்றில் இருக்க கார் புறப்பட்டது. சத்தியனும் மேனகாவும் கார் மறையும் வரை றொசலினையும் பாபுவையும் பார்த்துக் கை அசைத்துக் கொண்டே இருந்தார்கள். கார் அம்மா வீடு போய்ச் சேர ஏழு மணி ஆயிற்று. றொசலின் அண்ணிமாருடன் அம்மாவைப் பார்க்கச் செல்ல பாபு மாமன்மாருடன் பின்னால் சென்றான். றொசலினைக் கண்ட தாய் அவளின் கையை எட்டிப் பிடித்து "றோஸ் வந் திட்டாயா?" என்று முனங்கினா. றொசலின் தாயாரின் கையைப் பிடித்த படி அருகில் இருந்த கதிரையில் இருந்தாள். பாபு தாயாரின் தோளில் கை வைத்தபடி நின்றான். அம்மாவின் கணகளில் முதலில் றொசலினைக் கண்ட மகிழ்ச்சி தென்பட்டாலும் பின்னர் மனமுருகி அழுதா.

றொசலினும் பாபுவும் தங்களுக்கு ஒதுக்கப் பட்ட அறைக்குப் போய் கை கால் கழுவிச் சாப் பிட்டனர். சாப்பாட்டு மேசையிலிருந்து சாப்பிடும் போது றொசலினுக்கு தாங்கள் சிறுவயதில் எல்லோரும் ஒன்றாகச் சாப்பிட்ட அந்தச் சந்தோசமான நாட்கள் நினைவிற்கு வந்தது. சாப்பிட்ட பின் பாபுவை அறையில் படுக்க விட்டு விட்டு றொசலின் தாயாரின் அருகே சென்று அவரின் கையைப் பிடித்தபடி இருந்தாள். பத்து மணியளவில் தாயாரின் கை சோர்ந்து விழ றொசலின் ஓவென்று அழுதாள். அண்ணன்மார் அண்ணிமார் ஓடி வந்து பார்த்து மகளுக்காக காத்திருந்த அவரின் உயிர் நிம்மதியாகப் பிரிந்திருந்ததைக் கண்டனர். டாக்டர் வந்து பரிசோதித்து உறுதிப்படுத்தினார். நோய்வாய்ப் பட்டிருந்த அவரை மறுநாளே அடக்கம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன.

குடும்பத்தவர்களுடன் றொசலினும் பாபுவும் அம்மாவின் அடக்க நிகழ்வில் கலந்து கொண்டனர். அன்று இரவு இரண்டு அண்ணிமாரும் இரண்டு பெட்டிகளுடனும் ஒரு சூட்கேசுடனும் றொசலினின் அறைக்குச் சென்றனர். "றோஸ், இவை உங்கடை சொத்து, இந்தப் பெட்டியில் உங்கடை நகைகளி ளிருக்கு. மற்றப் பெட்டியில் கொஞ்சக் காசு இருக்கு, சூட்கேசில் உங்கள் நாலு பேருக்கும் உடுப்புகள் இருக்கு." என்றனர். "அண்ணி, இதைக் கொண்டு போனால் அது நான் சத்தியனுக்குச் செய்கிற துரோகமாயிருக்கும். நாங்கள் தொடக்கத்தில் கஷ்டப்பட்டம் தான். இப்ப சத்தியனுடைய உழைப்பால் நாங்கள் நல்லாய் இருக் கிறம். உது ஒன்றும் வேண்டாம், கொண்டு போங்கோ. யாரும் செத்த வீட்டிற்கு வரும் ஆக்கள் எதையும் கொண்டு போனால் எனக்கு இப்ப இருக்கிற "ஓடிப் போனவள்" எண்ட பட்டத்தோடை "திருடி" எண்ட பட்டமும் வந்திடும். தயவு செய்து கொண்டு போங்கோ" என்று உறுதியாக கூறி விட்டாள். அண்ணிமாரும் வேறு வழி இல்லாமல் எடுத்துக் கொண்டு போனார்கள்.

அடுத்த நாள் றொசலினும் பாபுவும் போக வெளிக்கிட, தூரத்து உறவினன் ஒருவன் "பாபு உன்ரை அப்பா ஒருக்கா உன்னைப் பார்க்கோணும் எண்டவர்." என்றான். பாபுவிற்குக் கோபம் சிலிர்த்துக் கொண்டு வந்தது. "எனக்கு இஞ்சை அப்பா எண்டு ஒருத்தனும் இல்லை. என்னை மாரிலும் தோளிலும் போட்டு வளர்த்துப் பள்ளிக்கூடத்திற்கு ஏத்தி இறக்கிய என்ரை அப்பா வன்னியில் இருக்கிறார்." என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

அடக்கம் செய்து எட்டு நாள் வரை அண்ணன் மார் வீட்டை விட்டு வெளிக்கிட ஏலாது என்று றொசலினுக்குத் தெரியும். பஸ்ஸில் போக வெளிக்கிட அண்ணியின் தம்பியார் ஒருவன் தான் காரில் ஏற்றிக் கொண்டு போய் விடுவதாகக் கூறினான். இருவரும் காரில் ஏறப் போக தட்டுத் தடுமாறி நடந்து வந்த றொசலினின் தந்தை கண் கலங்கிய படி இருவரையும் கட்டி அணைத்து "றோஸ் , என்ரை செத்த வீட்டிற்கு நீங்கள் குடும்பமாய் வருவீங்கள் தானே!" என்றார். இவர்களைக் காரில் ஏற்றிச் சென்ற அண்ணியின் தம்பி கோட்டை ஸ்ரேசனில் றெயினுக்கு ரிக்கெற் எடுத்து ஏற்றி விட்டான்.

மதியம் கிளிநொச்சி ஸ்ரேசனில் றொசலினும் பாபுவும் இறங்க சத்தியனும் மேனகாவும் அவர்களை ஏற்றிச் செல்ல ஆயத்தமாய் நின்றனர். றொசலினுக்கு எல்லாம் கனவாகத் தோன்றியது. அவளது குடும்பத்தவர் கள் சுய நலமாக நடந்த போதும் வந்து ஏற்றிச் சென்றதின் மூலம் "ஓடிப் போனவள்" என்ற பழிச் சொல் நீங்கியது என்று நிம்மதி அடைந்தாள்.



கி.பவானந்தனின் மூன்று நூல்கள் வெளியீட்டுவிழா 06.07.2024 அன்று அல்வாயில் திரு க.பரணீதரன் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையை திரு மு.அநாதரட்சகனும் வெளியீட்டுரையை திரு கொற்றை பி.கிருஷ்ணானந்தனும் நிகழ்த்தினார்கள். கருத்துரைகளை திரு இ.இராஜேஸ்கண்ணன். திரு.த.அஜந்தகுமார். திரு சி.விமலன். திரு சிவ.ஆரூரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். ஏற்புரையையும் நன்றியுரையையும் கி.பவானந்தனின் மூத்த புதல்வர் ப.ஜெயந்தன் நல்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரையின் ஆபிரிக்கப் புதினங்கள்

ஏ.பீர் முகம்மது

எஸ்பொ என பரவலான அறிமுகத்தைப் பெற்ற எஸ்.பொன்னுத்துரை இலக்கியத் தளத்தி லும் கல்விப்புலத்திலும் நீண்ட நெடுங்காலம் பணிபுரிந்தவர். 1959 இல் ஆசிரியராக இணைந்த அவர் பின்னர் அதிபராக ஆசிரிய ஆலோசகராக நூலாக்க எழுத்தாளராக பாடநூல் சபை உறுப் பினராக என்று பல பதவிகளால் நிமிர்ந்தவர். பல்வேறு சவால்களுக்களுக்கு மத்தியிலும் கல்விப் புலத்தில் தனக்கான பிரமாண்டத்தைக் கண்டு மகிழ்ந்தவர். ஆயினும் நாட்டிலிருந்து வெளியேறி நைஜீரியா செல்லும் சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டது.

ஆபிரிக்கக் கண்ட நாடுகளிடையே நைஜீரியா தனித்துவமும் மக்கள் பலமும் பொருளாதார பலமும் கொண்ட நாடு. ஐநூறுக்கு மேற்பட்ட இனக் குழுமங்கள் அங்கு வாழு கின்றன. ஒவ்வொரு இனமும் தங்கள் இனத்துக் கென தனித்துவமான மொழிகளைக் கொண்டுள்ளது. முஸ்லிம்களும் கிறிஸ்தவர் களும் பெரும்பான்மையினர். ஆங்கிலம் தேசிய மொழியாக இருக்க வணிக மொழியாகவும் அம்மொழியே பயன்பாட்டில் உள்ளது.

1981இல் நைஜீரியாவில் எஸ்.பொன்னுத் துரையின் புலம்பெயர் வாழ்க்கை ஆரம்பமானது. ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஒன்றில் நியமனம் பெற்று ஆபிரிக்க தேசத்து இலக்கியங்களை ஆங்கிலத்தில் கற்பித்தார். அந்த உழைப்பின் போது பெற்ற ஓய்விலே அத்தாங்கு கொண்டு மீன்களைப் பிடிக்கும் பாங்கிலே உலக இலக்கியங்களைத் தேடித்தேடி வாசித்தார். பிரசித்தம் பெற்ற ஆபிரிக்கப் புதினங்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிமாற்றம் செய்ய எண்ணம் கொண்டார்.

"மூலத்தின் முழுமையை பிறிதொரு மொழியில் பூரணமாகத் தரிசித்தல் சாலாது என்ற உண்மையை ஏற்றுக் கொண்டு அதேசமயம் மூலத்தின் வார்ப்பு முறையையும் தரிசன நெறியையும் சிதைக்காமல் இருப்பதுதான் மொழிபெயர்ப்புக்குரிய இலக்கணம் என்பது என் கட்சி" என்று மொழிமாற்று நடவடிக்கை தொடர்பில் 1969 இல் அவர் பிரசித்தப்படுத்திய வாக்குமூலம் காந்தி தரிசனம் என்ற நூலில் எழுத்தில் உள்ளது.

நைஜீரியாவின் எட்டு ஆண்டு கால வாழ்வுக்குப் பின்னர் நாடு திரும்பிய அவர் தடம் பதித்த ஆபிரிக்க இலக்கியப் படைப்புகள் என்ற தொடர் வரிசையில் பதினான்கு புதினங்களை அச்சில் கொண்டுவரத் துணிந்தார். பெரும் பொருள் இழப்பை எதிர் நோக்க வேண்டி வரும் என்ற நிலையிலும் அவர் பின்வாங்க வில்லை.

நைஜீரியா, எகிப்து, செனகல், கென்யா, கினி, தென்ஆபிரக்கா, சூடான் என ஆபிரிக்காவின் பல தேச நிலங்கள் அவர் தேர்வு செய்த புதினங்களின் களங் களாக ஆகியிருந்தன.

நகீப் மஃபூசி மற்றும் ஜே.எம்.கேற்சி போன்ற நோபல் பரிசு பெற்றவர்களின் நாவல்களோடு கமராலே, சீநுஆச்சுபோ, மையா கௌரோ, செம்பொன் ஒஸ்மான், என்கூவான் தியான் ஒ, யஸ்மினா ஹத்ரா போன்றவர் களின் புதினங்களும் மொழிபெயர்ப்புக்குள் வந்தன. இவற்றுள் வோலோ சொயின்கா என்பவரின் ஒரு நைஜீரிய நாடகமும் அடக்கம்.

அவர் மொழிமாற்றம் செய்த பதின்மூன்று நூல்களின் பட்டியல் இது.

01. கறுப்புக் குழந்தை
02. மக்களின் மனிதன்
03. மிரமார்
04. மானக்கேடு
05. நித்திரையில் நடக்கும் நாடு
06. ஹால
07. வண்ணத்துப் பூச்சி
08. மரணமும் மன்னரின் குதிரை வீரனும் (நாடகம்)
09. தேம்பி அழாதே பாப்பா
10. காபூலின் தூக்கணாங்குருவிகள்
11. ஜோங்கோ தெருவின் திரிகால ஞானி
12. பிள்ளைப் பராயம்
13. சாக்கே

கடைசி இரு நூல்களும் அச்சில் வந்ததாயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மவர்களிடையே அவை பகிரப்பட முன்னரே அவுஸ்திரேலியாவில் 2014 இல் அவரின் உயிர் பிரிந்தது.

எஸ்பொவின் ஆபிரிக்க இலக்கிய மொழி பெயர்ப்புகள் தொடர்பில் மேற்கிளம்பி வரும் சங்கதிகள் பல உள்ளன. எஸ்பொ சென்ற்.பெற்றிக்ஸ் கல்லூரி யிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி பெற்ற வேளையில் ஆங்கில இலக்கியப் பிரமாண்டங்களான மில்ரன், செக்ஸ்பியர் போன்றோரின் படைப்புகளையும் ஆங்கில இலக்கியத்தையும் கற்றார். அதன் மூலம் முதலாம் உலக இலக்கியத்தை தெளிவுற விளங்கிக் கொண்டார். 1947 இலிருந்து கம்யூனிச சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டவராக வாழ்ந்த அவர் இரண்டாம் உலக இலக்கியப் பிரபலங்களான லியோ டால்ஸ்டாய், மாக்சிம் கோக்கி ஆகியோரின் படைப்புகளில் மூழ்கித் திளைத்தார்.

மூன்றாம் உலகப் படைப்பாளியாக இருந்த அவர் 1980களில் இருந்து மூன்றாம் உலகின் ஆபிரிக்கக் கண்டத்துப் படைப்புகளைச் சுவைத்து மகிழ்ந்தார். எனவே எஸ்பொ மூவுலக இலக்கியங்களிலும் அநுபவம் பெற்றவர். இருண்ட கண்டம் என அழைக்கப்பட்ட ஆபிரிக்காவின் இலக்கியங்கள் நான்கு வகைத்து என்பதை அவர் நைஜீரியாவில் இருந்தபோது விளங்கிக் கொண்டார்.

(அ) ஆபிரிக்க வடபுலத்து நாடுகளான எகிப்து, சூடான் போன்ற மண்ணிலிருந்து வெளிவந்த அறபு மொழி இலக்கியங்கள்.

(ஆ) ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இருந்த நைஜீரியா, கென்யா போன்ற இடங்களிலிருந்து ஆங்கிலத்தில் வெளியான படைப்புகள். அவை ஆங்கிலோபோன் இலக்கியம் என அழைக்கப்பட்டன.

(இ) கமரூன், செனகல் போன்ற நாடுகள் பிரான்சின் குடியேற்றத்தின் கீழ் இருந்ததால் பிரான்சிய மொழியில் வெளியான பிராங்போன் இலக்கியம்

(ஈ) ஆங்கிலக் குடியேற்ற நாடுகளாயிருந்து சிறுபான்மையின ஆட்சி நடைபெற்ற சிம்பாப்வே போன்ற நாடுகள் சுதந்திரம் பெற்ற பின்னர் ஒருசேர வெளிவந்த கறுப்பு இனத்தாரின் இலக்கியங்களும் வெள்ளை இனத்தாரின் இலக்கியங்களும். இவற்றை யெல்லாம் உள்வாங்கி கருத்தூன்றி வாசித்தார். தனக்கென்று சில கருத்துக்களை உருவாக்கினார்.

ஆபிரிக்க நாடுகள் நம்மைப் போலவே அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்தவை. அடிமை வாழ்வில் கிடந்தவை. போராட்டத்தின் மூலம் சுதந்திரம் பெற்றவை. எனவே ஆபிரிக்க நாட்டு இலக்கியங்கள் நம்மவர் இலக்கியங்களைப் போலவே கோலம் பூண்டவை. எனவே அந்த இலக்கியங்கள் தமிழுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்று துணிந்தார்.

கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் சுதந் திரத்தின் பேற்றினையும் தலைமுறை தலைமுறையாக இழந்து விட்டோம் என்ற கருதிய ஆபிரிக்க இலக்கியப் படைப்பாளிகள் அவற்றை மீளப் பெறும்வகையில் ஆவேசத்துடன் இலக்கியத்தை அணுகினர். அந்த வகையில் சிறப்பான இலக்கியங்கள் வெளிவந்தன என்பதை விளங்கிக் கொண்டார்.

ஆங்கிலத்தில் எழுந்த எந்தவொரு இலக்கியத்தை விடவும் ஆபிரிக்காவின் பிராங்போன் இலக்கியம் மேன்மையானது என்பதை உறுதியாக நம்பினார். மேலும் மொழியாற்றலும் ஆங்கிலப் புலமை யும் அவரை வழிநடத்தின. அதனால் எஸ்பொவின் ஆபிரிக்க இலக்கிய மொழிமாற்றுச் செயற்பாடுகள் தமிழ் இலக்கியப் பரப்பில் பட்டு வேட்டி கட்டிப் பவனி வந்தன.

அவரது ஆபிரிக்க மொழிபெயர்ப்புவாண்மை பற்றிப் பலரும் விதந்து பேசிய நிலையில் சோற்றுப் பதமாக தமிழ் நாட்டு முனைவர் நா.நளினிதேவி என்பவர் மையா கௌரோவின் நித்திரையில் நடக்கும் நாடு என்ற நூலுக்கு வழங்கிய சான்று இது.

மூல நூல்களை மொழிபெயர்க்கும்போது ஆசிரியர் தம்நாட்டு நிகழ்வுகள் மனதில் நிழலாடுவதை தவிர்க்க இயலாத நிலையில் மூலம் வேறு மொழி பெயர்ப்பு வேறு என்று இலாது இரண்டறக் கலந்து நிற்பதற்கு வழி கோலியுள்ளது. இந்நூலைப் படித்து முடித்த பின்னும் உள்ளம் உறைந்து போன நிலையில் மீள இயலவில்லை எனின் அது ஆசிரியரின் இருமொழிப் புலமைச் சிறப்புக்கு உரியதாகும். (பக் 71 இலக்கியப் போராளி எஸ்பொ)

முனைவர் நளினிதேவிபோல் வேறு பலரும் எஸ்பொவின் ஆபிரிக்க மொழி மாற்று முயற்சிக்காக அவருக்கு பட்டுக் குஞ்சம் கட்டியுள்ளனர்.

ஆபிரிக்க புனைவுகள்மீதான எஸ்பொவின் ஊழியம் நமக்குக் கிடைக்கப் பெறாதிருப்பின் ஆபிரிக்கப் பெரும் நிலப்பரப்பில் விளைந்த வளமும் மேன்மையும் விழுமியமும் கொண்ட இலக்கியங்கள் சிலவேளை களில் நமக்குத் தெரியாமலே போயிருக்கும் என்பதை எவர்தான் மறுக்க முடியும்.

## அஞ்சலி : எஸ்.முத்துமீரான்



ஈழத்தின் முன்னோடி இலக்கியவாதி களில் ஒருவரான எஸ்.முத்துமீரான் இறை வனின் பாதங்களை அடைந்துள்ளார். சிறு கதைகள், வானொலிநாடகங்கள், கவிதை கள், கிராமியப் பாடல்கள், கிராமியக்கதைகள், முஸ்லிம் கிராமத்து பழமொழிகள், ஆய்வுகள் என்பவற்றை படைத்தவர். மறைவு வரையில் இலக்கிய உலகில் பயணித்து வந்தவர். இலக்கிய மாநடுகள் பலவற்றில் பங்குபற்றியவர். ஜீவநதியிலும் பல ஆக்கங்களைப் படைத்தவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

## அஞ்சலி : சுலைமா சமி இக்பால்



மாவனெல்லை கிரிங்கதெனியாவை வசிப்பிடமாகக் கொண்ட எழுத்தாளர் சுலைமா சமி இக்பால் இறைவனின் பாதங்களை சென் றடைந்துள்ளார். இவர் பல சிறுகதைகளையும் நூல்களையும் வெளியிட்டுள்ளார். இஸ்லாமிய உணர்வு, சமூக விழிப்புணர்வு மிக்க பல கதைகளை எழுதியுள்ளார். கலாபூஷணம் உட்பட பல விருதுகளை பெற்றவர். ஜீவநதியிலும் இவரது படைப்புகள் வெளி வந்தன. அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.சிவதர்சன்

# புதருக்குள் பூத்த புது றோஜா




என்றுமில்லாத மகிழ்ச்சி முகத்தில் கொட்டிக் கிடக்கப் பத்துவயதுச் சிறுமி போலத் துள்ளிக்குதித்த வாகினியைப்பார்த்த தாய் புஸ்பத்திற்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் அடி மனதில் ஒருவித பயமும் பதற்றமும் இருக்கத்தான் செய்தது.

“அவையள் எவ்வளவு கசப்பான அனுபங்களை எங்களுக்குத் தந்தவை எண்டு அவளுக்குத் தெரியாது தானே, அதுதான் இண்டைக்கு அங்க தனக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்குமெண்டதில இவ்வளவு நம்பிக்கையோடை இருக்கிறாள் போல” என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டவள் வாகினிக்கு அருகில் சென்று

அவளது தோளைத்தொட்டு

“பிள்ள... வாகினி நான் இப்படிச்சொல்லுறதால நீ என்ன நினைக்கிறியோ தெரியாது உண்மையைச் சொன்னா என்ன, நீ இண்டைக்கு அங்க தாரணீன்ட எழுத்துக்குப் போறது எனக்கு அவ்வளவு விருப்பமில்லை” என்று கவலை தோய்ந்த முகத்துடன் சொல்லி முடித்தாள்.

“அம்மா நீங்கள் நினைக்கிற மாதிரி அவள் அவேன்ட அப்பா அம்மா மாதிரியில்லை நாலு வருசம் நானும் அவளும் ஒரே றூம்ல ஒன்டாத்தானே இருந்தனாங்கள் அவளப்பத்தி எனக்கு எல்லாம் நல்லாத் தெரியுமம்மா”

“அது சரி பிள்ள அங்க நீங்கள் தனியாத்தானே இருந்தனீங்கள் அது வேற, இங்க அவேட சொந்தக்காரர் அதோட ஊர் சனங்கள் எல்லாம் வாற இடத்தில அவ உன்னய எப்படி நடத்துவினமோ தெரியாது”

“அம்மா நீங்கள் என்ன சொன்னாலும் நான் இன்டைக்குத் தாரணி வீட்ட போய்த்தான் தீருவன் அவள் என்னயக் கட்டாயம் வரச்சொன்னவள் அதோட எங்கட “ஃபிரண்ட்ஸ்” எல்லாரும் அங்க வருவினம் எவ்வளவு நாளைக்குப்பிறகு நாங்கள் எல்லாரும் “மீற்” பண்ணப்போறோம் தெரியுமா” என்று சுற்றுலாவுக்குச் செல்ல ஆயத்தமாகும் சின்னப்பிள்ளை போல கண்கள் விரிய முகமெல்லாம் பளபளக்கச் சொல்லி முடித்தாள் வாகினி.

இதற்கு மிஞ்சி புஸ்பத்தால் என்ன தான் செய்யமுடியும். பிள்ளையின் மகிழ்ச்சியைக் கலைக்க விரும்பாதவளாய், “சரி பிள்ளை நான் சொல்ல வேண்டியதச் சொல்லீட்டன். இனி உன்ர விருப்பம், ஆனா, இன்டைக்கு உன்ர பிறந்தநாளுமதுவுமா அங்க போய்ட்டு மனமுடைஞ்சுபோய் வந்து இங்கயிருந்து அழுதுகொண்டிராத. அதுகள என்னால பார்க்கேலாதெண்டுதான் உன்னயப் படிப்பிச்சு இந்த நிலமைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கன்”

என்று சொன்ன புஸ்பம் நேரத்தைப் பார்த்துவிட்டு “எனக்கு வேலைக்கு நேரம் போச்சுது சரசுவும் யோகமும் என்னப்பாத்துக்கொண்டு நிக்கப்போதுகள்”

“நீ சாப்பிட்டிட்டுப்போ, அங்க சாப்பாட்ட எதிர் பார்க்காத”

“அண்டைக்கு வருசத்துக்கெடுத்த புது சல்வார போட்டிட்டுப்போ”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காப்பும் சங்கிலியும் அடுப்படீக்க அந்தப்பேனீக்க கிடக்கு எடுத்துப்போட்டுக்கொண்டு போ"

"மற்றவைக்கு சமனா நீயும் அங்க நிக்கவேணும் சரியோ"

"வேறயென்ன கவனமாப் போட்டுவா நான் போட்டு வாறன்"

என்று சொல்லிவிட்டுத் தோட்டவேலைக்குச் சென்று விட்டாள்.

"சரியம்மா நீங்கள் கவனமாப் போட்டு வாங்கோ" என்று சொல்லிய வாகினியின் மனதில் தாய் கூறிய வார்த்தைகளும் பழைய நினைவுகளும் குழப்பத்தை ஏற்படுத்த அருகிலிருந்த திண்ணையில் குந்திய வாகினியின் மனம் ஐந்துவருடங்கள் பின்னோக்கி நகர்ந்தது.

அன்று வாகினி பல்கலைக்கழகம் சென்ற முதல் நாள் வெளிமாவட்டம் புது இடம் புது நபர்கள் என்ற பயம் மனதில் இருந்தாலும் தாரணியும் அங்கு வருகிறாள் என்று ஏற்கெனவே தெரிந்ததால் நீண்ட நாட்களின் பின்னர் அவளைப்பார்க்கப் போகிறேன் என்ற ஆர்வம் ஒருபுற மிருக்க அவள் மீண்டும் தன்னுடன் கதைப்பாளா என்ற ஏக்கமும் பாடசாலையில் ஆரம்பித்த நட்பு பல்கலைக் கழகத்திலும் தொடருமா என்ற எதிர்பார்ப்பும் மனதில் அலைமோத "ஒடிற்றோறிய" வாசலில் காத்து நின்றாள்.

நீண்ட நேரக்காத்திருப்பின் பின் சுற்றி நின்ற புது முகங்களிற்கு மத்தியில் தூரத்தில் நின்ற தாரணியைக் கண்டுவிடவே, அவளது மனம் சூரிய உதயத்தில் மொட்ட விழ்ந்த தாமரை போல மகிழ்ச்சியால் திளைத்தது.

வாகினிக்குத் தாரணி மட்டும் தெரிந்த முகம். தாரணிக்கும் அதே நிலைதான் என்பதை நடுக்காட்டில் தனித்துவிடப்பட்ட சிறுமி வழிதெரியாது முழித்துக் கொண்டு நிற்பதைப்போலச் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்த தாரணியின் பார்வையை வைத்தே அவள் அறிந்துவிட்டாள்.

ஆனால் "எப்படிக் கதைப்பது? ஒரு அற்ப விசயத் திற்காக. கிட்டத்தட்ட ஒரு வருசமாக் கதைக்கவே யில்லையே" என்ற குற்றவுணர்வு அவள் மனதில் ஊசியாய்க்குத்தியது.

ஊரிலே இருந்த பலருக்குச் சொல்லிச்செய்த தாரணியின் இருபத்தோராவது பிறந்த நாளிற்கு தனக்குச் சொல்லவில்லை என்பதற்காகத்தான் வாகினிக்கு அவள் மீது இவ்வளவு நாள் கோபம்.

உண்மையில் சொல்லாமல் விட்டது அவளின் அப்பாவும் அம்மாவும் தான் என்பதைப் பலதடவை தாரணியின் அண்ணன் திவாகர் வாகினிக்குச் சொல்லியும் ஏன் அவள் இதுவரை அவளுடன் கதைக்காமல் விட்டாள்?

கௌரவம் என்பது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இருக்கவேண்டியது தானே! அவர்களுக்கு இருப்பதைப் போல இவளுக்கும் இருக்கத்தானே செய்யும். இதனைத் தாண்டி இதுவரை அவளைச் சந்திப்பதற்கேற்ற சரியான சந்தர்ப்பங்கள் எவையும் அமையவில்லை என்பதும் ஒரு காரணம் தான்.

வாகினி தாரணியையே பார்த்துக்கொண்டு நிற்கிறாள். அப்போது எதேச்சையாகத் திரும்பிய தாரணி வாகினியைப் கண்டுவிடவே முகத்தில் புன்னகை பூக்க மெல்லிய சிரிப்பை உதிர்த்துவிட்டாள்.

எப்போது அவளோடு பேசலாம் அல்லது அவள் எப்போது தன்னுடன் பேசுவாள் என்று காத்திருந்த வாகினிக்கு அவளது புன்னகை, பசியோடு காத்திருந்த வனுக்கு அறுசுவை உணவு விருந்தாகக் கிடைத்தமாதிரி ஒரு சந்தோசம்.

பிறகென்ன அவள் தாமதித்தாலும் அவளது கால்கள் தாமதிக்கவில்லையே! தாரணியை நோக்கி நடந்தாள் அவளும் இவளை நோக்கி வந்தாள்

" "ஹை!" தாரணி யாரோட வந்தனி"

"அப்பாவோட தான் அவர் இறக்கீட்டுப் போயிட்டார், நீ யாரோட வந்தனி"

"நான் தனியத்தான் வந்தனான், சரி அதவிடு கொஸ்டலில ஒரு றூம்ல ரெண்டுபேர் நிக்கவேணுமாம் யாரோட நீ நிக்கப்போறாய்"

"நான் இன்னும் யாரோடயும் கதைக்கேல்ல நீயும் நானும் ஒரு றூம்ல நிப்பமா"

"எனக்கு ஓகே"

"அப்ப வா போய்க் கதைப்பம்" இப்படித்தான் மீண்டும் ஆரம்பித்தது அவர்களது நட்பு.

மீண்டும் பழைய நட்புக் கிடைத்த சந்தோசத் துடன் இரட்டிப்பு மகிழ்ச்சியாக விடுதியில் இருவருக்கும் ஒரே றூமும் கிடைத்தது. இந்த விசயம் வாகினியின் தாய்க்குத்தெரிந்திருந்தாலும் தாரணியின் தாய்க்கோ அல்லது தகப்பனுக்கோ தெரியாது. தாரணியும் அதைத் தெரியப்படுத்துவதில் அதிக நாட்டம் காட்டவுமில்லை.

வாகினியைவிடத் தாரணி கொஞ்சம் கலர் கூடத்தான், ஆனால் வாகினியைவிடக் கொஞ்சம் மொத்தம். தாரணியின் குண்டுக்கண்களும் சிரிக்கும்போது கன்னத்தில் விழும் குழியும் கொவ்வைப்பழம் போன்ற சிவந்த உதடும் பார்ப்பவர்களுக்கு அவள் ஒருமுறை சிரித்தால் இன்னொரு முறை மீண்டும் சிரிக்கமாட்டாளோ என்று ஏங்கவைக்கும் பேரழகுதான் அவள்.

ஒரு நாள் இரண்டுபேரும் காலை லெக்சருக்குப் போகும் போது ஒரு சீனியர் "பெடியன்" "ஏய் முட்டக் கண்ணு இங்க வாடீ" என்று தாரணியைக் கூப்பிட "வாகினி நீயும் வாடி" என்று வாகினியின் கையைப்பிடித்துக் கொண்டு நிற்க வாகினியும் தான் தாரணியுடன் போனாள்.

ஏற்கெனவே ஒரு தடவை அந்தப் "பெடியன்" தாரணியை "குண்டம்மா" என்று கூப்பிட்டதற்கு அவள் அழுதுகொண்டு நிற்க "மரியாதை இல்லாமற் கதைக்கிற இடத்தில நாங்கள் ஏன் நிப்பான் வா நாங்கள் போவம்" என்று வாகினி தான் கூட்டிக்கொண்டு போனவள்.

அன்றிலிருந்து "சீனியர்" பலருக்கு வாகினி மீது கோபம் அதனால் அவளை வாயாடி என்றுதான் அவங்கள் தங்களுக்குள்ளே சொல்லுறவர்கள்.

"வாயாடியும் வாறாளடா" என்று அந்தப்பெடியன் மற்றப்பெடியனுக்குச் சொன்னது தாரணியின் காதுக்கு மட்டுமல்ல வாகினியின் காதுகளிற்கும் கேட்கத்தான் செய்தது. ஆனால் வாகினி அப்போது அதைப்பொருட் படுத்தவில்லை.

இவர்கள் கொஞ்சம் கிட்டப்போனதும் "கறுப்பி நீ ஏன்டி வாறாய், உன்னய யார் கூப்பிட்டது, நீ போடீ" என்று அந்தப்பெடியன் சொல்ல. தாரணி வாகினியின் கையை இறுகப்பிடித்துக்கொண்டு

"உங்கட கலரையும் மூஞ்சயயும் போய் கண்ணாடீல பாருங்கோ அதுக்குப்பிறகு மற்றவயப்பற்றிக் கதையுங்கோ", என்று சொல்லிவிட்டு, "வாடி நாங்கள் போவம் இவை என்ன செய்யினம் பாப்பம்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக்கொண்டு வாகினியுடன் அவ்விடத்தைவிட்டு நகர்ந்துவிட்டாள்.

அன்று வாகினியால் நம்பவே முடியவில்லை. இது யார் தாரணியா? அவளா இப்படிக் கதைத்தவள்?

ஒருவர் மீதுள்ள அன்பு அவர் மற்றவர்கள் முன் அவர்பக்க நியாயங்களை விட்டுக்கொடுக்காமல் அவருக் காக வாதாடிப்பேசும் போது தானே புரியும்? வாகினிக்கும் அன்றுதான் புரிந்தது தாரணி தன்மீது வைத்திருந்த அதீத அன்பின் பெறுமதி.

உண்மையில்அவள் அப்படிக் கோபப்பட்டதை வாகினி ஒரு நாளும் பார்க்கவில்லைத்தான். யாரும் ஏதும் அவளைப்பற்றிக் குறையாய் சொன்னாலே அழுதுகொண்டு வருகிறவளுக்கு அன்று என்னென்று தான் அப்படியொரு துணிவு வந்ததோ தெரியவில்லை.

இப்படியாக இந்த "றாக்கிங்" பிரச்சினையால் ஒருவருடம் பல்கலைக்கழக வாழ்க்கையென்பது பல்கலைக் கழகத்தில் நிற்க முடியாமல் "கொஸ்டல்" வாழ்க்கையா கவே மாறிப்போனது.

"கொஸ்டல்" வாழ்க்கை! வீட்டில் ஆறு மணிக்கு எழும்பினவர்களுக்கு நாலு மணிக்கே எழும்பவேண்டிய நிலைமை, பொது "பாத்றும்", பிந்தி எழும்பினால் குளிக்க இடமில்லை, மூன்று வேளை "கன்டீன்" சாப்பாடு, "சீனியர் றாக்கிங்" தொல்லை இதெல்லாம் ஆரம்பத்தில் "கம்பஸ்" வாழ்க்கை வேண்டாமென்று அவர்களுக்கு வெறுப்பைக் கொடுத்தாலும்,

கரும்பின் நுனிப்பகுதியிலிருந்து அடிப்பகுதியைச் சுவைக்கும் போது கசப்பிலிருந்து இனிப்பு வருவதைப் போன்று,

காலம் போகப்போகச் சிங்கள மாணவர்களின் நட்புக்கள், சுற்றுலாக்கள், பிறந்தநாள் "பாட்டிகள்" எனப் பல்கலைக்கழக வாழ்வென்பது அவர்களுக்கு இனிக்கத் தொடங்கியது.

இரண்டாம் வருடத்தில் "கொஸ்டல்" வசதி இல்லாததால் வெளியே "றூம்" எடுக்கவேண்டிய நிலை வரவே "றூம்" தேடும் படலம் தொடங்கியது. அப்போது தான் பலதரப்பட்ட மனிதர்களின் பலவகைப்பட்ட புதிய முகங்களை அவர்களால் பார்க்க முடிந்தது அந்தச் சூழலால் வாகினியைவிட அதிகம் பாதிக்கப்பட்டவள் தாரணிதான்.

ஊரிலே மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் கேட்காமலேயே கிடைத்த அவளுக்கு புதிய மனிதர்கள் பார்த்த பார்வைகளும் கேட்ட கேள்விகளும் அவளுக்கு தூக்கிவாரிப் போட்டன.

இவ்வாறான பார்வைகளும் கேள்விகளும் அவளது கிராமத்தில் மேற்குப்பக்கத்திலிருந்து தாரணியின் வீட்டிற்கு வேலைக்கு வருபவர்களுக்கு நடப்பதுதான். ஆனால் அவை இன்று அவளுக்குமல்லவா நடக்கிறது?

இதனைத்தான் எமது மூதாதையர்கள் "தலையிடி யும் காய்ச்சலும் தனக்கும் வந்தால் தான் தெரியும்" என்று சொன்னார்கள்.

அவர்கள் வீடுதேடிச்சென்றவர்களில் பெரும் பாலானவர்களுக்குக் காசு மட்டும் தான் நோக்கமாக இருந்ததே தவிர தங்குகிறவர்களிற்குத் தேவையான வசதி வாய்ப்புக்களைச் செய்து கொடுப்பதில் எந்த வீட்டுக் காரரும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை.

எட்டுப்பத்து வீடுகளுக்குச் சென்று கடைசியில் கிடைத்தது தான் லீலா அன்ரியின் வீடு. ஒரு அறை, அறைக்குள் இரு படுக்கைகளைக்கொண்ட ஒரு கட்டில், படிப்பதற்கு ஒரு மேசை அவ்வளவு தான் தரப்பட்ட "புறப்பட்டி" இதற்குக் கண்டிசன்கள் மட்டும் ஏராளம்!

வாடகைக்காசு ஐந்தாம் திகதிக்கு முதல் தர வேண்டும்!

சுவரில் ஏதும் ஒட்டுதல், கீறுதல், ஆணி அடித்தல் கூடாது!

"றூமில" கத்திக் கதைக்கக்கூடாது!

ஆறு மணிக்குமுதல் றூமுக்கு வரவேண்டும்!

பத்து மணிக்குப்பிறகு "லைட்" போடக்கூடாது!

வீட்டின்ர முன் பாதை பாவிக்கக்கூடாது!

எங்கட தண்ணிப்பைப்பில தண்ணி எடுக்கக் கூடாது. இப்படி இன்னும் பல....

எல்லாக் "கண்டிசன்"களையும் கேட்டுக் கொண்டிருந்த தாரணியின் முகம் கடைசியாகச் சொன்ன "கண்டிசன்"களைக் கேட்டபோது கறுத்து விட்டது.

வாகினிக்கு முன்னால் "அன்ரி" அப்படிச் சொன்னால் அந்த வசனங்கள் தாரணியின் மனதில் குற்றவுணர்வை ஏற்படுத்தத்தானே செய்யும்.

இது மட்டுமா இப்படிப்பட்ட எத்தனை வசனங் களை தாரணியின் தாய் தகப்பனிடமிருந்து வாகினியின் தாய் கேட்டிருப்பாள். ஆனால் அவற்றையெல்லாம் ஒருநாளும் புஸ்பம் வாகினிக்குச்சொன்னதில்லை.

அவற்றையெல்லாம் எடுத்துச்சொன்னால் தாரணி புரிந்து கொண்டாலும் அவளின் தாய் தகப்பன் புரிந்து கொள்ளவா போகிறார்கள். அவர்கள் அப்படிப் புரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருந்தால் ஏன் அப்படிச் செய்யப் போகிறார்கள்?

காலையில் சமையல் மாலையில், சமையலுக்கான பொருட்களை வாங்குவதற்கு அருகில் உள்ள கடைக்குச் செல்வது, பின்னர் இரவு உணவைத் தயாரிப்பது, படிக்க வேண்டிய ஏதாவது இருந்தால் படிப்பது, அல்லது புத்தகங்கள் ஏதுமிருந்தால் வாசிப்பது, இரவு உணவை உண்பது பத்துமணிக்கு முதல் லைட் எல்லாவற்றையும் அணைத்துவிட்டுத் துங்குவது. இப்படித்தான் அவர்களது நாளாந்தச்செயற்பாடுகள் நகரும்.

ஒரே கட்டிலில் தான் இருவரும் தூங்கவேண்டு மென்ற நிலை! அது வாகினிக்கு ஒருவித குழப்பமான மனநிலையைக் கொடுத்தாலும் தாரணி ஒரு நாளும் அவள் தனக்கருகில் சரிநிகர் சமமாகப் படுத்திருப்பதைப்பற்றி எந்தவித விரும்பத்தகாத எதிர்வினைகளையும் காட்ட வில்லை.

சிலவேளைகளில் வாரத்தில் ஓரிரு நாட்கள் மாலை நேரத்தில் கோவிலுக்குப் போவதும் விடுமுறை நாட்களில் "பீச்" அல்லது "பாக்கிற்குப்" போவதுமாகச் சில வேளைகளில் அவர்களது "செடூள்" மாறுவதுமுண்டு அவ்வாறான நாட்களில் வெளியில் ஏதாவது கடைகளில் தான் இருவரும் சாப்பிடுவார்கள்.

அப்படிச் சாப்பிடும் போதெல்லாம் வாகினியிடம் காசு இருக்கிறதா இல்லையா என்றெல்லாம் தாரணி ஒருநாளும் யோசித்ததில்லை. பெரும்பாலும் தாரணிதான் பணம் கொடுப்பாள். அதைத்திருப்பிக்கூட ஒருநாளும் கேட்டதில்லை.

ஆனால் வாகினி தனக்குப் பணம் கிடைக்கும் போது அந்தப்பணத்தை ஏதோ ஒரு வகையில் சமையலுக் குத் தேவையான பொருட்கள் வாங்கியோ அல்லது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொரு நாள் சாப்பிடும் போதோ கொடுத்துவிடுவாள். தாயைப்போல முடிந்தளவு யாரிடமும் கடமைப்படக் கூடாது என்ற எண்ணம் அவள் மனதிலும் ஆழமாகப் பதிந்திருந்ததுதான் அதற்குக்காரணம்.

தாரணிக்கு நன்றாகச் சமைக்கத்தெரியாது. அதைப்பழக வேண்டுமென்பதிலும் அவள் அதிக நாட்டம் காட்டவில்லை. சமையல் எப்போதும் வாகினி தான் செய்வாள். ஆனால் சமையலுக்குத் தேவையான உதவிகள் எதுவென்றாலும் எந்தவித சலிப்புமில்லாமல் தாரணி செய்து கொடுப்பாள்.

இவ்வாறாகப் பல்கலைக்கழக விடுதியை விட்டு வெளியில் தங்கியபோது கிடைத்த மாலைநேர ஓய்வுகளும் இரவுநேரத்தனிமைகளும் ஒத்தாசையுடன் மேற்கொண்ட சமையல்களும் அவர்களது உறவை நெருக்கமாக்கினாலும் அவர்களது நட்பில் ஆழத்தை உருவாக்கியது, மூன்றாம் வருடத்தில் ஏற்பட்ட இந்தச்சம்பவம்தான்.

அன்று சனிக்கிழமை தாரணி அவளின் தாய்க்கு வருத்தமென்று வீட்டிற்குப்போவதற்காக முதல் நாளே அதற்கான ஆயத்தங்களைச் செய்துவிட்டுத் தூங்கச் சென்றவள் காலை எழுந்தபோது வாகினிக்குக் காய்ச்சல் அவளது உடம்பு சுட்ட சூட்டைப்பார்த்துவிட்டுப் பதறிப்போன தாரணி

"என்னடி உடம்பு இவ்வளவு கீற்றா இருக்கு என்னடி நடந்தது"

"எழும்பு நான் போய் பனடோல் வாங்கீட்டு வாறன்" என்று சொல்லிவிட்டுக் கடைக்குப் போனவள் திரும்பி வந்து,

"இந்தா இதைக்குடி" என்று பனடோலைத் கொடுத்துவிட்டு

"நான் வீட்ட போகேல அம்மாக்கு போன் எடுத்துச் சொல்லீட்டன்,

"நீ வெளிக்கிடு, "ஹொஸ்பிட்டல்" போவோம்"

என்று சொல்லி "பிறைவேற் ஹொஸ்பிட்டல்" ஒன்றுக்குக் கூட்டிக்கொண்டுபோய்க் காட்டியதுடன் வரும்போது ஒரு "நெஸ்டமோல்ட்" மா "ரின்", "கிறீம் கிறக்கர் பிஸ்கட்", "பிளேன் சோடா" என்று வாங்கி வந்து "உனக்கு என்னவேணுமெண்டாலும் கேள்" என்று சொல்லி கேட்டுக் கேட்டுக் கொடுத்ததுடன்,

மட்டுமல்லாமல் இரவு நேரத்தில் அவளது கட்டிலுக்கு அருகில் நிலத்தில் ஒரு பாயைப்போட்டுப் படுத்திருந்தவள் இரவிரவாக நித்திரையில்லாமல் வாகினி எழும்பும் போதெல்லாம் "என்ன வேணும் சொல்லு" என்று கேட்டுக் கேட்டுச் செய்து கொடுத்திருந்தாள்.

இப்படியொரு அன்பை எதிர்பார்த்திராத வாகினியின் மனம் புழுங்கிப்போய்விட்டது. தோழியென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும். ஆனால் எவ்வளவு வித்தியாசம் அவளுக்கும் அவளது குடும்பத்திற்கும்? என்று எண்ணியவள் மனதில் ஏதோவொரு திருப்திகண்டவளாய் திண்ணையில் இருந்து எழுந்தவள் அம்மன் கோவிலில் கேட்ட மணியோசையின் ஒலியைக்கேட்டு மணிக் கூட்டைப்பார்த்தாள்

"ஐயோ நேரம் பதினொரு மணியாச்சு பன்னிரண்டு மணிக்கெல்லோ எழுத்தெண்டு சொன்னவள் நேரம் போச்சு. கெதியா வெளிக்கிடுவம்" என்று எழுந்து சோப்பை எடுத்துக்கொண்டு கிணற்றடிக்குப்போனாள்.

வாகினியின் மனம் ஓரளவு தெளிவு பெற்றிருந்தாலும் தாய் புஸ்பத்தின் மனம் தெளிவு பெறவேயில்லை. எப்படித்தெளிவுபெறும் அவள் மனம்?

அவள் தான் இந்த ஊரில் இருந்து எவ்வளவோ விடயங்களைப் பார்த்தும் அனுபவித்தும் இருக்கிறாளே!

காலையில் நடந்த சம்பவம், அவளை வேலையில் முழுமையாக ஈடுபட விடவேயில்லை. அவளது மனம் செக்கு மாடு போல் வாகினி மீதே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

"பாவம் வாகினி, நாட்டில இருக்கிற நாலு நல்ல மனுசரைப்பார்த்திட்டு நாட்டில இருக்கிற எல்லோருமே நல்ல மனுசர் என்று நம்பிக் கற்பனை பண்ணக்கூடிய சின்ன வயசு" என்று மகளின் மீது பரிதாபப்பட்டாள்.

விட்டில் பூச்சி என்ற ஒருவகை வண்ணாத்துப்பூச்சி விளக்கு வெளிச்சத்தைப்பார்த்து அதில் ஈர்க்கப்பட்டு அந்த விளக்கின் நெருப்பிற்குள் விழுந்து உயிரை விட்டுவிடுமாம். என்னவென்று சொல்வது அந்தப் பூச்சியின் முட்டாள் தனத்தை. இதைப்பார்த்து சிரிப்பதா? அல்லது வருந்துவதா?

எந்தத்தாய்தான் தன் பிள்ளை அவமானப்படுவதை விரும்புவாள்?

பல தலைமுறைகளாக வாழ்ந்த அவளுக்குத்தானே தெரியும், வாகினி யார் தாரணி யார் என்பது! வாகினியின் வீடும் தாரணியின் வீடும் நெடுந்தூரத்திலொன்றுமில்லை. ஒரே கிராமம் தான் ஆனால் பகுதிகள் தான் வேறு.

தாரணியின் வீடு றோட்டுக்கு அந்தப்பக்கம்! அதாவது கிழக்குப்பக்கம். வாகினியின் வீடு றோட்டுக்கு இந்தப்பக்கம், அதாவது மேற்குப்பக்கம். இரண்டு கிராமத்தையும் பிரித்து நடுவில் ஒரு றோட்டு அதை அவர்கள் போக்குவரத்திற்குப் பயன்படுத்துகிறார்களோ இல்லையோ இவர்களைப் பிரித்துக்காட்ட நல்லாகவே பயன்படுத்துகிறார்கள்.

தாரணி வீட்டுப்பக்கமிருக்கின்ற கிழக்குப்பக்கத்து ஆட்களின் பிரதான தொழில் விவசாயமாக இருந்ததால் மேற்குப்பக்கம் இருந்தவர்களின் தொழில் அவர்களது தோட்டங்களிலும் வீடுகளிலும் கூலிவேலை செய்வதாக இருந்தது.

தாரணியின் தகப்பனிற்கு நாற்பது பரப்பில் விவசாயக்காணியும் எட்டுப்பரப்பில் விலாசமான கல்வீடும் பரம்பரைச்சொத்தாக இருந்தபடியால் அவர்களும் அந்த ஊரில் ஒரு பரம்பரைப் பணக்காரர் தான்.

காந்தன் இறந்ததில் இருந்து தாரணி வீட்டிற்கு வேலைக்குப்போன புஸ்பம் வாகினி கம்பஸிற்குப் போன கொஞ்சக் காலத்திற்குப்பிறகு அங்கு வேலைக்குப்போவதை நிறுத்திவிட்டாள்.

"ஏன் நீ அங்க வேலைக்குப் போறேல" என்று கேட்கிறவர்களுக்கெல்லாம்

"வாகினியும் தாரணியும் கம்பஸில ஒன்டாப் படிக்குதுகள் நான் இனியும் அங்க வேலைக்குப்போறது வாகினிக்கு அவ்வளவு நல்லாயிருக்காது" என்றுதான் காரணம் சொல்லித்திரிகிறாள். ஆனால் உண்மையான காரணம் அதுவல்ல.

வாகினி கம்பஸிற்குப்போய் ஏழு அல்லது எட்டுமாதமிருக்கும், புஸ்பத்திற்கு இரண்டுநாட்களாக சரியான காய்ச்சல்! அதனால் வேலைக்குப் போகவில்லை. அதனைக் காரணமாக வைத்துக்கொண்டு அவளைத்தேடித் தாரணியின் தகப்பன் வீட்டிற்குப் போய்விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையாக மற்றவர்களுடன் கதைப்பது போன்று அவரையும் வெளியே நிறுத்தி வைத்து தனது நோய் நிலை பற்றி கதைத்துக்கொண்டிருந்த புஸ்பத்தை இடைமறித்த தாரணியின் தகப்பன் "ஏன்டீ புஸ்பம் எங்களையும் உள்ள கூப்பிடமாட்டியாடீ" என்று கேட்டுவிட்டார்.

அதைக்கேட்டு கொஞ்சம் தயங்கிய புஸ்பம் "அப்படியில்லை உள்ளே வாங்கோ" என்று கூப்பிட்டு விட்டாள்.

இவர்களது மனநிலைதான் என்ன அவர்கள் தங்கள் வீட்டிற்குள் வந்தால் தீட்டு என்கிறார்கள் ஆனால் இவர்கள் மட்டும் எப்படி அவர்களின் வீட்டிற்குள் போவதற்கு விரும்புகிறார்கள்.

முன்னால் சென்று கதவைத்திறந்து புஸ்பம் உள்ளே போக பின்னால் இருந்து ஒரு கை அவளது தோளைத் தொட்டு இறுக்கி அமுக்கியது. இதைச்சற்றும் எதிர்பாராத புஸ்பம் பதற்றத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் திரும்பிய வேகத்தில் அவரது முகத்தில் காறித் துப்பி விட்டாள். அதைச்சற்றும் எதிர்பாராத தாரணியின் தகப்பன் எந்தக்கதையும் கதைக்காமல் வெளியே சென்று விட்டார்.

காந்தன் இருந்த காலத்திலும் சரி அவன் இறந்த பின்பும் சரி புஸ்பம் எந்த ஆண்களையும் வீட்டிற்குள் கூப்பிட்டு இருத்திக் கதைப்பதில்லை. அப்படியிருந்தும் ஊரிலே பெரியவர் வயதிலும் பெரியவர் என்று உள்ளே கூப்பிட்டால். திருமணம் செய்யும் வயதில் ஒரு பெண் பிள்ளையை வைத்திருந்தும் இவரது மனதில் இப்படி யொரு கெட்ட சிந்தனை இருக்குமென்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லைத்தான்.

வாகினியுடன் சேர்ந்து புஸ்பம் செல்லும்போது அவர்களைத் தெரியாதவர்கள் யாரும் கண்டால் நீங்கள் இருவரும் சகோதரமா என்று கேட்குமளவிற்கு அழகாகவும் இளமையாகவும் தான் புஸ்பம் இருக்கிறாள் புஸ்பம். அதற்காக அவளுக்குக் கணவன் இல்லையென்றதும் அதனைத் தவறாகப் பயன்படுத்தலாம் என்று தாரணியின் தகப்பன் எண்ணியது தவறு தானே.

ஏழைகள் என்றால் எல்லாவற்றிற்கும் சம்மதிப் பார்கள் என்று நினைக்கிறார்கள். அவர்களிற்கும் கற்பு, மானம், மரியாதை என்ற எல்லாம் இருக்கும் என்பதை ஏன் தம்மைப் பெரியவர்களாகவும் பணம் படைத்தவர்களாக வும் காட்டிக்கொள்ள விரும்புபவர்கள் மனதில் கொள்வ தில்லை?

இந்தச்சம்பவம் புஸ்பத்தையும் தாரணியின் தகப்பனையும் தவிர வேறு யாருக்கும் இதுவரை தெரியாது. வாகினி கூட ஒருநாள் "ஏனம்மா நீங்கள் இப்ப தாரணி வீட்டை வேலைக்குப்போறதில்லை" என்று கேட்டதற்கு எல்லோருக்கும் சொன்ன காரணத்தையே அவளுக்கும் சொல்லிவிட்டாள். அவளும் தாய் அங்கு வேலைக்குப் போவதை விரும்பாதவள்போல் அதற்கு மேல்தொடர்ந்து எந்தக்கேள்வியும் கேட்காமல் விட்டுவிட்டாள்.

காந்தன் தான் புஸ்பத்தின் கணவன். அவனது இறப்பிலிருந்து புஸ்பம் மீண்டு வந்திருந்தாலும் அந்தச் சம்பவத்தை அவளால் மறக்கமுடியவில்லை.

வாகினிக்கு அப்போது மூன்று வயதிருக்கும் வழமை போல அன்றும் அதிகாலையில் எழும்பி காலைக்கடன்களை முடித்துவிட்டுப் புஸ்பத்தின் கையால் தேநீரை வாங்கிக் குடித்துவிட்டு "வாறன் போய்ட்டு" என்று சொல்லிவிட்டு தேங்காய் பிடுங்கப்போன காந்தன் வீட்டிற்குத் திரும்பி வரும் போது பிணமாய்த்தான் வந்தான்.

"எடியேய் புஸ்பம் காந்தன் மரத்திலயிருந்து விழுந்துபோனானாமடி" என்று கனகம் சொன்ன வார்த்தைகள் புஸ்பத்தின் காதுகளில் அன்று இடி வந்து வீழ்வதைப் போல் தான் வந்து வீழ்ந்தது. இப்பொழுதும் அந்த வார்த்தைகள் அவளின் காதுகளில் கணீர் என்று கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது.

அவளது இதயம் தன் நிலையிழந்து துடிக்க நித்திரையாகக்கிடந்த வாகினியைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு தென்னம்தோப்புக்குப்போன புஸ்பத் திற்கு ஒரே அதிர்ச்சி. தென்னம் தோப்பில் ஒரே சனக் கூட்டம் அதுக்கு மத்தியில காந்தன் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான்.

சுற்றி நின்று பார்த்துக்கொண்டு நின்ற கிழக்குப் பக்கத்து ஆட்கள் எல்லோரும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்களே தவிர யாரும் தூக்க முன்வர வில்லை. தூக்கினால் தீட்டாம்.

கண்ணுக்கு முன்னால் தாலி கட்டிய புருசன் உயிருக்குப் போராடியும் அவனைத் துக்கிக்கொண்டுபோய் காப்பாற்ற முடியவில்லையே என்ற கையறுநிலையால் ஏற்பட்ட குற்றவுணர்வில் இருந்து இன்னமும் தான் அவள் முழுமையாக மீட்சிபெறவில்லை.

பின்னர் செய்தியறிந்து அவ்விடம் வந்த அவளது ஊரவர்களும் உறவுகளும் சேர்ந்து வாகன வசதிகூட இல்லாமல் கைப்பத்திலே தூக்கிச்சென்று ஆஸ்பத்திரியில் சேர்த்தால் காந்தன் இறந்து ஒருமணி நேரம் ஆகிவிட்ட தென்று வைத்தியர்கள் கூறிவிட்டார்கள்.

இந்த இழப்பிற்குப்பின்தான் புஸ்பம் தாரணியின் வீட்டிற்கு வேலைக்குப்போகத்தொடங்கினாள்.

பணமிருந்தும் தாரணியைப் படிப்பிப்பதில் அவளது தாயும் தகப்பனும் காட்டிய அக்கறையையும் தனது கணவனுக்கு நடந்த கொடூரத்தையும் பார்த்துத் தான் கூலியாக வீட்டில் வேலை செய்யும் போது ஏற்பட்ட அவமானங்களும் புறக்கணிப்புக்களும் தன்னோடு முடிய வேண்டும் தன்னுடைய பிள்ளையும் அதை அனுபவிக்கக் கூடாது என்பதை மனதில் வைத்து கோவில் கோவிலாகச் சென்று வரமிருந்து பெற்றெடுத்த தனது ஒரே மகளான வாகினியைத் தகப்பன் இல்லாவிட்டாலும் தன்னைப்போல் யார் வீட்டிலும் போய் பாத்திரம் கழுவி வாழக்கூடாது என்பதில் வைராக்கியமாக இருந்து கடன் பட்டோ இருந்த பொருட்களையெல்லாம் விற்றோ பிள்ளையை கம்பஸ்வரை படுப்பித்ததன் விளைவுதான் வாகினி இன்று பல்கலைக்கழகம் சென்று படித்துப் பட்டதாரியாக வந்து நிற்கிறாள்.

"இனியென்ன அவளுக்கொரு வேலை கிடைத் தால் ஊரில கௌரவமா வாழுவாள்" என்பதையே தனக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம் சொல்லித்திரிவாள் புஸ்பம்.

"உன்ர நிலைமைக்குப் பிள்ளையைப்படிப்பிச்சு என்னத்தக்காணப்போறாய்"

"பேசாம எங்களோட விட்டாயெண்டா தோட்டவேலயாவது பழக்கிவிடுவம்"

"இருக்கிறதுகளையும் வித்தழிச்சுப்போட்டு கடைசியா ஒண்டுமில்லாம நீ நடு றோட்டில தான் நிக்கப்போறாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்று சொன்னவர்கள் எல்லோரது வாயையும் இப்ப மூட வைத்துவிட்டாள் தானே என்ர பிள்ளை யென்று" அவள் தினமும் மனதிற்குள் திருப்திப்பட்டுக் கொள்வதுமுண்டு

புஸ்பம் தாரணியின் வீட்டிற்கு வேலைக்குப் போகும் போது தாரணி மீது காட்டிய அன்பும் அக்கறை யும் அன்பாகப் பேசிய வார்த்தைகளும் கூட தாரணி வாகினி மீது நட்புக்கொள்வதற்கொரு காரணமாக இருக்கலாம். அவ்வளவு அன்பு பாசம் இரக்கம் கொண்டவள் தான் புஸ்பம்.

வாகினிக்குச் சின்ன வயதிருக்கும் போது பள்ளிக் கூடம் லீவு விட்ட நாளொன்றில் வாகினி தானும் தாயுடன் தாரணி வீட்டிற்குச் செல்லவேண்டுமென்று அடம் பிடித்துச்சென்றுவிட்டாள்.

புஸ்பம் ஒரு நாளும் பிள்ளையை அங்கு கூட்டிக் கொண்டு போகிறதுமில்லை கூட்டிக்கொண்டு போக விருப்புவதுமில்லை. அன்று வழமையாகப் பிள்ளையை விட்டுச்செல்லும் பக்கத்துவீட்டுக் கனகமும் ஆஸ்பத்திரிக் குப்போகவேண்டுமென்று சொன்னதால் அங்கும் விட முடியாத நிலையென்றதால் கூட்டிக்கொண்டு போய் விட்டாள்.

அங்குபோன வாகினி தாரணியின் சைக்கிளை எடுத்து ஓடிப்போட்டாள் என்று எவ்வளவு பேச்சு? அதுக்கென்ன தெரியும் அது சின்னப்பிள்ளை? அதைக்கூட புரிந்துகொள்ளத்தெரியாக மனிதர்கள் தான் அவர்கள்.

சைக்கிளை ஓடிக்கொண்டிருக்கும் போதே இடையில பறித்துவிட்டார்கள் என்று பிள்ளை அன்று முழுவதும் அழுத அழுகையோடு அதற்குப்பிறகு புஸ்பம் ஒரு நாளும் வாகினியை அவர்களின் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போகவேயில்லை.

இது மட்டுமா தன்னுடைய பிள்ளைக்கு "கேக்கும்" "ரீயும்" கொடுத்துவிட்டு வாகினிக்கு அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட சில்வர் பேணிக்குள் கஞ்சி தான் கொடுத்தார் கள். இந்தப்பிள்ளை எப்படி அந்தப்பிள்ளையைப் பார்த்துக்கொண்டு சாப்பிடும்.

என்னென்று தான் இப்படியெல்லாம் செய்ய அவர்களுக்கு மனம் வருகிறதோ தெரியவில்லை. தாய்மனம் தான் என்ன பாடுபட்டிருக்கும்.

கிழக்குப்பக்கத்தில் இருக்கின்ற எல்லோரது வீட்டிலும் மேற்குப்பக்கத்தவர்களுக்கென்று தேநீர் கொடுப்பதற்கு தனிச்சில்வர்பேணி வேறாக வெளியிலே ஒரு இடத்தில் தனியாக இருக்கும். ஆரம்பத்தில் சிரட்டை இப்போது கொஞ்சம் முன்னேறி சில்வர் பேணி. சாப்பிட வாழையிலை, இருந்து சாப்பிடுவதற்கு வெளியாலே ஒரு இடம் தனியா ஒதுக்கப்பட்டிருக்கும். அதைத்தாண்டி இவர் கள் உள்ளே போவதுமில்லை அவர்கள் இவர்களைக் கூப்பிடுவதுமில்லை. இவற்றையெல்லாம் மீறினால் தீட்டாம்.

அது என்ன தீட்டு இவர்களும் அவர்களை மாதிரி மனிதர்கள் தானே.

இவற்றையெல்லாம் வாகினி மறந்திருந்தாலும் புஸ்பத்தால் மறக்கமுடியவில்லை அவள் மறக்கவும் மாட்டாள்.

அவசர அவசரமாக கிணற்றடிக்குப்போய் குளித்துவிட்டுவந்த வாகினி ஏற்கெனவே "அயன்" செய்து வைத்திருந்த சல்வாரை அணிந்து கொண்டாள், பின் தாய்சொன்ன இடத்திலிருந்த சங்கிலியையும் காப்பையும் எடுத்துக் கழுத்திற்கும் கையிற்கும் அழகு சேர்த்தாள் தலை முடியை மேவி இழுத்து முகத்தை அழகுபடுத்தி பொட்டிட்டுக் கொண்டாள். அவ்வளவு தான் அவளது மேக்கப் கண்ணாடி முன்நின்று தன்னை முழுமையாக ஒருமுறை பார்த்தவள் மனதில் ஒரு திருப்தியுடன் புறப்பட ஆயத்தமானாள்.

அவள் வழமையாகவே கண்ணாடி முன் நின்று நேரத்தைச் செலவழிப்பது குறைவுதான். அவள் நிறம் கொஞ்சம் குறைவென்றாலும் வட்டமுகமும் மேவி இழுத்த தலைமுடியும் கன்னத்திலிருந்த மச்சமும் சிரிக்கும்போது தெரியும். அந்த தெத்திப்பல்லும் அவள் அழகை மேலும் மெருகூட்டி ஒரு குடும்பப்பாங்கான பெண்ணுக்குரிய கலையைத்தான் கொடுத்திருந்தது.

பல்கலைக்கழக நாட்களில் தானும் தாரணியும் சேர்ந்து எடுத்துக்கொண்ட போட்டோக்கள் பலவற்றை ஒன்றுசேர்த்து அதை வைத்து கடையில் ஒரு பிறேம் செய்யக்கொடுத்திருந்ததால் அதையும் எடுத்துக்கொண்டு பன்னிரண்டு மணியாகும் போது தாரணியின் வீட்டுக்குப் போய்விட்டாள்.

உள்ளே சென்று சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு நின்றவளைக்கண்ட தாரணியின் அண்ணன் அவளை அழைத்துச்சென்று அவளது நண்பர்கள் இருந்த இடத்தில் இருத்திவிட்டு அருகில் அவனும் அமர்ந்து விட்டான். அங்கு நடக்கும் செயற்பாடுகள் மீது வாகினி பார்வையைப் பரவவிடுகிறாள்.

பந்தலின் முன்னே மேடையில் தாரணி அமர சிங்கவுடன் நெருக்கமாக நிக்கிறாள். போட்டோக் காரன் வழிநடத்த அங்கு ஏனைய செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

முன் வரிசையில் அமரசிங்கவின் உறவினர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

இளம் பெண் பிள்ளைகள் வந்தவர்களிற்குக் "கூல்றிங்ஸ்" வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

வாகினியின் நண்பர்கள் கூடியிருந்து தமக்குள்ளே ஏதோ கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தாரணியின் தாய் ஒரு இளம் பெண்பிள்ளையுடன் வாகினி இருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருக் கிறார். அந்தப்பிள்ளையின் கைகளில் இருந்த தட்டில் கூல்றிங்ஸ் கப்கள் நிறைந்திருக்கிறது.

அந்தத்தட்டில் கூல்றிங்ஸ் கப்களிற்கு மத்தியில் ஒரு சில்வர் பேணியும் தெரிகிறது.

வாகினிக்கு அந்தச்சில்வர் பேணியினை ஏற்கெனவே ஒருதடவை பார்த்த ஞாபகம் வரவே நெஞ்சில் ஒருவித பயம் கலந்த பதற்றம் நிலவ தலையைக் குனிந்து கொண்டு இருந்து விட்டாள்.

இதற்கிடையில் வாகினிக்கு சப்ரைஸ்சாகப் பிறந்தநாள் செய்யக் காத்திருந்த அவளது நண்பர்கள் மறைத்து வைத்திருந்த கேக்கை எடுத்துவந்து அவள் முன்னே வைத்து "விஸ் யூ ஏ ஹப்பி பேத்டே" வாகினி என்று கத்திக் கூச்சலிட ஏற்கெனவே பயம் கலந்த பதற்றத்துடனி ருந்தவளுக்கு திடீரென இடம்பெற்ற பிறந்த நாள் கொண்டாட்டமும் சேர்ந்து அதிர்ச்சியைக் கொடுக்க நிலை குலைந்து போய் அவ்விடத்திலேயே மயங்கிவிட்டாள்.

அவள் மயங்கி விழப்போவதைக் கண்டு அதிர்ந்து போன திவாகர் அவளைக்கீழே விழவிடாது உள்ளங்கை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் தாங்கிப்பிடித்து ஏனைய நண்பர்களுடன் சேர்ந்து தூக்கி வந்து வீட்டின் உள்ளேயிருந்த சோபா செற்றிமீது படுக்க வைத்துவிட்டு காற்றுப்படுவதற்காக “ஃபானினை” சுழல விட்டான்.

அங்கு நடந்த அமளிகளைப்பார்த்துவிட்டு எழுத்து மேடையிலிருந்து எழுந்து வந்து நண்பர்களை விலக்கியவாறு உள்ளே வந்த தாரணி வாகினிக்கு அருகில் சென்று வாகினியின் முகத்தில் தண்ணீரைத் தெளித்து “வாகினி என்ன நடந்தது வாகினி எழும்பு எழும்பு வாகினி எழும்பு” என்று அவளது கன்னத்தைத் தட்டி யெழுப்ப வாகினி கண்களை முழித்துப் பார்த்துவிட்டாள்.

வாகினி எழுந்ததைப் பார்த்ததும் தாரணியும் திவாகரும் அங்கு நின்ற நண்பர்களும் அவர்களது முகத்திலும் மனதிலும் மகிழ்ச்சி பொங்க சிரித்துக்கொண்டு நிற்க வாகினி கையசைவால் குடிப்பதற்குத் தண்ணீர் தருமாறு கேட்டாள்.


அதைப் பார்த்த திவாகர் குசினிக்குள் சென்று ஒரு கிளாஸ் நிறைய குளிர்ந்த நீரை நிரப்பிவந்து தாரணியிடம் கொடுக்க. தாரணி அதை வாங்கி வாகினிக்குப் பருக்கிய போது வாகினி ஓரளவு தெளிவு பெற்று சுய நினைவிற்கு வந்தாள்.

இதற்கிடையில் அவளது நண்பர்கள் வாகினி இருந்த இடத்திற்கு “கேக்கைக்” கொண்டுவந்து வைக்க வாகினி “கேக்கை” வெட்டி தாரணிக்கும் நண்பர்களுக்கும் ஊட்டிவிட ஏனைய நண்பர்களும் ஒருவர் பின் ஒருவராக மாறி மாறி ஊட்டிக்கொண்டிருக்கும் போது, திவாகர் ஏற்கெனவே வாங்கி வைத்திருந்த அழகிய வெள்ளை நிற தாஜ்மகால் ஒன்றைக் கொண்டுவந்து வாகினிக்குக் கொடுத்தான்.

அதைச்சற்றும் எதிர்பார்த்திராத நண்பர்கள் கைதட்டி சிரித்து மகிழ்ச்சியாக வாழ்த்துத் தெரிவிக்க, வாகினி திவாகரை ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு மனதில் ஒருவித பயம் கலந்த மகிழ்ச்சியுடன் தாஜ்மகாலைப் பெற்றுக்கொண்டாள்.

# இன்னமும் கொம்பு முளைத்துவிடவில்லை

முல்லைஅமுதன்




கொம்புடன் அலைவதில்
உடன்பாடு எனக்கில்லை.
திரையை விலக்கி
பார்க்கையில் கொம்புடன்
பலரும் திரிவதைப் பார்க்கமுடிந்தது.
எனக்கென்ன..
கொம்பு அவர்களுக்கானது.
விரும்பியவாறு அணிந்துகொள்ளட்டும்.
கொம்பில் என்ன இருக்கிறது.
பாதுகாக்க முடியுமா?
முன்னர் வாங்கிய கொம்பை
துடைத்து அழகுபடுத்திய மனைவி
சலித்துக்கொள்கிறாள்.
வீட்ட அடைத்துவிடுவதாக
மகள் முணுமுணுக்கிறாள்.
அன்றும் அப்படித்தான்.
சன நெரிசலில் வரிசையில் நின்று
படி அரிசி வாங்கி
அன்றைய சமையலுக்கு உதவிட்டு,
பிள்ளைகளை
கல்வி நிலையங்களிலிருந்து
அழைத்துவந்து,
மருந்துக்கடையில்
எனக்கான
உடல் உபாதைகளுக்கான
மருந்துகளை
வாங்கி மனைவியிடம் கொடுத்துவிட்டுச்
சென்றிருந்தேன்.
நண்பனிடம் கைச்செலவுக்கு வாங்கிய
கொஞ்சம் சில்லறைகளை
மீண்டும் தட்டிப்பார்த்துக்கொண்டேன்.
நேரமாகிவிட்டது.
யாரும் கவனிக்கவில்லை.
கவனிக்கப்படாதவனுக்கு
மரியாதை கிடைப்பதேயில்லை.
யாரும் அழைக்கவில்லை.
அழைப்பிதழில் எனது பெயரும் இருந்ததே.
ஒவ்வொருவராக
தங்களுக்கான கொம்புகளை
வாங்கிச்சென்றனர்.
தனது புத்தகத்திற்குக் கிடைத்ததாக
கொம்பை
உயர்த்திக்காட்டியபடி
நகர்ந்துகொண்டிருந்தார்.
“வாழ்நாள் சாதனையாளர்”
எனச் சொல்லியே அழைத்திருந்தனர்.
ஏமாற்றதுடன்
திரும்பி பெட்டிக்கடையில்
தீப்பெட்டி இருக்கா?கேட்டேன்..
எனது நாவலை கழுத்தில் பட்டி போட்டு
தொங்கவிட்டிருந்தார்
அந்த பெட்டிக்கடைக்காரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பிளான் ஐ.சண்முகலிங்கனின் இரசனைக் குறிப்புகள்

■ எம்.கே.முருகானந்தன்




குப்பிளான் சண்முகன் அவர்களின் மேற்படி நூல் பற்றிய சில கருத்துகளை முன்வைக்க விரும்பு கிறேன். அது காலத்தின் தேவையாகிறது.

இரண்டு முக்கிய காரணங்கள்.

மனதிற்கு இனிய மிக நெருக்கமான நண்பனும், பண்பாளனும், மிக அருமையான படைப்பாளியாகியும் ஆன குப்பிளான் சண்முகம் அவர்களின் ஓராண்டு நினைவு நாள் கடந்துவிட்ட நிலையில் அவரை நினைவுகூர அவரது இந்த நூல் வாய்பளித்திருக்கிறது.

நெருங்கிய நண்பர். மிக நீண்டகால நட்பு. சாதாரண நட்புக்கு அப்பால் குடும்ப ரீதியாக நெருங்கி யதும் கூட. அவரது இல்லத்திற்கு பல தடவைகள் செல்லக் கிடைத்தது. மனைவியுடன் கூடவே. போர்க் காலத்தில் நடந்த அறிவோர் கூடல் நிகழ்வுகளில் தவறா மல் பங்கு கொள்பவர்களில் அவர் முக்கியமானவர். பொதுவாக அவரும் சே.யோகராசாவும் சேர்ந்து வரு வார்கள். இப்பொழுது இருவரையும் இழந்து நிற்கிறோம். இந்த நிலையில் அவரது நூலுக்கான அறிமுக விழாவில் பேச வாய்ப்பு கிடைத்தது. அந்த உரையின் எழுத்து வடிவமே இக் கட்டுரை.

இரண்டாவது, இது ஒரு மிகவும் வித்தியாசமான நூல், எமது ஈழத்து இலக்கிய உலகில் மிகவும் புதுமை யான, முன்னோடி நூல் என்று கூடச் சொல்லலாம்.

ஏனெனில் இது ஒரு டயறிக் குறிப்புகளின் தொகுப்பு நூல்.

டயறிக் குறிப்புகள் என்று சொல்லும்போது பலரும் எழுதுவது தமது வாழ்வில் அன்றைய தினம் நடந்த குறிப்பிடத்தக்க சம்பவங்கள் பற்றியவையாகவே இருக்கும். உதாரணமாக கலியாணம், பிறந்த தினம், மரண வீடு போன்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டது பற்றியதாக இருக்கும். அல்லது மனதைப் பாதித்த சொந்த சம்பவங்கள் பற்றி இருக்கலாம். ஆனால் இவர் எழுதும் குறிப்புகளோ முற்றிலும் வேறானவை.

இவர் தான் வாசித்தவை பற்றியே எழுதுகிறார். வாசித்தவை பற்றிய தனது கருத்துக்களை சொல்வ துடன் நின்றுவிடாது, வாசித்தவற்றில் தனக்கு பிடித்த சில பகுதிகளை குறித்து வைக்கவும் செய்கிறார்.

இந்தக் குறிப்புகளை ஏன் எழுதினார் என்ற கேள்வி எழுகிறது அல்லவா? நூலின் ஆரம்பமே அதற்கான விடையுடன் தான் ஆரம்பிக்கிறது.

"1990 ஜீன் நடுப்பகுதிகளில் ஆரம்பித்து நீண்ட விடுமுறைகளில், ஏராளமான புத்தகங்கள் வாசித்தேன். இடையில் நிறுத்தி நிதானித்துப் பார்த்தபோது ஒன்றுமே படிக்கவில்லைப் போலப்பட்டது, எதுவுமே நினைவில் வரமாட்டேனென்கிறது. எனவே எழுதலாமென யோசித்தேன். "29.08.1990 இல், படித்த புத்தகங்கள் பற்றிய சில தகவல்களைத் திரட்டினேன்" என்கிறார். எனவே அவர் தான் வாசித்தவற்றில் தனக்கு தேவை யானவற்றை ஞாபகப்படுத்துவதற்காகவே இவற்றைக் குறித்து வைத்திருக்கிறார என்பது தெளிவாகிறது.

அவரது மனைவிதான் அவற்றின் முக்கியத்து வத்தை உணர்ந்து, அவற்றைத் தொகுத்து நூலாக்கம் செய்திருக்கிறார். இதற்காக நாம் அவரைப் பாராட்டுவ தோடு நன்றிக் கடனும் பட்டிருக்கிறோம். 105 டயறிக் குறிப்புகள் இந்த நூலில் இடம் பெறுகின்றன.

64 பக்கங்களைக் கொண்ட நூல். பதிப்புரை, முன்னுரை நீங்கலாக சுமார் 50 பக்கங்களுக்கு குப்பி ளானின் குறிப்புகள் இடம் பெறுகின்றன. குறிப்புகளின் அளவானது தேவைக்கு ஏற்ப மாறுபடுகின்றன. ஒரே பக்கத்தில் 6 குறுகிய குறிப்புகள் இடம் பெறும் அதே நேரம் 5 பக்கங்களுக்கு நீளும் குறிப்புகளும் அடங்கு கின்றன.

மிகக் குறுகிய குறிப்பு "இவான்", பற்றியது. ஒன்றரை வரிகள் மாத்திரம் - 2ம் உலகப்போரில் பங்கு கொண்ட துணிச்சல் மிகு ரஷிய சிறுவன் பற்றிய நாவல்.

மிக நீண்டது குறிப்பானது கருணாகர மூர்த்தின் பெர்லின் நினைவுகள் நாவல் பற்றியது. சுமார் 4 பக்கங்களுக்கு விரிகிறது.

அவர் படித்த நூல்களும் பலவகையானவை. கவிதை, நாவல், சிறுகதை. சிற்றிதழ்கள் எனப் பலவும் அடங்குகின்றன. பயணங்கள் சம்பந்தமாகவும் வரலாறு சம்பந்தமானதுமான குறிப்புகளும் இடம் பெறுகின்றன.

இந்த நூலால் நாம் பெறக் கூடிய பயன்கள் என்ன?

நாம் ஏற்கனவே படித்த நூலாயின் எமது நினைவுகளை புத்தாக்கம் செய்யலாம். அது மகிழ்ச்சி தரும் விடயமாக இருக்கும். சில வேளைகளில் மீண்டும் அதைத் தட்டிப் பார்க்க வேண்டும் என்ற உந்துதலையும் ஏற்படுத்துவதுண்டு.

அத்துடன் நூலாசிரியரின் கருத்துக்களுடன் நாம் எவ்வாறு ஒன்றுபடுகிறோம் அல்லது மாறுபடு கிறோம் என ஒப்பிட்டுப் பார்ப்பதும் சுவாரஸமாக இருக்கும்.

படிக்காத நூலாயின், தேவையாயின் எமது படிக்க வேண்டிய நூல்களின் பட்டியலில் சேர்க்கலாம். பின் தேடிப்பிடித்து வாசிக்கலாம். அவ்வாறு வாசிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டும் பல பதிவுகள் அவரது குறிப்புகளில் உள்ளன.

அதே நேரம், திருமதி சண்முகன் தனது பதிப்புரையில் சொல்வது போல "சிலருக்கு தாமும் இத்தகைய முயற்சியில் ஈடுபட வேண்டுமென்ற தூண்டுதலையும் உத்வேகத்தையும் ஏற்படுத்த கூடும்."

அதே போல யேசுராசா தனது முன்னுரையில் "இது போன்ற குறிப்புப் புத்தகங்கள் பல என்னிடமும் உள்ளன. அவற்றை வெளியிடலாமென்ற எண்ணம் எனக்கும் இதன் வழி ஏற்பட்டுள்ளது. திருமதி சண் முகனின் முன்முயற்சிக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்."

இந்த இடத்தில் ஒரு கொசுறுத் தகவல் என்னைப்பற்றி.

ஒரு டாக்டரின் டயறி என்ற எனது நூல் மல்லிகைப் பந்தல் வெளியீடாக 2004ல் வெளிவந்திருக் கிறது. உண்மையில் அது ஒரு டயறிக் குறிப்புகளின் தொகுப்பு அல்ல. எனது மருத்துப் பணியின் போது பல சுவார்ஸமான சம்பவங்கள் நடக்கும். சிலவற்றை கவனத்தில் எடுத்து, அவற்றை சிறுகுறிப்பாக எழுதி எனது மேசை லாச்சியில் போட்டுவிடுவேன். சில வேளைகளில் கொப்பிகளிலும் எழுதி வைத்திருப்பேன். பின் நேரங்கிடைக்கும் போது அவற்றை விரித்து அனுபவக் குறிப்புகளாக எழுதுவேன்.

முதலில் மல்லிகை சஞ்சிகையிலும் பின் தினக்குரலிலும் எழுதினேன். அப்படி விரித்து எழுதும் போது அவை சுவாரஸ்யமாக இருக்க வேண்டும் என்பதற் காக மனதில் வரும் வேறு விடயங்களையும் கலந்து எழுதுவதுண்டு.

அண்மையில் ஜீவநதி வெளியீடாக வந்த "டாக்டரின் தொணதொணப்பு" என்று நூலும் அவ்வாறான குறிப்புகளின் தொகுப்பே.

சண்முகனின் இக் குறிப்புகளில் பல்வேறு வகையான நூல்கள் பற்றி இருப்பதால் அவரது பதிவுகள் ஊடாக எமக்கு பரந்தளவு வாசிப்பு அனுபவம் இலகு வாகக் கிடைக்கிறது.

உதாரணத்திற்கு பல மொழிபெயர்ப்பு நாவல்கள் இருக்கின்றன. அவற்றில் பல, கீழைத்தேச மக்களாகிய எமக்கு முற்றிலும் வித்தியாசமான புதிய அனுபவங்களைத் தருகின்றன.

அதில் லியோனார்ட் பெல்டீயர் எழுதிய "சூரியனத் தொடரும் காற்று" என்ற நூல் பற்றிய குறிப்பு என் கவனத்தை ஈர்த்தது.

அதில் சிறை வாழ்வு பற்றிய குறிப்பு மனதைத் தொடும் வகையில் அமைந்திருந்தது. தனது நாளாந்த வாழ்வில் நடந்த பல சாதாரண நிகழ்வுகளையே, இழந்துவிட்ட துயருடன் கலாபூர்வமாகச் சொல்கிறார்.

அதிலிருந்து ஒரு வசனம். "சிறையில் காலங் கழிப்பதால் உங்களுக்கு நேர்வது இதுதான். நீங்கள் காலத்தைக் கழிக்க வேண்டாம். காலம் இல்லாமலே வாழப்பழகுங்கள். இல்லாவிட்டால் காலம் உங்களைக் கழித்துவிடும். காலம் உங்களைத் தின்கிறது. ஒவ்வொரு ஆயுளின் சதையைச் சுவைத்து தின்கிறது. ஒவ்வொரு நாளாக, ஒவ்வொரு துண்டாக, உங்களின் வாழ்க்கை யின் சாறு உங்கள் இரத்தம் தேய்ந்த மோவாயில் வடிய கடைசி துணிக்கையையும் அது தின்று முடித்த பிறகு குரூரமாக சிரிக்கிறது. திருப்தியுடன் ஏப்பம் விடுகிறது"

இந்த அருமையான சொல்லாடலின் பின்னால் இழையோடும் துயரம் எம்மைக் கசக்கிப் பிழிந்து விடுகிறது.

அதே போல பிரஞ்சுப் படைப்பான யூஜினி. இது பால்சாக் எழுதியது காதல் பற்றிய ஒரு வித்தியாசமான பார்வையைத் தந்தது.

"காதலின் இளம் கனவுகள் ஏறிய ஆனால் ஆசைவெறியின் பளு ஏறாத அவளது கண்களின் மாயத் தெளிவையும் அவன் கவனித்தான். அருமையான சொல்லாடல் அல்லவா?

புலம்பெயர் வாழ்வைப் பின்னணியாகக் கொண்ட மூன்று நாவல்கள் பற்றிய குறிப்புகளும் அந்த வாழ்வு பற்றிய புதிய பார்வையைத் தொட்டுச் செல்கின்றன.

வ.ந.கிரிதரனின் குடிவரவாளன் நாவலானது சட்டபூர்வமற்ற அகதியாக வாழ்ந்த அனுபவங்களை பேசுவதாக குறிப்பிடுகிறார். "அகதி வாழ்வின் வித்தியாச மான அனுபவங்கள், வித்தியாசமான மனிதர்கள்" எனத் தன் கருத்தைப் குப்பிழான் பதிவிடுகிறார்.

கருணாகரமூர்த்தியின் பெர்லின் நினைவுகள் பற்றிய நீண்ட குறிப்பானது சுமார் 4 பக்கங்களுக்கு விரிகிறது.

தேவகாந்தனின் நதிமேல் சிறுபுள் பற்றி "குறுமுனி போல் பெருவிகாசம் அடக்கியே இந்த நாவலும் தன்னுள் சுருங்கி இந்த வடிவத்தை எடுத்தது என்றவாறாக," என சண்முகன் குறிப்பிடுவது அழகான கவிதை வரி போன்றது.

கதை பற்றிய குறிப்பாக.

இது சிவப்பிரகாசம் என்ற மனிதனின் கதை. அவர் கதை நாலு பகுதிகளைக் கொண்டது

1) யாழ்ப்பாணத்திலும்- இலங்கையிலுமான அவரது வாழ்வு

2) கனடாவில் - ரொறன்ரோவில் தன் மனைவி மங்கலநாயகி மூன்று குழந்தைகளுடனான வாழ்வு

3) கனடாவில் மென்றியலில் லில்லியுடனான வாழ்வு

4) கிதாரி என்ற பெண்ணுடனான நெருக்கம் வாழ்வு பற்றிய தீர்மானமும் நாவலின் முடிவும்.

புலம்பெயர் வாழ்வின் கலாசார நெருக்கடி களைப் பேசுவதாக சண்முகன் கருத்திடுகிறார். புதிய களம் எனவும் கூறுகிறார்.

படிக்கக் கிடைக்கவில்லை. தேட வேண்டும்.

அட்டைப்படம் பற்றி சொல்லாமல் இருக்க முடியாது. ஒரு அடுக்கு புத்தகங்கள் அட்டையின் மேல் பகுதியில். கீழே சண்முகனின் தீர்க்கமான பார்வை. அங்கே அவருக்கே உரிய மென்னகை. அற்புதமான புகைப்படம்,

சண்முகனின் பரந்த வாசிப்பையும், மென்மை யையும் நட்புறவுக் குணநலனையும், மனதில் படுமாறு அட்டையை அழகாக வடிவமைத்த பரணீதரனுக்கு பாராட்டுகள்.

பின் அட்டைக் குறிப்பை மூத்த எழுத்தாளர் குந்தவை மிக நேர்த்தியாக எழுதியுள்ளார்.


"சண்முகன் அழகியல் கலைஞர் என்று கருதப்படுபவர்" என ஓரிடத்தில் சொல்கிறார். நான்கு பந்திகள் கொண்ட அந்தக் குறிப்பில் இந்த ஒரு வசனம் போதும் குப்பிளான் சண்முகனை முழுமையாக விளக்க என எனக்குப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷெல்லிதாசன்

# ஒரு சோடி தங்க வளையல்!



சங்கரனுக்கு, யாழ்ப்பாணத்திலிருந்து தனது தங்கையின் தொலைபேசி அழைப்பு வந்ததிலிருந்து, மகிழ்ச்சியாகவும், பலத்த யோசனையாகவும் இருந்தது.

தங்கை நிர்மலா, தனது மூத்த மகளின் பூப்புனித நீராட்டு விழாவுக்கு தனது அண்ணனுக்கு அழைப்பு விடுத்திருந்ததுடன், இரண்டு நாட்களின் முன்னமேயே சங்கரனது வீட்டுக்கு அழைப்பிதழை அனுப்பிவிட்டதாகவும், முதன்முதலில் அண்ணனுக்கு அழைப்பிதழை நாளுக்கு அனுப்பிய பின்னரே ஏனையோருக்கு அழைப்பிதழைகொடுத்ததாகவும்தெரிவித்தாள்.

தனது தங்கை தன்மேல் எவ்வளவு பாசம் வைத்திருக்கின்றாள் என்பதை அறிந்த சங்கரனுக்கு மிகுந்த பெருமையாகவும் இருந்தது.

அண்ணன் ஒன்று. தங்கை ஒன்று.

ஆமாம், நிர்மலாவுக்கு ஒரேயொரு சகோதரன் சங்கரன் மட்டுமே. அதனைப் போல சங்கரனுக்கும் ஒரேயொரு சகோதரி நிர்மலா மட்டுமே.

சின்ன வயதில் அவர்களது குடும்ப ஏழ்மை நிலையிலும் அண்ணன் தங்கை பாசத்தால் கட்டுண்டு வளர்ந்தவர்கள் அவர்கள்.

நிர்மலா தனது தாய்வழி உறவுப் பையனான கோகுலனை விரும்பி திருமணம் செய்து, யாழ். நீர்வேலியில் வசிக்கிறாள்.

கோகுலன், வாழைத் தோட்டம், மரவள்ளி, வெங்காயத் தோட்டமெனச் செய்வதால், ஓரளவு வசதியாக அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

சங்கரன், திருகோணமலை, சாம்பல் தீவில் தனது தந்தைவழி உறவுப் பெண்ணான சாரதாவை திருமணம் செய்ததுடன், நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ஒரு காரியாலய உதவியாளராக நியமனம் பெற்று பணிபுரிந்தும் வருகின்றான்.

தங்கையும் தானும் சிறுவயதில் படிக்கும்பொழுது படிப்பில் மிகுந்த கெட்டிக்காரர்களாக இருந்தும், எல்லாம் போர்நிலைமைகளால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், தந்தையைஷெல்வீச்சில் பலிகொடுத்து நிர்க்கதியானமை, போன்றவற்றால் படிப்பை தொடரமுடியாது போனமை,

தாயின் தியாகம் நிறைந்த உழைப்பு, இழப்பு என்பவற்றை நினைக்க சங்கரனுக்கு இப்பொழுதும் ஏக்கமாகத்தான் வரும்.

சங்கரனின் மனைவி சாரதா, தனது கணவனின் சொற்ப சம்பளத்துடன்,

தனது வீட்டோடு இருந்த காணியில் மரக்கறி வகைகளை உண்டாக்கியும், கோழிகளை வளர்த்தும் சிக்கனமாக குடும்பம் நடத்தியதுடன், தங்களது மூத்தமகனை படிக்கவைத்து, அவன் தற்போது கிழக்குப் பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவத் துறையில் பயில்கின்றான். இளையவன் உள்ளூர் பாடசாலையில் சாதாரண தரம் கற்று வருகின்றான்.

***

அன்று மாலை சங்கரன், கந்தோர்ப் பணிமுடிந்து தனது சைக்கிளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வந்து சேர்ந்தான். வந்தவன், வந்ததும் வராததுமாய் தனது சைபிக்கிளை முற்றத்தில் நிறுத்தி விட்டு வீட்டுக்குள்ளே நுழைந்தான். மனைவி சாரதா சமையற்கட்டில் தனது கணவனுக்குப் பிடித்தமான ஒடியல் மாப் புட்டை அவித்துவிட்டு, கருவாடு,மிளகாய் பொரியல் பொரித்துக்கொண்டிருந்தாள்.

அந்தக் கம கம மணத்தில் கிறங்கிப்போன சங்கரன் "என்ன இண்டைக்கு சாப்பாடு விசேசமா யிருக்கு"?எனக்கேட்டபடி அவளருகே வந்தான்.

"இல்லை அப்பா இண்டைக்கு உங்கடை தங்கச்சி மகளின்ரை சாமத்தியச் சடங்கு அழைப்பிதழ் வந்திருந்ததாலை வந்த புளுகந்தான்"என்றாள் சிரித்தபடி.

உண்மைதான் . சங்கரனின் தங்கை நிர்மலாவுக்கு அண்ணி சாரதாவில் இனியில்லையென்ற அன்பு. அதே போல சாரதாவுக்கும் நிர்மலா மேல் வலு விருப்பம்.

சாரதா அன்று தங்களுக்கு வந்திருந்த அழைப்பி தழை ஓடோடிப்போய் எடுத்து வந்து கணவன் சங்கரனிடம் நீட்டினாள்.

அவன் எதிர்பார்த்த அழைப்பிதழ் என்றாலும் பிரித்துப் பார்த்தான்.

வைகாசி 25ம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணி சுபவேளையில் மங்கள நீராட்டு விழா என்ற அறிவிப்பைக்கண்ட அவனுக்கு ஆனந்தம் பிடிபடவில்லை. சாரதாவுக்கும் வலு சந்தோஷமாகத்தான் இருந்தது.

ஆனாலும் தனது கணவன் அவரது மருமகளுக்கு முறை மாமன். முன்னுக்கு நின்று எல்லாவற்றையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு.

அது மாத்திரமல்ல, தனது மருமகளுக்கு எப்படியும் ஒரு நகையாவது போடவேண்டுமே என்ற கட்டாயம் சங்கரனுக்கும் மனைவி சாரதாவுக்கும் யோசனையைத் தந்தது.

முகங்கைகால் கழுவி சாப்பிட வந்த சங்கரனுக்கு சாரதா சாப்பாட்டை பரிமாறி ஆசையோடு சாப்பிட வைத்துக் கொண்டிருந்தாள்.

மிக ஆவலுடன் ஒடியல் புட்டையும் கருவாடு, மோர்மிளகாய் பொரியலுடன் சாப்பாட்டை இரசித்துச் சாப்பிட்ட சங்கரன்,

" வைகாசி இருபத்தைஞ்செண்டா இன்னும் சரியா இருபதுநாளிருக்கு..ஆனால்..."

"ஓமப்பா...அது கண்ணை மூடிக்கொண்டு இருக்க வந்திடும். மருமகளுக்கு நகை போடவேணும். அதோடை நாங்கள் அங்கை போறதெண்டா நல்ல உடுப்புகள் எடுக்கவேணும்"

"அதுமாத்திரமே, முந்தி யாழ்ப்பாணம் போறேண்டா ஒரு ஆளுக்கு போக வர அறுநூறு ரூபா போதும். இப்ப ஒரு ஆளுக்கு போகவர ரண்டாயிரம் வேணும். எங்கடைகுடும்பத்துக்குபோக்குவரத்து ஓட்டோச் சிலவெண்டு குறைஞ்சது பத்தாயிரமெண்டாலும் வேணும்".

கணவனும் மனைவியும் வரப்போகிற செலவுகள் பற்றியும் அதை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றியும் மாறிமாறிக் கதைத்துக்கொண்டிருந்தனர்.

"இஞ்சேருங்கோப்பா...உடுபிடவை போக்கு வரத்துச் சிலவுகளை நான் சமாளிக்கிறன்" என்றாள் சாரதா.

"என்ன விசர் கதை கதைக்கிறீர். எப்பிடியும் அதுக்கு ஐம்பதாயிரம் வேணும்"

"இஞ்சை பாருங்கோப்பா, உங்களுக்கே தெரியாமல் பொன்னம்மா மாமியிட்டை மாதம் ஐயாயிரம் ரூபா பன்ரண்டு மாதச் சீட்டுகட்டிவாறன். கோவிக்கா தேங்கோ.. உங்களுக்குத் தெரியாமல் இது ஒண்டுதான் செய்தனான். பல பெண்டுகள் இப்படி செய்துதான் குடும்பச் செலவுகளை சமாளிக்கிறதுகள். அதை மாதிரி நானும் சீட்டுக் கட்டினனான். ஏதாவது அந்தரம் ஆபத்துக்கு உதவுமெண்டு"

"நீர் நல்ல வேலைதான் செய்திருக்கிறீர். ஆனா..இந்தமாதம் சீட்டுக் கிடைக்குமே.?"

"கழிவுச் சீட்டுத்தானே...இந்தமாதம் பதினைஞ் சாந் திகதி சீட்டு கூறேக்கை பத்தாயிரமெண்டாலும் நான் கழிச்சு எடுப்பன். நீங்கள் யோசியாதேங்கோ."

"அது சரி, நகை வாங்க காசுக்கு எங்கை போறது. இருக்கிற லோனெல்லாம் நான் எடுத்துப் போட்டன்"

அப்பொழுது ஒரு ஆலோசனை பொறி தட்டியவ ளாய் சாரதா, "இஞ்சேருங்கோப்பா...என்ரை காப்புகள் ரண்டிலை ஒண்டு நெளிச்சும் மற்றது முறிஞ்சும் கிடக்குது.அது செய்தே பத்து வருஷத்துக்குமேலை. முறிஞ்சு நெளிஞ்சுபோனதாலை அடைவும் வைக்காமல் மிஞ்சிக்கிடக்குது. கொறணாவந்த காலத்திலை சிலவை சமாளிக்க முடியாமல் தாலிக்கொடி, காப்புகள் எல்லாம் அடைவு வைச்சு எல்லாம் மூழ்கியும் போட்டுது. நல்ல காலத்துக்கு கழுத்துச் சங்கிலி ஒண்டு. மிச்சமாயிருக்கு. அந்த உடைஞ்ச காப்புகளை தெரிஞ்ச நகைப்பட்டறை வைச்சிருக்கிறவங்களிட்டை குடுத்து அழிச்சு புதிசா ஒரு சோடிக்காப்பு செய்தால் என்னப்பா?"

தனது மனைவியின் புத்திசாலித்தனமான நல்ல ஆலோசனையைக் கேட்டபடி சங்கரன் இரவுச்சாப்பாட்டை முடித்து நிம்மதியாக உறக்கத்துக்குச் சென்றான்.

அடுத்த நாள் மனைவியிடம் அந்த நெளிஞ்சு முறிஞ்சு கிடத்த சோடிக் காப்புகளை வாங்கி பொக்கற்றில் வைத்துக்கொண்டு கந்தோருக்குப் புறப்பட்டான்.

கந்தோருக்கு வந்த சங்கரன் காலையில் தனக் குரிய பணிகளைச் செய்துவிட்டு அரை நாள் லீவுபோட கந்தோர் ஏ.ஓ விடம் தனது விடுமுறை விண்ணப்பத்தை நீட்டினான்.

"சங்கரன்...என்ன...எங்கை போகஅரை நாள் லீவு?"

சங்கரனும் அதற்குரிய காரணத்தைஏ.ஓ. மிஸ்சிஸ். மகேந்திரனிடம் கூறிநின்றான்.

"சங்கரன்..எங்கடை கந்தோரிலை வேலை செய்து பென்ஷனாய் போன மணியத்தாரை உனக்குத் தெரியு மெல்லே."

"ஓம் மடம் தெரியாமல் ...போனமாதம் அவற்றை செத்தவீட்டுக்கு கந்தோரிலை இருந்து நாங்கள் போன னாங்களெல்லே"

"ஓம்...சங்கரன்...அவர் இங்கை வேலை செய்யேக்கை வீட்டிலை பின்னேரத்திலை நகை வேலை யும் செய்யிறவர். நாங்களெல்லாம் என்ன நகை செய்யிற தெண்டாலும் அவரிட்டைத்தான் குடுக்கிறனாங்கள். சேதாரம் கூலி எண்டு ஆக்களின்ரை உயிரை வாங்காமல் சுத்தமாக அசல் இருபத்திரண்டெண்டால் இருபத்தி ரண்டு தான்...அவ்வளவு நம்பிக்கையா செய்து தாற மனிசன்.

இப்ப அவர் செத்தாப்பிறகு மகன் சிவராசா அவற்றை வேலையை அவங்களின்ரை வீட்டிலை இருந்தே செய்யிறதா கேள்வி" என்று ஏ.ஓ சொன்னதை அறிந்து கொண்ட சங்கரன், விடுமுறை அனுமதியைப் பெற்றபின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான வீதியில் அமைந்துள்ள மணியத்தாரின் மகனின் வீட்டை நோக்கி தனது சைக்கிளில் பயணத்தைத் தொடர்ந்தான்.

அது ஒரு சிறிய வீடுதான். சங்கரன் தனது சயிக்கிளை மதில் ஓரமாக நிறுத்திவிட்டு, மூடியிருந்த வாசல் கதவைத் தட்டினான். அவனது தட்டும் சத்தம் கேட்டு உள்ளே நின்ற நாய் பலமாகக் குலைத்தது. அதை அவதானித்த மணியத்தாரின் மகன்

சிவராசா வெளியே வர, சங்கரன் தான் வந்த விடயத்தை அவனிடம் கூறினான்.

சங்கரனை உள்ளே அழைத்து கதிரையில் இருக்கவைத்துவிட்டு சங்கரனிடம் விடயத்தை விபரமாகக் கேட்டான் சிவராசா.

சங்கரனும் தான் எடுத்து வந்த இரண்டு காப்புகளையும் கொடுத்து,

"அண்ணன், இந்தக் காப்புகள் செய்து பத்துப்பதினைஞ்சு வரியமாகுது. இதைப்பாத்து என்ன செய்யலாமெண்டு சொல்லுங்கோ."

சங்கரன் கொடுத்த காப்புகளை வாங்கிய சிவராசா, அதை இப்படியும் அப்படியுமா புரட்டிப் பார்த்து விட்டு, தனது நகைப் பட்டறைக்கு முன்னால் போய் சப்பாணிபோட்டு அமர்ந்துகொண்டு, அங்கே இருந்த கறுப்புக் கல் ஒன்றில் இரண்டு காப்புகளையும் உரசி, அதற்குமேலே ஒருவகை அசிட் துளிகளை விட்டுப்பார்த்து விட்டு திருப்தி கொண்டவனாய், "உங்கடை காப்புகள் செய்து பத்து வரிய மெண்டதாலையும், நெடுகப் பாவிச்சதாலையும் முறிஞ்சும் நெளிஞ்சும் போச்சு"

எனச் சொன்ன சிவராசா, தனக்குமுன்னால் இருந்த நகை எடைபோடும் தராசில் போட்டு எடை பார்த்துவிட்டு "தம்பி காப்பு ரண்டும் முக்காப்பவுணைவிட கொஞ்சம் கூட இருக்கு. ரண்டு காப்பையும் அழிச்சு புதிசாத்தான் செய்யவேணும். ஆனா தம்பி புதிசா செய்யி றேண்டா சேதாரம் கனக்க வரும். காப்பு ஒவ்வொண்டும் சரியா அரைப்பவுண் இருக்க வேணுமெண்டா ரண்டு மூண்டு கிறாம் பவுண் போடவேண்டிவரும் தம்பி"

"அப்ப அண்ணன் அதுக்கு எவ்வளவு காசு வேணும்?"

"எப்பிடியும் இப்ப பவுண் விக்கிறவிலைக்கு ஐம்பதாயிரமெண்டாலும் வேணும் தம்பி"

சிவராசா சொன்னதைக் கேட்ட சங்கரனுக்கு தலை விறைத்தது.

"தான் தன்ரை மனிசிக்கு கட்டின அஞ்சுபவுண் தாலிக் கொடிக்கே அந்த நாளிலை ஒரு லச்சந்தான் முடிஞ்சது. இப்ப இரண்டு கிறாம் வாங்க ஐம்பதாயிரம் தேவையாயிருக்கு"என தனக்குள் கேள்வி கேட்டுக் கொண்ட சங்கரன், சிவராசாவிடமிருந்து தான் கொடுத்த காப்புகளை வாங்கி பொக்கற்றில் வைத்துக்கொண்டு, "அண்ணை எதுக்கும் உங்களை நாளைக்குப் பின்னேரம் வந்து சந்திக்கிறன்" எனச் சொல்லிவிட்டு ஒரு ஏக்கப் பெருமூச்சை விட்டபடி தனது துவிச்சக்கரவண்டியை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு விரைந்தான்.

***

வீடு வந்து சேர்ந்த சங்கரன், தனக்கும் சிவராசனுக்குமிடையில் நடந்த சம்பாஷணைகளை தனது மனைவியிடம் கூறி,

"இப்ப ஐம்பதாயிரம் காசுக்கெங்கை போறது?" என ஒரு கேள்வியுடன்தனது பேச்சை நிறுத்தினான்.

"அதுதான் எனக்கும் விளங்கேல்லை" எனச் சொன்ன சங்கரனின் மனைவி சாரதா ஏதோ யோசித்தவளாய், "இஞ்சையப்பா உங்கடை தங்கச்சி எங்கடை மகன் மாருக்கு அவங்கடை முதலாவது பிறந்த நாளுக்குப் போட்ட ரண்டு சின்ன மோதிரங்களும் சும்மாதான் கிடக்குது. அதுகளை மேல்மிச்சமா குடுத்து காப்புகளைச் செய்வமே. வேறை வழியில்லை"

சங்கரனும் ஒரு பிரச்சனை தீர்ந்தமாதிரி "என்ரை மனிசிக்கும் இடைக்கிடை நல்ல ஐடியா வருகுது"என்றான்.

"சும்மா நக்கலடிக்காமல் நாளைக்கு நீங்கள் வேலைக்குப் போகேக்கை காப்புகளோடை அந்த ரண்டு சின்ன மோதிரங்களையும் கொண்டுபோக மறந்திடாதேங்கோ" என கதைக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் சாரதா.

***

அடுத்தநாள் திருகோணமலைக்கு வேலைக்கு வந்த சங்கரன், மதிய இடைவேளையில் சிவராசாவைப் போய் சந்தித்து தான் கொண்டுவந்த காப்புகளுடன் சிறிய இரண்டு மோதிரங்களையும் ஒப்படைத்தான். காப்புகளோடு வந்த ரண்டு மோதிரங்களையும் எடைபோட்டுப் பார்த்த சிவராசன் "ரண்டு மோதிரங்களும் சேர்த்து ரண்டு கிறாமும் மூண்டு மஞ்சாடியளும் இருக்குது. ஒருமாதிரிச் சமாளிக்கலாம் தம்பி" என்றவன்,

காப்புகள் என்ன டிசையினிலை என்ன அளவுகளிலை வேண்டுமென கேட்டுத் தெரிந்து கொண்டு "தம்பிக்கு எப்ப நகை வேணும்" என சங்கரனிடம் கேட்க,

"அண்ணை இண்டைக்கு ஏழாந்திகதி எப்பிடியும் இருபதாம் திகதிக்கிடையிலை தந்தீங்களெண்டா சரிதான்"

"சரி பாப்பம் தம்பி, இப்ப பவுணுக்கு ஐயாயிரம் கூலி உங்கடை போன் நம்பரை தாருங்கோ, நகை முடிஞ்சவுடனை கோல் எடுக்கிறன். செய்கூலியை தந்து போட்டு நகையை கொண்டு போங்கோ தம்பி" சரியெனச் சொன்ன சங்கரன்,தனது தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து பதிவு செய்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி தனது துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பினான்.

***

சிவராசா, சங்கரன் கேட்டுக்கொண்டமாதிரி இருபதாம் திகதிக்குள் நகையை செய்து முடித்துவிட்டு சங்கரனுக்கு அழைப்பெடுத்தான்.

சங்கரனும் நகை செய் கூலியைக் கொடுத்துவிட்டு காப்புகளை வாங்கியும் வந்துவிட்டான்.

தான் செய்து எடுத்துவந்த காப்புகளை மனைவி சாரதாவிடம் கொடுக்க, அவளும் ஆவலோடு காப்புகளை வாங்கி கையில் வைத்து அதிசயித்தபடி" ச..என்ன ஒரு டிசைன்...உங்கடை மருமகளுக்கு ஏத்தமாதிரி வடிவா செய்திருக்கப்பா. கூலிதான் கொஞ்சம் கூட..ஆனா நகை அந்தமாதிரி"

"ஓம் சாரதா....நகை செய்த சிவராசா அண்ணன் பரம்பரை நகைத் தொழிலாளி. அவற்றை தகப்பன் எங்கடை கந்தோரிலைதான் வேலை செய்தவர் நம்பிக்கையான, தரமான வேலைகாரன். அவற்றை மகன்தான் இதைச் செய்தவர்...தகப்பன் அப்படியெண்டா மகனைப்பற்றிச் சொல்லவா வேணும். உண்மையிலை காப்பு என்னமாதிரி அழகா மின்னுது"

"ஓமப்பா... எனக்கும் உந்தக் காப்பை போட ஆசையாயிருக்கு....கொஞ்சக் காலம் செல்லட்டும் இந்த நகை செய்தவரிட்டையே சொல்லி ஒரு முத்துச் சங்கிலி செய்யவேணும்"

"சரி..சரி..அதை அந்த நேரம் பாப்பம். இனி ஆக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதை இப்ப கவனிப்பம்" என மனைவியின் ஆசைக்கு முற்றுப்புள்ளி வைத்தான் சங்கரன். பவுண் விக்கிற விலைக்கு இப்போதைக்கு மனிசிக்கு சங்கிலி வாங்கிக்கொடுக்கசாத்தியப்படாதென அவனுக்குத்தானே தெரியும்.

***

சங்கரனும் மனைவி பிள்ளைகளும் இரண்டு நாட்களுக்கு முன்னமேயே யாழ். நீர்வேலிக்குச் சென்று, பிரமாண்டமான முறையில் நடந்த சாமத்தியச் சடங்கில் இருவரும் முன்னுக்கு நின்று ஒரு குறையும் வைக்காமல் நடாத்தி, தாங்கள் கொண்டுவந்த காப்புகளை மருமகளுக்குப் போட்டு அழகு பார்த்து மிகுந்த மகிழ்ச்சியோடு வீடுதிரும்பினர்.

"நல்ல காலத்துக்கு எங்களுக்கு ரண்டும் பெடியளாப் போட்டுதுகள். சா...உங்கடை தங்கச்சியும் புருஷன் காறனும் செலவளிச்சிருந்த விதத்தைப் பாத்தா தலை விறைக்குது"

"உதிலை தங்கச்சியை பிழை சொல்லாதையும். அவள் படிச்சுப் படிச்சு புருஷன் காரனிட்டை சொன்னவளாம். இப்பிடியெல்லாம் கடன் பட்டு டாம்பீகமா செலவழிக்க வேண்டாமெண்டு. மனிஷன் கேக்கல்லையாம். அவருக்கு வெளிநாட்டிலை இருக்கிற சகோதரங்கள் உதவுமெண்டு நினைப்பு. இப்பிடியெல்லாம் ஆடம்பரம் எனக்கும்பிடிக்காது...ஆனா உதிலையெல்லாம் நாங்கள் தலையிடேலுமே. மண்டபவாடகையே ரண்டு லச்சமாம். சாப்பாட்டுக்கு மூண்டுக்குமேலை முடிஞ்சுதாம்"

"உங்களுக்குத் தெரியுமே பெட்டைக்கு மேக்கப் செய்ய ஒரு லச்சமாம். பெட்டை இனியில்லை யெண்ட வடிவானவள். கண்டறியாத மேக்கப்பைப் போட்டு அசிங்கப்படுத்தினதுதான் மிச்சம். பெடிச்சிக்கு சடங்கண்டைக்கு உடுக்க சீலை உடுப்புகளெல்லாம் இந்தியாவுக்கு போயெல்லே வாங்கிக் கொண்டு வந்தவையாம். சடங்குக்கு வந்து போன ஆக்கள் எல்லாருக்கும் தங்க நிற குபேரன் சிலை. எங்களுக்கும்ஒண்டுக்கு ரண்டு சிலையள் மச்சாள் தந்தவள்...சாமியறையிலை வைச்சிருக்கிறன். இனியாவது காசு கொட்டுமோ பாப்பம்"

"அதுமாத்திரமே வீடியோக்காறங்கள் ரண்டு லச்சம் கேட்டிருக்கிறாங்களாம் அல்பத்தோடை. காசு கேட்டாப்பறவாயில்லை, அவங்கள் போட்ட ஆட்டம் சும்மாவே. அவங்கள் சொன்னபடிதானே எல்லாம். வேறை கதை பேச்சுக்கு இடமில்லை. அண்டைக்கு இரவிரவா பாட்டுக்கச்சேரியும் டான்சும். அதுக்கு எப்பிடியும் ஒரு லச்சமெண்டாலும் முடியும்"

"ஏனப்பா உப்பிடிச் சிலவழிச்சவங்கள்"?

"ஒரே ஒரு மகள்தானே...அதோட மச்சானின்ரை சகோதரங்கள், சொந்தக் காறரெல்லாம் பெரிய பெரிய உத்தியோகம். ஆனா. மச்சான் தோட்டக் காரனெண்டு இழக்காரமாம். அவங்களுக்கு தான் ஒண்டும் குறைவான ஆளில்லை எண்டு காட்டிறதுக்காக உந்த வேலை"

"அதுக்காக இப்பிடியும் செலவழிப்பாங்களே... எப்பிடியும் பதினைஞ்சு லச்சத்துக்குமேலை பாஞ்சிருக்கும்"

"எதுக்கும் விரலுக்கு ஏத்த வீக்கம் வேணும். சரி..சரி..விடும் நாங்கள் உதுகளைக் கதைச்சா பொறாமையிலை கதைக்கிறம் எண்டு குறைதான் கேக்கவரும். தங்கச்சி நிர்மலா கோலெடுத்தா உதுகளைக் கதைச்சுப் போடாதையும்...நமக்கென்ன" என சங்கரன் அந்தக் கதைகளை அத்தோடு நிறுத்திக்கொண்டான்

***

சங்கரனின் மனைவி வருடாவருடம் காளி கோவிலில் காப்பு எடுப்பதுண்டு. தான் காப்புக்கு காசு கட்டும்போது சங்கரனின் தங்கை நிர்மலாவுக்கும் சேர்த்து பெட்டிக் காப்புக்கு காசு கட்டுவது வழக்கம்.

அந்த வருடமும் காளிகோயிலில் நிர்மலாவுக்கும் சேர்த்து காப்புக்கு காசு கட்டிவிட்டு அறிவித்திருந்தாள்.

வழக்கமாக ஒவ்வொரு வருடமும் நிர்மலா தனது கணவன் கோகுலன், மகளான மிதிலாவுடனும், காப்புக் கட்டும் நாளுக்கு ஒரு கிழமைக்கு முன்னமேயே சாம்பல் தீவிலுள்ள அண்ணன் வீட்டுக்கு வந்து தங்கியிருந்து, தினமும் இரு குடும்பங்களும் சேர்ந்து காளிகோவிலுக்குப் போவதும்,

காப்புக்கட்டும் நாளில் நிர்மலா தனது அண்ணியுடன் வேளைக்கே வெகு ஆசாரமாக புதிய சேலை அணிந்து கோவிலுக்குப்போய் காவலிலிருந்து காப்பு எடுத்துவிட்டு வீடுவந்து சேர்ந்து, பெட்டிக் காப்புடன் வந்த பலகாரங்களை இருவரும் அருந்தி வெறும் நீர்மாத்திரம் குடித்து நாள் முழுவதுமான உபவாசத்தை முடித்துக் கொள்வதுடன், அடுத்த நாள் அதிகாலையிலேயே எழுந்து குளித்து முழுகி, பல மரக்கறிவகைகளுடனான பாறணைச் சமையல் செய்து, அண்டை அயல்களெல்லாம் கொடுத்து உண்டு மகிழ்ந்திருந்து செல்வதுண்டு.

ஆனால் இவ்வருடம் நிர்மலா வழமைக்கு மாறாக விரதத்தன்றே அண்ணன் வீட்டுக்கு வந்து காப்பை எடுத்ததுடன், அன்றே புறப்பட ஆயத்தமானதுடன், அண்ணனுடனோ அண்ணி பிள்ளைகளுடனோ எதுவித பேச்சும் இல்லாமல் மெளனம் சாதித்தபடி யாழ் செல்லப் புறப்பட ஆயத்தமாகியதைக் கண்ட அண்ணனும் அண்ணியும் பாறணை முடித்துவிட்டு செல்லும்படிபலமுறை கேட்டும் மறுப்புத் தெரிவித்துவிட்டு,அண்ணனிடம் திருகோணமலை பஸ்நிலையம் சென்று யாழ்ப்பாண பஸ்பிடிக்க ஒரு ஆட்டோவை வரவழைக்கச் சொன்னாள். ஓட்டோவும் வந்தது. அதில் ஏறமுதல் தனது அண்ணியை வரவழைத்து வீடடுக்குள்ளே சென்றவள், தனது கான் பாக்கைத் திறந்தது, அதனுள்ளேயிருந்து ஒரு கடித உறையை எடுத்து அவளின் கைகளுக்குள் அமத்தி வைத்துவிட்டு வந்து, தனது அண்ணனுடன் ஓட்டோவில் ஏறி பயணத்தைத் தொடர்ந்தாள்.

தனது மைத்துனி தந்துவிட்டுப்போன கடித உறையை அவசரமாக சாரதா திறந்து பார்த்தாள். அதற்குள் தாங்கள் மருமகளுக்குச் செய்து போட்ட வளையல்கள் இரண்டும் இருப்பதைக் கண்ட சாரதா திடுக்குற்றவளாகி, அந்தக் காப்புகளுடன் இருந்த ஒரு நீண்ட கடிதத்தையும் கண்டு அதில் என்னதான் இருக்கிறதென்பதையும் வாசித்தாள்.

அந்தக் கடிதத்தை நிர்மலா அண்ணனுக்கு எழுதியிருந்தாள்.

**அன்புள்ள அண்ணனென அழைக்கமுடியாத அண்ணனுக்கு,**

**அண்ணன் நீங்கள் செய்த துரோகச் செயலால் எங்களது குடும்ப மானமே கப்பலேறிவிட்டது. நீங்கள் உங்கள் மருமகளுக்குச் செய்துபோட்ட காப்புகள் இரண்டுமே பதினைஞ்சு கரட்டுமில்லாத வெறும் செம்புகலந்த நகையளாம். என்ரை மனிசன் வலு ஆடம்பரமாய் செய்த சாமத்தியச் சடங்கால் பத்து லட்சத்துக்குமேலை கடன் வந்து எல்லா நகையளும் பாங்கிலை அடகு வைச்சு, கடைசியில் ஒரு நாள் அவரது தோட்ட வேலைக்கு ஐம்பதாயிரம் காசு வேணுமெண்டதுக்காக உங்கடை மருமகளுக்கு நீங்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையாகப்போட்ட காப்புகளையும் மகளிட்டையிருந்து பறிச்செடுத்து பாங்கிலை அடகு வைக்கப் போய் அவமானப்பட்டதுதான் மிச்சம். அவங்கள் அந்தக் காப்புகள் ரெண்டையும் சோதிச்சுப்பாத்து கரட் குறைஞ்ச போலி நகையெண்டு அதுகளை அவற்றை முகத்திலை தூக்கி எறிஞ்சு போட்டாங்கள். அந்தக்கோவத்திலை வீட்டுக்கு வந்த வேகத்திலை ஒருநாளும் கைநீட்டி அடிக்காத மனிசன் என்னை அடியடியெண்டு அடிச்சதோடை, எங்கடை குடும்பத்தையும் கேவலமாக பேசி, இனிமேல் உங்கடை உறவும் வேண்டாமெண்டு சொல்லிவிட்டார். ஏனண்ணை இப்படிச் செய்தனீங்கள். ஏலாட்டி சும்மா இருந்திருக்கலாமே. ஆர் உங்களை நகை போடத் தெண்டிச்சது. இனிமேல் காளி கோயிலிலை காப்பு எடுக்கவும் என்னை எதிர்பார்க்க வேண்டாம். இதுதான் கடைசி முறை என நினைச்சுக் கொள்ளுங்கோ. நான் பட்ட அவமானம் என்னோடு போகட்டும்.

உங்களது மறக்கப்பட்ட தங்கை,
நிர்மலா.

நிர்மலா எழுதிய கடிதத்தை வாசித்த சாரதாவுக்கு அழுகை அழுகையாக வந்ததுடன், கணவன்மேல் இனியில்லையென்ற கோபம் பொங்கி எழுந்தது.

தங்கையை திருகோணமலை பஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்ற சங்கரன், யாழ் பஸ்சில் அவளை ஏற்றி அனுப்பிவிட்டு கவலையுடன் வீடு வந்து சேர்ந்தான்.

கணவன் வருவதை எதிர்பார்ப்புடன் காத்திருந்த சாரதா அவனைக் கண்டதும் தனது கையில் இருந்த காப்புகளையும், கடிதத்தையும் கணவனின் மீது தூக்கி வீசி எறிந்துவிட்டு படுக்கையில் போய் விழுந்து கேவிக் கேவி அழுதுகொண்டிருந்தாள். மனைவியின் செய்கையை சற்றும் எதிர்பாராத சங்கரன், மனைவி தன்னை நோக்கி வீசியெறிந்த காப்புகளையும் கடிதத்தையும் நிலத்திலிருந்து எடுத்து, தனக்கு தங்கை எழுதிய கடிதத்தை வாசித்தான். அதை வாசித்தவுடன் எதற்கும் அழாத அவன் வாய்விட்டுக் கதறிக் கதறி அழுதான்.

தன்னை ஏமாற்றி இப்படியானதோர் அவலத்துக்குள் சிக்க வைத்த சிவராசனை தொலைத்துக்கட்ட வேண்டுமென்ற வெறி அவனிடம் மேலெழுந்தது. அந்த சோடி வளையல்களை அலட்சியமாக எடுத்து தனது பொக்கெற்றில் திணித்த அவன், சுவர் மணிக்கூட்டில் நேரத்தைப் பார்த்தான், பிற்பகல் நாலுமணியை தாண்டிக் கொண்டிருந்தது.

மனைவி சாரதாவிடம் எதுவுமே கூறாது தனது துவிச்சக்கர வண்டியில் ஏறி திருகோணமலைக்கு புயலாகப் பறந்தான் சங்கரன்.

எப்படி இவ்வளவு விரைவாக வந்து சேர்ந்தானோ தெரியாது. நேரே நகைசெய்து தந்த சிவராசன் வீட்டு படலையில் இடித்தமாதிரி துவிச்சக்கரவண்டியை படாரெனச் சாத்திவிட்டு, கதவை படார் படாரென பலமாகத் தட்டினான்.

ஒரு சத்தத்தையும் காணவில்லை.

"டேய் சிவராசா வெளியிலை வாடா, உன்ரை அப்பன் நேர்மையானவனெண்டதாலை உன்னையும் நான் சுத்தமானவனெண்டு தேடிவந்து ஏமாந்ததுக்கு என்னைத் தான் செருப்பாலை அடிக்க வேணும்.. டேய் வெளியிலை வாடா.. இந்த நகையைச் செய்த உன்ரை கையை இணைக்கு நொருக்காமல் விடமாட்டன். வாடா வெளியிலை" என பலமாக கத்தியபடி நின்ற சங்கரன், இவ்வளவு கத்தியபின்னும் வீட்டுக் கதவு திறக்கப்படவோ, சிவராசாவை வெளியே காண முடியாது போனதாலும், அவனது வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் கடையில் சிவராசனைப் பற்றி விசாரித்தான்.

அந்தக் கடைக்காரன் சொன்னதைக் கேட்ட சங்கரன் அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு நிலத்திலே குந்திக்கொண்டான்.

"நகைப் பட்டறை வைச்சிருந்த சிவராசனோ... அவன், தான் இருந்த வீட்டையும் வித்திட்டு வெளிநாடு பறந்திட்டான் தம்பி. பலபேரிட்டை தாலிக் கொடி,சங்கிலி, காப்புகளுக்கு பவுணாயும் லச்சக் கணக்காய் காசாயும் வாங்கிக் கொண்டு அவன் வெளிநாடு பறந்து ஒரு மாசத்துக்கு மேலை ஆச்சு தம்பி. உங்கை பல சனம் இரவு பகலா வந்து அவனை தேடி விசாரிச்சபடி. வாற ஆக்களுக்கு வகை சொல்லியே எனக்கு அலுத்துப் போச்சு. தம்பி நீயும் ஏதாவது நகை செய்யிறதுக்கு அவனிட்டை ஓடர் குடுத்தனியே"

கடைக்காறர் கேட்டது சங்கரன் காதுகளில் விழுந்தால்தானே. மயக்கத்திலிருந்து அவன் இன்னும் விடுபடவில்லை.

(கற்பனை கலந்த உண்மை)

---

# ஹைக்கூ கவிதைகள்

கவியும் இரவு
கருமை தட்டிக் கிடக்கிறது
கடலின் அமைதி

மரணம்
எவ்வளவு அழகு
அந்திநேரச் சூரியனுக்கு

சலசலக்கும் அலைகள்
முணுமுணுத்தபடி
கரையில் படகுகள்

உதிர்ந்த பிறகும்
பறந்து கொண்டிருக்கிறது
ஒற்றை இறகு

அதிக வேலை
அதிக அசதி
விடுமுறை நாளில் மனைவிக்கு

வாழ்வில் பல வினாக்கள்
பதில் தருகிறது
பேசத்தெரியாத காலம்

ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

தேடி வந்து
தலை கோதுகின்றது
மரங்களைக் காற்று

பிடுங்கி எறிந்த வலி
மீண்டும் உருவாகும்
இறக்கைகளோடு புதுவாழ்வு கழுகுக்கு∴

தாராள குணம்
காலி கலயம் நிறைக்கிறது
குடிசை வீட்டு மழை

பெரும்பொறுமை
அடைகாக்கிறது
விதைகளை பூமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுரை - 500.00




அணிந்துரை - 500.00



கட்டுரை - 500.00


சிறுகதை - 800.00



கட்டுரை - 500.00



கவிதை - 500.00



சிறுகதை - 750.00




குட்டிக்கதை - 250.00



நாடகம் - 200.00



சிறுகதை - 750.00



கட்டுரை - 500.00



கட்டுரை - 750.00


கவிதை - 400.00



கட்டுரை - 1800.00



சிறுகதை - 1200.00




கட்டுரை - 400.00



சிறுகதை - 750.00



நாவல் - 800.00




கட்டுரை - 500.00


கட்டுரை - 250.00




கட்டுரை - 600.00


நாவல் - 600.00


கட்டுரை - 600.00



அறிவியல் கதைகள் - 500.00



நாவல் - 350.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுரை - 200.00



சிறுவர்நாவல் - 300.00




சிறுகதை - 500.00




சிறுகதை - 500.00



கவிதை - 300.00



கட்டுரை - 400.00



கட்டுரை - 500.00



கட்டுரை - 800.00



சிறுகதை - 500.00




நாவல் - 750.00



கட்டுரை - 600.00



சிறுகதை - 500.00





நாவல் - 2000.00



கட்டுரை - 500.00


நாடகம் - 500.00


கட்டுரை - 250.00


கட்டுரை - 250.00


கட்டுரை - 200.00


கட்டுரை -250.00


கட்டுரை - 200.00



வாய்மொழி - 200.00



கட்டுரை - 200.00



கட்டுரை - 450.00



கட்டுரை - 200.00



கட்டுரை - 300.00




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யே.கிறித்துறாஜா

# ம(னி)தனின் கணக்கு

புதுப்புனல்

யே.கிறித்துறாஜா
பேராதனைப்
பல்கலைக்கழகத்தில்
தமிழ்த்துறையில் கல்வி
கற்கும் 3 ஆம் வருட
மாணவன் அவரை
அறிமுகம் செய்து ஜீவநதி
மகிழ்கிறது.




காத்திருப்பு நிலையத்தினுள் அமர்ந்திருந்தவாறே வெளியில் நிற்கும் பொலிஸாரது வாகனத்தையும் அதற்குள் இருக்கும் பொலிஸ் அதிகாரியையும் தனது சிவந்த கண்களால் பார்த்துக்கொண்டிருந்தான், மதன். தனது நிலைமையினைச் சாதகமாகப் பயன்படுத்தி தன்னிடமே சுரண்ட நினைத்தவர்களை, தனது விட்டுக்கொடுக்காத மனதால் வென்றவனாக இருந்தாலும் இன்றைய பயணம் தந்திருக்கும் சிக்கல்களை எண்ணி வேதனைப் பட்டான், அவன்.

முதல் படகில் சென்று விடலாம் என்ற எதிர்பார்ப்புடன் பேருந்திலிருந்து வேகமாக இறங்கியிருந்தாலும் நூறுபேருக்கு பின்னரே வரிசையில் இடம் கிடைத்தது. முதல் படகில் போவதற்கு முட்டிமுரண்டு அனைவரும் போகும்போது பின்னுக்கு அகப்பட்டுக்கொண்ட இவனால் ஏதும் செய்துகொள்ள முடியவில்லை. பின்பக்கத்தால் ஓடிச்சென்று, தன்னிடம் அடிக்கடி பொருள் வாங்கிச் செல்லும் பொலிஸாரைச் சந்தித்து விடயத்தைக் கூறி உதவி செய்யும்படி கேட்டான். அதற்கு பொலிஸ்காரன் கேட்ட கூலி இன்றைய பயணச் செலவை விட அதிகமானதால் நீங்களும் வேண்டாம், உங்கள் உதவியும் வேண்டாம் எனக்கூறி திரும்பி வந்து வரிசையின் இடையில் புகுந்து கொண்டான்.

வடதாரகைப் படகில் ஏறியவர்களின் தொகை சரியாக நூறாகவே,

"சீயதெனெக் னெகபு நிசா வோட்டெக்க பிரிலா. ஓகே யன்ன பே, ஒய பேனவனே, அனித் வோட்டெக்க எனகம் இன்ன"

என்றபடி செல்லும் வழியை அடைத்தனர், கடற்படையினர். அவர்கள் சொல்லுகின்ற மொழி விளங்கவில்லை என்றாலும் நடக்கின்ற விடயங்களைக் கொண்டு நிலைமையைப் புரிந்துகொண்டனர், மக்கள். மதனும் அதனை விளங்கிக்கொண்டவனாக சென்று அமர்ந்து கொண்டான். அடுத்த படகு புறப்படும் வரையும் இங்கேயே காத்திக்கவேண்டிய நிலை ஐம்பது பேருடன் சேர்த்து மதனுக்கும் ஏற்பட்டுவிட்டது. அவன் சோர்ந்து அமர்ந்துகொண்டான். எனினும் அவனது கண்கள் சோரவில்லை.

"ஒரு உதவிதானே கேட்டன். அதிகாரமுள்ளனீங்க அவசரத்துக்கு உதவுவீங்க எண்டு கேட்டா எங்கிட்டயே பேரம் பேசுறீங்க" என்று தனக்குள் தானே பொலிஸாரைத் திட்டிக்கொண்டான்.

கடலலைகளைக் கிழித்துக்கொண்டு வடதாரகைப் படகு பயணப்பாதையின் அரைவாசிக்குச் சென்றுவிட்டது. துறைமுகக் காத்திருப்பு நிலையத்தில் இருப்பவர்கள் ஒருவர் மாறி ஒருவர் குசுகுசுத்தபடியே இருந்தனர். அவர்களால் ஏதும் செய்ய முடியவில்லை. துறைமுகத்திற்கு வந்து ஒரு மணித்தியாலயத்திற்கு மேலாகவும் காத்திருக்கின்ற கடினமான மனநிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்திருக்கின்றனர் அனைவரும். அடுத்த கட்ட நடவடிக்கைகளும் ஆயத்தப்பாடுகளும் ஒருபக்கம் நிகழ்ந்த வண்ணமே இருந்தன. எரிபொருள் கொள் கலனோடு ஒருவர், அதை சரியாக ஊற்றுகின்றாரா என்று பார்க்க இன்னொருவர் என துறைமுகத்தில் துரித வேலை இடம்பெற்றுக்கொண்டிருந்தது. காத்திருப்பு நிலையத்தில் இருப்பவர்கள் நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தனர். வீண் ஊர்க்கதைகள் அங்கு இடம் பெறவில்லை. எனினும், தவறவிட்ட படகினை யும் செல்லவேண்டிய படகினையும் பற்றி தாறுமாறாகப் பல கதைகள் இடம்பெறாமலுமில்லை.

மத்தியில் நடந்த கலியாண வீட்டிற்கும் மேற்கில் நடந்த பூப்புனித நீராட்டு விழாவுக்குமாக வந்திருந்த சனம் முழுவதும் துறைமுகக் கட்டடத்தை நிறைத்து நின்றனர்.

"இதானப்பா ஊருக்கு வாற இல்ல, வ்ாறதிலயும் போறதிலயுமே மனுசன் படாதபாடு படவேண்டிக் கிடக்கு" முல்லை மணியின் ஆதங்கம் இப்படியிருந்தது.

"இவக நேவிக்காறர் எல்லாம் தங்கட இஸ்ரப் படி தான் செய்வினம். சிலவேளை நூறு சனத்துக்கும் அதிகமா ஏத்துவினம். சிலவேளை இப்பிடி மறிச்சுப் போடுவினம். இதே தங்கள இனஞ்சனம் எண்டவுடன எப்பிடியாச்சும் சமாளிச்சு ஏத்தி அனுப்பிப்போடுவினம். இஞ்ச பிறந்தது பிழயா இல்ல இப்பிடிப் பிறந்தது பிழயா எண்டுதா தெரியல" என்று தன்கருத்தையும் சேர்த்துக் கொண்டாள், அகிலாண்டேஸ்வரி.

"மழையெண்டாலும், மலையடிக் காத் தெண்டாலும், நனையாமப் போகக்கூடிய படகில வசதியானவங்களும், போறபோக்கிலேயே தண்ணிய வாரி வைக்கிற இந்த சமுத்திரதேவாவில நம்மளப்போல சனங்களும் போறது எவ்வளவுகாலம் நீடிக்குமோ?" இப்படி தனது ஆதங்கத்தைப் பேசினார் வன்னிச் சண்முகம்.

"இந்த வள்ளம் எப்ப வெளிக்கிட்டு நாம எப்பபோய் வீடு வளவ சேர்றதோ" என்றபடி சலித்துக் கொண்டான், மாங்குள மருதன்.

இப்படியாக சனங்கள் தங்கள் தங்கள் பிரச்சினை களைப் பேசிக்கொண்டிருக்கின்றனர். என்னதான் நாடென்றாலும் ஊரப்போல வருமா? என்னதான் ஊரென்றாலும் வீட்டப்போல வருமா? என்ற வார்த்தைகள் இவர்களுக்கும் பொருந்தும் தானே.

ஏனையவர்களும் தங்கள் அருகில் இருப்பவர் களுடன் கதைகளைத் தொடர்ந்தனர்.

தற்போது வரிசையில் பத்தாவதாக அமர்ந் திருந்தான் மதன். வெள்ளை மேற்சட்டை, கறுத்த நீளக்காற்சட்டை என வழமைக்கு மாறாகக் கோலம் பூண்டிருந்தான். இன்று முதலாவது வழக்கு நாள். சரியாக 9.30க்கு வந்துவிடுவேன். அந்த நேரமே வழக்கை நடத்தித்தருமாறு கேட்டு முற்பணமும் கட்டி சட்டத் தரணியுடனான எல்லா ஏற்பாடுகளையும் முடித்து விட்ட நிலையில் இன்றைய பயணம் இப்படி சிக்கலில் வந்துநிற்கிறது. சட்டச்சிக்கல் ஏற்படக்கூடாது என்பதற் காக முதல் படகில் செல்வதற்கு எடுத்த முயற்சியும் இவனுக்குப் பயன்தரவில்லை.

வாகனத்திற்கான உதிரிப்பாகத்தை வாங்கச் செல்லும் நந்தன் போலவோ, மகனை அழைத்துவரச் செல்லும் ஆஸ்பத்திரி சாந்தன் போலவோ உத்தியோக அடையாள அட்டையைப் பயன்படுத்தி முதல் படகில் செல்லும் பாக்கியமோ, தகுதியோ இவனிடம் ஏது. பெரியாஸ்பத்திரிக்கு செல்லவேண்டும் என்று கூறி லாவகமாக அனுமதியைப் பெற்றுக்கொண்ட யுவானிஸ் போல சிங்களமும் அறிந்திருக்கவில்லை. நீதி மன்றத்தில் சரியான நேரத்தில் நின்றாக வேண்டும் என்ற தகவலைச் சரியாக எடுத்துச் சொல்வதற்கேற்ற யாரையும் இவனுக்கு தெரியவுமில்லை. வாடிக்கைக்கு வரும் ஒரு சில பொலிஸாரோ கதைத்துவிடவேண்டுமானால் நான்கு பொருள் தருமாறு பேரம்பேசினர். இப்படியிருக்க குறிப்பிட்ட தொகையினரை மட்டும் ஏற்றும் படகில் இவன் எப்படி ஏறிச்செல்லமுடியும்.

ஒரு பக்கம் கடலையும் மறுபக்கம் கற்பகிர் களையும் மாறி மாறிப் பாத்தவாறே இன்றைய நாளின் ராசியின்மையைப் பற்றி யோசித்தபடி இருந்தான், இவன். "மதன், எங்கப்பா போறாய்" என்று கொன்ஸ்ரைன் கேள்வி எழுப்பியவாறே மதனின் அருகில் வந்து அமர்ந்துகொண்டான்.

"ஊர்காவத்துறைக்குப் போவம் எண்டு வந்தன். முதல் லோஞ்சியில சனம் கூட எண்டதால மிச்சப்பேர மறிச்சுப்போட்டாங்க, அதான் மற்ற வள்ளம் வெளிக் கிடுற வரைக்கும்....." என்றான் மதன்.

"அது சரி" என்றபடி கொன்ஸ்ரையின் தன் கதையையும் நிறுத்திக்கொண்டான்.

கொன்ஸ்ரைனுக்கு மதனைப் பற்றி நன்றாகவே தெரியும். அவனது குலம், கோத்திரம் மட்டுமல்ல, குந்தியிருக்கும் இடத்தில் எதை யோசிப்பான் என்பது வரைக்கும் தெரியும். இப்போது மதன் எங்கு பயணம் போகிறான் என்பதும் நன்றாகவே தெரியும். அதனால் தான் ஊர்காவற்றுறைக்குப் போவதாகச் சொன்ன வனிடம் ஏன்? எதற்கு என்ற கேள்விகளைக் கேட்க வில்லை.

ஐந்து நாளைக்கு முன்னால் பத்திரிகையில் வெளிவராத சிறப்புச் செய்தியாக வலம் வந்தது மதன் பற்றிய செய்திதானே. பிறகு எப்படி அவனிடமே விசாரிக்க மனம் உந்தும்.

பொலிஸார் வலை விரித்து தேடுகிறார்கள் என்று தெரிந்தும் பயமின்றி சாராயம் கடத்தும் தைரியம் தன்னிடம் மட்டுமே உள்ளதாகப் பீத்திக்கொள்வான், மதன். தன்னைப் போல் பலர் இத்தொழிலைச் செய்தா லும் தானே இத்தொழிலில் சக்கரவர்த்தி என்று பெருமை கொள்வான். ஒரு போத்தலுக்கு அறுநூறு அல்லது எழுநூறு ரூபாய் என்றால் நாள் வருமானம் ஆறாயிரத் துக்கு மேலாக கிடைக்குமல்லவா. வருமானம் கிடைக் கின்றது என்றாலும் போத்தல்களைக் கொண்டுவந்து சேர்ப்பதில் படாதபாடு படவேண்டியிருந்தது. பிடி பட்டால் வேறு கதையின்றி வழக்குப் பதிந்து விடு வார்கள். இந்தச் சிக்கலைச் சமாளித்து வியாபாரம் செய்கிறவனுக்கு இந்த வருமானம் போதுமானது இல்லையென்றுதான் கூறவேண்டும். சாராயம் விற்பனை செய்கிறவர் என்று அறிந்தாலே பொலிஸார் அடிக்கடி வீட்டுப்பக்கம் வருவதும், வெருட்டி லஞ்சம் கேட்பதும், நாளுக்கு ஒரு போத்தல் தட்சனை கேட்பதும் பெரு வழக்காக இருந்தன. இவற்றையெல்லாம் சமாளித்து லாபம் அரைவாசி நட்டம் அரைவாசி என்று வியாபாரம் செய்தாலும் இடையிடையே பொலிஸாரிடம் மாட்டிக் கொள்ள வேண்டியிருந்தது.

கைநீட்டி வேண்டிய சாராயத்திற்குக்கூட விசுவாசமாக வேலைசெய்யாத பொலிஸ்காரர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதன் வெறுத்தான். அரசாங்கம் வழங்குகின்ற மாதச் சம்பளத்திற்கு ஏற்ற வேலையை செய்யாவிட்டால் கூட தான் கொடுத்த போத்தல் சம்பளத்திற்கு ஏற்ற வேலையை செய்திருக்கலாமே என்று கேள்வி எழுப்பு வான். தனக்குப் பாதுகாப்பாய் இருந்து என்ன பிரச்சினை வந்தாலும் பார்த்துக்கொள்வதாக வாக்குத் தந்துவிட்டு தன்னையே சாராயத்தோடு கைதுசெய்து வழக்கெழுதிய பொலிஸார் மீது அவனுக்கு மிகுந்த கோபம்.

ஊருக்குள் அடிக்கடி கொண்டாட்டங்கள் இடம்பெறுவதனால் வியாபாரம் நல்ல வண்ணமே போய்க்கொண்டிருந்தது. விற்பனைக்கு ஏற்ற கொள்வனவை செய்வதற்குப்போய் கையும்மெய்யுமாக அகப்பட்டுக்கொண்டான் அன்று. வலை மூட்டைக்குள் இருந்தவை, கைப்பைக்குள் இருந்தவை என மொத்தம் பன்னிரெண்டு போத்தல்கள். மாவிலித்துறை முகத்திலேயே பொலிஸார் மடக்கிப்பிடித்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்றனர்.

ஐந்து நாட்களில் ஊர்காவற்றுறை நீதி மன்றத்தில் வழக்கு என முடிவைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பும்போது இரவு பன்னிரெண்டு மணியாகி விட்டது.

இந்தச் செய்தியை அறியாத ஆட்களில்லை. அதனால்தான் ஊர் காவற்றுறைக்குப் போவதற்கு வந்ததாகக் கூறியவனிடம் ஏன் என்று கொன்ஸ்ரையின் திரும்பக்கேட்கவில்லை.

ஏற்கனவே ஏழு மணிப் படகினைத் தவற விட்டாகியது. இப்போது எட்டு மணியாகிவிட்டது. இனிப் புறப்பட்டால்கூட உரிய நேரத்திற்கு ஊர் காவற்றுறை நீதிமன்றத்தை அடைவது சாத்தியமா என்ற யோசனையிலும் அவனை இன்னொரு யோசனை வெகுவாக அமைதிப்படுத்தியது.

ஊரில் மதுக்கடை அமைப்பதற்கு தனியார் விடுதி ஒன்றிற்கு அனுமதி அளிக்கப்பட்ட செய்தி ஊர் முழுவதும் பாரிய பேசுபொருளாக இருந்தது. மதுபானசாலையோ சினிமாத் தியெட்டரோ இல்லாத ஊர்: எங்கள் ஊர் என மார்தட்டிய ஊர்மக்கள் இந்த அனுமதியின் பின்னர் கிளர்ந்தெழுந்து போராட்டங் களில் ஈடுபட்டனர்.

மதுபானசாலை அமைப்பதற்கு எதிராக நடைபெறுகின்ற போராட்டங்களில் கலந்து கொண்டு அதற்கெதிராகப் போராடுமாறு தனது மகனிடமும் மகளிடமும் கூறியிருந்தான்.

அவர்களும் போராட்டங்களில் கலந்து கொண்டு "நற்குடியை அழிக்கும் குடி நம் தீவிற்கு வேண்டாம்" என உரக்கக்கத்தி அப்பாவின் கட்டளைக்கு ஏற்றபடி நடப்பவர்கள் என்பதை நிரூபித்தனர். எனினும், அனுமதி அளிக்கப்பட்ட விடயத்தில் மாற்றம் ஏற்படவில்லை. ஊரை உறங்கவிடாமல் அனுதினம் பேசப்பட்ட இந்த விடயம் மதனின் உறக்கத்தையும் கலைத்தெறிந்தது.

மதுபானசாலை ஒன்று திறக்கப்பட்டால் தன்னுடைய வியாபாரம் சரிந்துவிடும் என்ற பயம் அவனை ஆட்கொண்டது. இருக்கின்ற பிரச்சினை களோடு இந்தப் பிரச்சினைவேறு அனுதினம் இவனை அதீத யோசனைக்குத் தள்ளுவது முண்டு.

கண்களை மூடி ஆழ்ந்த யோசனையில் இருந்தவனை நித்திரை கொண்டுவிட்டான் என்று நினைத்து "மதன் வள்ளம் வெளிக்கிடப்போகுதாம், எழும்பு தம்பி" என்று சண்முகத்தார் தட்டிவிட்டு நடந் தார். சமுத்திரதேவா வள்ளம் தயார்நிலையில் இருந்தது. அருகில் குமுதினிப்படகு நங்கூரமிடப்பட்டிருந்தது.

அனைவரது கண்களும் குமுதினிப் படகினை நோக்கியிருக்க சமுத்திரதேவாப் படகு தனது பயணத்தை ஆரம்பித்தது. வள்ளத்தில் இருப்பவர்கள் கேட்டு ரசிக்கும் வண்ணம் நாற்பது வருடத்திற்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்களை சுவார்ஸயமாகக் கூறினார், முருகேசு அண்ணன். குமுதினி என்று அந்தப் படகிற்கு பெயரிட்டது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த க.பொ.ரத்தினம் என்பதிலிருந்து அது, அவரின் மனைவியின் பெயர் என்பது வரைக்கும் எத்தனை கதைகள். இக்கதை சொல்கின்ற வாக்கிலேயே கிளி நொச்சி, முல்லைத்தீவு வாழ் சொந்தங்கள் பண்டைய கதைகளை இணைத்துவிட மறக்கவில்லை. நடைபெற்ற கதைகளை நகைச்சுவையோடு சொல்வது ஊரவர் களுக்கே இருக்கும் விசேட பண்பு. இவை அனைத்தை யும் கேட்டவனாய் மதனும் அமர்ந்திருந்தான்.

ஒவ்வொரு அலைமேவலுக்கும் கடல்நீர் படகுடன் மோதுண்டு விளையாடவே மதன் உட்பட பலர் பகுதியளவில் நனைந்துவிட்டனர். வள்ளக் காரரிடம் ரூபா இருநூறைக் கொடுத்த பின்னர் சில்லறையாக ரூபா நான்காயிரத்து எண்ணூறு மதனின் கையில் இருந்தது. அதை சட்டைப்பையில் இட்டுக் கொண்டு இறங்குதுறையில் சட்டெனக்குதித்து பேருந்தில் ஏறினான். ஒரு மணித்தியாலய பேருந்துப் பயண முடிவில் ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகத்தை அடைந்தான் மதன்.

"அடேய் மதன். ரெண்டாவது லோஞ்சியில வந்தியோ. இங்கதான் நீயும் வெளிக்கிட்டனி எண்டு சொல்லி இருந்தா நேவிக்காரனோட கதைச்சு முதல் லோஞ்சியில வாறமாதிரி செய்திருப்பேனேடா"

என்றபடி தனது வீரப்பிரதாபங்களோடு யுவானிஸ் முன்னுக்கு வந்துநின்றான்.

"நான் உங்கள மாவிலியில காணல, கண்டிருந்தா சொல்லியிருப்பேன்" என்றபடி தன்வேலையைப் பார்க்க விரும்பினான்.

அவனது கண்கள் சட்டத்தரணியைத் தேடும் பணியில் மும்முரமாக காணப்பட்டது.

ஒருவழியாக சட்டத்தரணியைக் கண்டு பிடித்துப் பேசும்போதுதான் அவனுக்குத் தெரிந்தது, கூடிய விரைவில் மீண்டும் ஒரு பயணம், அதே மக்களுடன், அதே படகில் பயணிக்க வேண்டும் என்று.

வழக்குக்கு வராததற்கு ஒரு கட்டணம், சட்டத்தரணிக்கு ஒரு கட்டணம், பயணச் செலவு என்று கூட்டிப்போட்டான் மனதில். அந்தப் பொலிஸ் காரனுக்கு நான்கு போத்தல்கள் கொடுத்திருந்தால் இதனைவிட செலவு அதிகமாக வந்திருக்கும் என்று எண்ணியபடியே தனது தற்போதைய முடிவுக்கு வந்தான்.

இன்றைய பயணச்செலவை ஈடுசெய்து அவனது வியாபாரம் சீர்பெற வேண்டுமானால் கட்டாயம் இன்று நான்கு சாராயப் போத்தல்களை இறக்குமதி செய்தே ஆகவேண்டுமாம்.

இதுதான் இப்போதைக்கு ம(னி)தனின் கணக்காக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன்

# 8 முடிவைத் தொடுவாய் முயன்று

மனிதர்களோடு பழகும்போது, "நீங்கள் தர்க்க சாஸ்திரம் கற்ற உயிரிகளோடு பழகுவதாக நினைக்க வேண்டாம். உணர்வும் உணர்ச்சியும் கொண்டவர்களோடு பழகுகிறீர்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள்." என்று அமெரிக்க எழுத்தாளராகவும் விரிவுரையாளராகவும் இருந்த "டேயில் கானெர்கி" 1950களுக்கு முன்னரே கூறினார்.

"உணர்வு நுண்மதி" தீர்மானம் எடுத்தலில் பெரிய செல்வாக்குச் செலுத்தும் காரணி. "உணர்வு நுண்மதி" என்றால் என்ன? "ஒருவர் தனது சொந்த உணர்வுகளையும் மற்றவர்களுடைய உணர்வுகளையும் இனம்கண்டு, விளங்கிக்கொண்டு, கையாளும் திறன் என்று அதனை வரைவிலக்கணப் படுத்தலாம். உணர்வு நுண்மதி தொடர்பாக நாம் திருப்தியடையக்கூடிய விடயம் என்னவென்றால், அதன் விருத்திக்குத் தேவையான திறன்களைக் கற்றுக்கொள்ளலாம், அதன் பல்வேறு கூறுகளையும் வளர்த்துக்கொள்ளலாம் என்பதே!

உணர்வுகள், உணர்ச்சிகள் தொடர்பாகச் சிந்திக்கிறபோது, "உணர்வு நேர்மை" என ஒரு விடயம் நினைவு வரும். உணர்ச்சிகள் விலங்குகளிலும் காணப்படுபவை தான். ஆயினும் கூர்ப்பின் உச்சியில் உள்ள மனிதனின் உணர்ச்சிகள் பொதுவில் மிகச் சிக்கலானவை. முதல் நிலை உணர்ச்சி ஒன்று தோன்றினால் தொண்ணூறு செக்கன் வரை நீடிப்பது இயல்பு. அதன்பின் நடக்கும் விடயங்கள்தான் சிக்கலோ சிக்கல்!

உணர்ச்சிகள் தன்னாட்சி உடையவை. தம்மைத் தொமே காதலிப்பவை. ஏறியும் இறங்கியும் அலை போலத் திரும்பி வருபவை. கோபம் கொண்ட ஒருவர் கத்துவதும், சிறுதூரம் விலகிச் செல்வதும், திரும்பவந்து கத்துவதுமாக இருக்கும் நடத்தைக் கோலத்தை நாம் அவதானித்திருப்போம். மரணவீடு ஒன்றில் உண்மையாகக் கவலையுடன் அழும் உறவினர்கள், கத்தி அழுவதும், சற்று ஆறி இருப்பதும், மீளக் கத்தி அழுவதுமாக இருக்கும் நிலையையும் கவனித்திருப்போம். திடீரெனத் தோன்றும் இவ்வுணர்ச்சிகள் உடலியல், உடற்றொழிலியல், அறிகைக்கூறுகளைக் கொண்டமையும். கோபம், வெறுப்பு, பயம், குற்றவுணர்வு, சந்தோஷம், எரிச்சல், பொறாமை, கவலை, வெட்கம், ஆச்சரியம், ஈடுபாடு, அன்பு என்பன உலக மனிதர் அனைவரிடமும் தோன்றும் பொதுவான உணர்ச்சிகள். ஆயினும் மொத்தத்தில் 67க்கும் மேற்பட்ட உணர்வுகளைப் பெயரிட முடியும்.

எமக்கு இயல்பாக வரும் உணர்வுகளை நாம் நேரம் செலவு செய்து அனுபவிக்கலாம். அது என்ன உணர்வு என அடையாளங்காணலும் ஏற்றுக் கொள்ளலும் மிக முக்கியம்.

உணர்ச்சியை அவதானிக்கிற அதேசமயம் அப்போது தோன்றும் உடலியல் மாற்றங்களையும் அவதானிக்கலாம். பதகளிப்பும் கோபமும் மிக வேகமாகத் தோன்றக்கூடியவை என்பதையும் அறிந்து வைத்திருக்கலாம். சில உணர்ச்சிகளுக்கு உடலியல் மாற்றங்கள் பெரிய அளவில் இருக்கலாம் .அடிக்கடி உச்சக்கோபம் வந்து அதனால் இருதயத்தின் மின் இயக்கச் செயற்பாட்டில் மாற்றத்தை அனுபவிப்பர்களுக்கு ஒருநாள் அந்தக் கோபம் இறப்பையும் ஏற்படுத்தலாம்.

அதேபோல அடிக்கடி பதகளிப்புக்கு உள்ளாகி, பல்வேறு மெய்ப்பாட்டு முறைப்பாடுகளை அனுபவிப்பவர்களுக்கு ஒருநாள் அது சுவாசிப்பதில் சிக்கலையோ அல்லது பக்க வாதத்தையோ ஏற்படுத்தலாம். ஆகவே உணர்வுகள் வருவதையும் போவதையும் ஏற்றுக் கொள்கிற அதேசமயம், "உணர்வு என்பது உண்மையில்லை. உணர்வு என்பது நான் இல்லை." என்ற உண்மையை அடிக்கடி நினைத்துக்கொள்ள வேண்டும். அப்படி நினைத்துக்கொண்டால் பெரிய வலுவுடன் வரும் உணர்ச்சிகளும் எமது நடத்தைக் கட்டுப்பாட்டை மீறிச் செல்லாது.

"நுண்மதி ஈவு" என ஒருவிடயம் இருப்பது அனேகமாக எல்லாருக்கும் தெரியும். "லியனாடோ டாவின்சி", "கீதே", "நிக்கலஸ் கொப்பனிக்கஸ்" போன்றவர்கள் உயர் நுண்மதிஈவு கொண்டவர்களாகச் சரித்திரத்தில் அறியப்பட்டவர்கள். "நுண்மதி ஈவு" உயர்வாக இருப்பவர்களுக்கெல்லாம் "உணர்வு நுண்மதியும்" "உயர்வாக இருக்கும் என்று கூற முடியாது. இரண்டும் முற்றாக வேறு வேறு விடயங்கள். அறிவைச் சேர்த்து வைக்கும், திறன், ஆய்வு முறையியல் சிந்தனைகள், ஞாபக ஆற்றல் போன்றவை நுண்மதி ஈவுக்கு முக்கியமானவை. உணர்வுகளைச் சமப்படுத்தும் திறன், உந்தல், அறிகை ஒத்துணர்வு, சமூகத் திறன்கள் போன்ற விடயங்கள் உணர்வு நுண்மதியை மேம்படுத்துபவை. இவை இரண்டுமே வாழ்வின் வெற்றிக்கு உதவும் என்றாலும் IQ.E.Q இரண்டுக்கும் இடையிலான சிக்கலான உறவும், தன்னம்பிக்கையும், நெருக்கீட்டைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளிக்கும் திறனும், செயல்புரியத் தூண்டும் நிலையும் ஒருவரின் வெற்றிகரமான வாழ்வுக்கு அவசியமானவை.

குழுநிலைச் செயற்பாடுகள் அதிகமாகத் தேவைப்படும் இடங்களில் உணர்வு நுண்மதி மிக முக்கியமானது.

உணர்ச்சிகளுக்குப் பொறுப்பான மூளையின் பகுதிகள் எதுசரி, எதுபிழை, எது நல்லது, எது கெட்டது என்பதைவிட எது எமக்குப் பாதுகாப்பானது என்றுதான் பார்க்கும். அது அடிக்கும் அலாரத்தை நாம் கட்டாயம் கேட்கவேண்டும். அதேசமயம் உணர்வுநுண்மதி முன்வைக்கும் செய்தி தொடர்பில் கேள்விமேல் கேள்வி கேட்கவேண்டும்.

உயர் செறிவில் வரும் உணர்ச்சிகள் சரியான தீர்மானம் எடுக்கும் எமது திறனைப் பாதிக்கும் என்பது முக்கியமான செய்திதான். உணர்வுகளின் செறிவைச் சூழ்நிலைக்குப் பொருத்தமாக வைத்திருக்கப் பழகுவது அதைவிட முக்கியம்.

சிலர் அட்டைக்குப் பயம். அட்டைக்குப் பயப்படுவது அவசியமில்லை. சரி, பரவாயில்லை என்று விட்டாலும், அட்டைக்குப் பயப்படும் அளவும், ஓரளவு விஷம் கொண்ட புலிமுகச் சிலந்திக்குப் பயப்படும் அளவும், அதைவிட அதிக நச்சுத்தன்மை கொண்ட புடையன் பாம்புக்குப் பயப்படும் அளவும், நெற்றியில் துப்பாக்கிக் குழல் வைக்கப்படுகிறபோது பயப்படும் அளவும் ஒரே அளவாக இருக்கக்கூடாதுதானே!

பெரும் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தும் முக்கிய உணர்ச்சி கோபம். இந்தியாவில் மகாத்மா காந்தியால் செய்யப்பட்ட உப்புச் சத்தியாக்கிரகம் போன்ற தொடர் செயற்பாடுகள், ஒருநாடு இன்னொரு நாட்டுக்கு அடிமையாக இருப்பதற்கு எதிரான சமூக நிலைக் கோபம். அது பெரிய தொழிற்படு நிலைக் கோபம். அது சரியானது என்பதற்கு மேல் பொருத்தமான விளைவையும் இறுதியில் பெற்றுக் கொண்டதாகவும் அமைந்தது. அதேசமயத்தில் அம்மா கைத்தொலைபேசி வாங்கித் தரவில்லை என்பதற்காகத் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் மகன், மகள் சோதனைக்குப் போகவில்லை என்பதற்காகத் தற்கொலை செய்யும் தாய் போன்ற சம்பவங்களோடு தொடர்புபட்ட தொழிற்படாநிலைக் கோபங்கள் சூழ்நிலையோடு ஒப்பிடுகையில் கட்டுப்படுத்தக்கூடிய கோபங்கள். தம் மீது பால்நிலைத் துஸ்பிரயோகங்களைச் செய்யும் ஆண்கள் பற்றி - குறிப்பாக அவர்கள் உயர் நிலை அதிகாரிகளாய் அல்லது ஏதோஒருவகை அதிகாரம் கொண்டவர்களாய் இருக்கும்போது - பெண்கள் அமுக்கிவைக்கும் கோபம் மேலும் பிழை செய்வோரைத் தூண்டுகிறது என்பதற்கு மேல் சமூக உளநலம் படிப்படியாகச் சரிந்துவர உதவுகிறது. பெண்களே! தலைநிமிருங்கள்! துணிவு கொள்ளுங்கள்!

ஷேஸ்பியரின் "ரோமியோ அண்ட் யூலியட்" நாடகத்தில் Tybalt எப்படி Mercutio வைக் கொன்றான் என்பது ரோமியோவுக்குக் கோபம். அந்தக் கோபம் பழிவாங்கலாக மாறி Tybalt ஐ க் கொலை செய்வதில் முடியும். இன்றுவரும் சினமாக்கள், தொடர்நாடகங்கள் பலவற்றிலும் கூடப் பழிவாங்கல் உணர்வு சரியானது என்பதுபோலவே கதை நகர்த்திச் செல்லப்படும். இதைப் பிள்ளைகளும் பார்க்கிறார்கள் என்பது பற்றி "மாபியாக்கள்" யாரும் கவலைப்படுவதில்லை.

விரைவாக ஆழ் மனத்திலிருந்து தெரியாதது போலத் தொழிற்படும் உணர்வு நிலையில் இருந்து ஆறுதலாகக் கட்டுப்பாட்டுடன் தர்க்க ரீதியாகப் பிரக்ஞைபூர்வமாகத் தொழிப்படும்நிலைக்கு நாங்கள் மாறவேண்டும்.

உணர்ச்சிகள் எங்கள் முடிவெடுக்கும் திறனைப் பாதிக்காது இருக்கவேண்டுமானால், கையில் உள்ள விடயத்தை முதலில் மதிப்பீடு செய்யவேண்டும். பழைய அனுபவங்களில் இருந்துவரும் உணர்வுகளும், தனிப்பட்ட பக்க சார்புகளும் எங்கள் மதிப்பீட்டை மறைக்கலாம். ஓர் ஆசிரியரிடம் கடுமையாக அடி வாங்கிய பிள்ளை அல்லது மறைவாக வைக்கப்பட்ட கமெராவில் தனக்குத் தெரியாமலே தான் பதிவாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கும் பிள்ளை பாடசாலைக்குப் போகவே மறுக்கலாம். ஆசிரியர் அடித்ததும், கமெரா வைக்கப்பட்டதும் தவறுதான். ஆனால் பாடசாலை போக மறுக்கும் முடிவு வினைத்திறனுடையதில்லை. ஆகவே எப்போதும் இப்போதைய நிலையை முன் அனுபவத்திலிருந்து பிரித்துப் பார்க்கவேண்டும். சரியான தகவல்களை ஒன்றுதிரட்டி அந்தக்கணத்தில் வாழவேண்டும். எம்மைச் சுற்றிப் பொருத்தமான முறையில் அன்பை விதைக்கப் பழக வேண்டும். எல்லோரது நலத்தையும் கவனத்திலெடுத்து, எமக்கும் மற்றவர்களுக்கும் பயன் தரும் நடத்தைகளைத் தெரிவுசெய்ய வேண்டும்.

உணர்வு நுண்மதி விருத்திக்குப் பயிற்சி கொடுப்பது மிக முக்கியமானது. கோபம் செய்யக்கூடிய அழிவுகளை அறிந்தும் ஔவை "ஆறுவது சினம்" என்றே கூறினார். "அறுக சினம்" எனவில்லை. தொழிற்படுநிலைக் கோபத்தை நிதானமாகக் கையாளப் பயின்று கொள்ளலாம். அதேநேரம் "சினத்தைக் காட்டி மற்றவர்களைப் பயமுறுத்தலாம்" என்பது போன்ற தவறான எண்ணம் வேறு கிடையாது. இதை வள்ளுவர்,

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையாதற்று"

என்று தெளிவாகச் சொன்னார்.

உணர்ச்சி மேலெழ நடந்துகொள்ளும் சந்தர்ப்பங்களை வாழ்விலே குறைத்துக் கூடியநேரம் அமைதியாகவும் சந்தோஷமாகவும் இருக்கப்பழக வேண்டும். உணர்ச்சிகள் எப்படி நடத்தையைப் பாதிக்கின்றன என வாசித்து அறியலாம். உணர்ச்சிகள் வேகமாகத் தொற்றக்கூடியவை என்பதை மறக்க வேண்டாம். வீட்டிலே ஒருவர் கடும் கோபத்துடன் தொழிற்பட்டால் மற்றவர்கள் அமைதியாக இருப்பது கடினம்.

மாற்றங்களுக்கு மனதைத் திறந்து வைத்திருக்க வேண்டும். மாற்றமே உலகில் மாறாத ஒன்று. நிச்சயமற்ற தன்மை தொடர்பாகவும் சுகமான மனநிலையைப் பேணப் பழகலாம்.

மற்றவர்களைப் பார்த்து "உங்களுக்கு நான் எப்படி உதவலாம்?" என்று கேட்க எப்போதும் ஆயத்தமாக இருப்பவர் உணர்வுச் சமநிலையுடன் இருப்பவர். எமக்கு மிகுந்த நெருக்கடி வரும்போது, "எனக்கு உதவி செய்வீர்களா?" என்று கேட்கவும் தயங்க வேண்டியதில்லை.

எங்கள் செயற்பாட்டுச் சக்தி மட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தவரை உயர்வாக வைத்திருக்கலாம். இலக்கு களை மறந்துவிடாதிருப்பதுடன் எமக்கும் சுற்றியுள்ளவர்களுக்கும் உயர் தரத்தில் செயல் மட்டங்களை உருவாக்கிவைத்திருப்போம்.

தொடர்பாடல்கள் எப்போதும் விளைதிறனுடன் மனம் திறந்து அமைவதாக இருக்கட்டும். கருத்துக் களின் முரண்பாட்டைச் சொந்த முரணாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. எந்த வேளையிலும் மற்றவர் சொல்வதை உன்னிப்புடன் செவிமடுப்போம்.

நல்ல மனப்பாங்குடன் செயற்படுதலுக்கு நாமே முன்னுதாரணம் ஆகலாம். மற்றவர் வெற்றி பெறுவதற்கு எப்போதும் ஊக்கம் கொடுப்பவராக இருப்போம். மற்றவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக, தெளிவான உறுதியான பின்னூட்டல்களை வழங்குவோம். ஒருபோதும் முகத்துக்காகப் பாராட்ட வேண்டியதில்லை.

வெற்றிபெறுவதற்கான தகைமையும் திறமையும் எமக்கு இருப்பதை நம்பும் அதேவேளை இரக்கமும் கருணையும் கொண்ட மனம் எமக்குள் இருப்பதையும் மறந்துவிடவேண்டாம். தாழ்மையுடன் பேசுவோம். தோல்வி வரும்போது மீண்டும் நம்பிக்கையுடன் செயற்படப் பழகுவோம். நேர்மையாகவும் உண்மையாகவும் இருப்பதன் மூலமே மற்றவரிடம் நம்பிக்கையைக் கட்டி எழுப்பலாம்.

குறைகாணக்கூடிய அல்லது பலவீனமான நடத்தை எம்மிடம் இருந்தால் அதுபற்றித் தைரியத்துடனும் உண்மையுடனும் கலந்துரையாடுவோம். ஒரு சிறு நகைச்சுவை உணர்வை ஒருபோதும் கைவிட வேண்டாம். மற்றவர்களின் உணர்வைப் புரிந்து கொள்ளவும் எப்போதுமே நேர்மொழியைப் பாவிக்கவும் பழகலாம்.

நிறைவாக நீங்கள் பேசும்போது "பேசுகிறேன்" என்று தெரிகிறதா? பேச்சின் சொற்களையும் உணர்வுகளையும் கட்டுக்குள் வைக்க முடிகிறதா? பயம் அல்லது கோபம் போன்ற உணர்ச்சிகள் வரும்போது உணர்வுக்குள் போவது தெரிகிறதா? உணர்வின் வெளிப்பாடு உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறதா? மற்றவர்கள் துன்பப்படும்போது உதவவேண்டும் என்று தோன்றுகிறதா? மற்றவர்கள் உங்களுடன் பேசும்போது அதை உற்றுக்கேட்க முடிகிறதா ?அதற்குப் பதில் வழங்க உங்களுக்கு நேரம் இருக்கிறதா? இவ்வளவு வினாக் களுக்கும் நீங்கள் "ஆம்"எனப் பதிலளித்திருந்தால் உங்கள் உணர்வு நுண்மதிபற்றித் திருப்திப்படலாம். இன்னும் உயர்த்தலாம் என்பதும் சரிதான் !இதுபோன்ற விடயங்களை இன்னும் இன்னும் உயர்த்தலாம் என்று நம்பிச் செயற்படும்போது வாழ்வின் தீர்மானங்களும் மேலும் மேலும் சரியாகும்.

காவவா தொருவன் தன் வாய்திறந்து சொல்லுங்கால்
ஓவாதே தன்னைச் சுடுதலால் - ஓவாதே
ஆய்ந்த மைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

(தொடருவோம்)

---

# தொகைகளும் தொடர்களும்

## கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்

வினைத் தொகை பண்புத்
தொகையென
தொகைகள் ஆறுதான்!
தொகையாக நூறு...

பண்புத் தொகை
பாதாள உலகத்தினுள்!

அடுத்தவனை அறுக்கும்
வினைத் தொகை!

உம்மைத் தொகை போலவே
உறங்கிக் கிடக்கும்
உண்மைத் தொகை!

உவமைத் தொகையாக
ஆயிரக்கணக்கானோர்
உருபுகளை மறைத்த வண்ணம்!

மனதுகளில் மறைந்து கிடக்கும்
வேற்றுமைத் தொகை!

அன்மொழித் தொகை
அழகானதே ...
அரசியல் வாக்குறுதிகளுமய்
அது போலவே!

வேற்றுமைத் தொகை மறைந்து
ஒற்றுமைத் தொடர் வராதா?

உவமைத் தொடராக
உதாரண புருஷர்கள் பிறக்காதா?

புண்பட்ட மனதுகளுக்கு
பண்புத் தொடர்
ஒத்தடம் தராதா?

வினைத் தொடர்
நல்வினைகளுக்கு மட்டுமென
நன்னூல் கூற மாட்டாதா?

கருங்குழலையும்
பொற்றொடியையும் விடுத்து
சமூக உயர்வுக்கான
அன்மொழித் தொகைகள் வராதா?

இஸ்ரேல் பயங்கரவாதம்
உம்மைத் தொகையை விட்டும்
விடைபெற்றுப் போகாதா?

ஊழல் லஞ்சத்தை
தொடரில் சேர்க்காததேன்?
அராஜகத்தை அதிலே
இணைக்காததேன்?

நாட்டிலே பஞ்சத் தொடர்...
வீட்டிலே பட்டினித் தொடர்....
அரசியலிலே திருட்டுத் தொடர்...
காஸாவில்
இனச் சுத்திகரிப்புத் தொடர்...

தொடர வேண்டியவை தொகைகளாக
தொக்கிக் கிடக்கிறது!

மறைய வேண்டியவை
தொடர்களாகதொடர்ந்து பயணிக்கிறது!

தொக்கி நிற்பதுதான்
தொகை என்றால்
சமாதானம் சகவாழ்வு
எல்லாமே தொகைகள்தானே!

தொகைகள் ஆறல்ல
நூறு!

சில தொடர்கள்
தொடர வேண்டியவை ...
சில தொகைகள்
தொலைய வேண்டியவை ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.ந.கிரிதரன்




# குடிவரவாளன்

அத்தியாயம் பத்து:

வழி தவறிய பாலைவனத்து ஒட்டகங்கள்!

நியூயார்க் பிரதான பஸ் நிலையத்திற்கு அண்மையிலிருந்த பழையதொரு ஆபிஸ் கட்டடத்தின் இரண்டாம் தளத்தில் அமைந்திருந்தது முகவன் பீற்றரின் வேலை காரியாலயம். அவன், அவனது அந்தரங்கக் காரியதரிசி கிறிஸ்டினா (கிறிஸ்டினா அவனது மனைவி கூட), காரியாலயப் பணியாளான வயது முதிர்ந்த கூன் முதுகுடன் கூடிய ஹென்றி இவர்கள் மூவரும்தான் அங்கு பணி புரியும் மூலவர்கள். கண்ணாடித் தடுப்புடன் கூடிய அறையில் பீற்றரும், கிறிஸ்டினாவுமிருக்க, அறை வாசலில் வெளிப்புறமாக ஹென்றிக்கு மேசையும் கதிரையும் போடப்பட்டிருந்தது. வேலை தேடும் மூன்றாம் உலகத்துச் சட்ட விரோதக் குடிமக்கள் கூடத்தில் காலை ஆறு மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரையில் பீற்றர் எடுத்துத் தரப்போகும் "ஹிட்டார் அடி" வேலைக்காகக் காத்து நிற்பார்கள். அந்த ஒரு வேலையைத்தான் பீற்றரால் எடுத்துக் கொடுக்க முடியும். நியூயார்க், நியூ ஜேர்சி என்ற இரு மாநிலங்களிலும் அவனது சேவையினைப் பயன்படுத்துவதற்கு நூற்றுக் கணக்கான கிரேக்க உணவகங்கள் காத்திருந்தன. அமெரிக்காவில் இத்தகைய வேலைகளெல்லாம் அங்கு வாழும் சட்டவிரோதக் குடிமக்களால் தான் செய்யப்படுகின்றன. இத்தகைய தொழிலாளர்களின் சட்டவிரோத நிலையினைத் தமக்குச் சாதகமாக்கிச் சில உணவக உரிமையாளர்கள் தொழிலாளர்களை வதக்கியெடுப்பதுமுண்டு. எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு சட்டவிரோதக் குடிகாரர்களான மேற்படி மூன்றாமுலக நாயகர்கள் குழந்தை, மனைவி, குடும்பம் பற்றிய வருங்காலக் கனவுகளுடன் மாடுகளாக உழைப்பதற்கு எவ்வளவுதூரம் தயாராயிருக்கிறார்களென்பதை வேலை வாய்ப்பு முகவன் பீற்றரின் அலுவலகத்தின் ஒரு நாள் நடை முறையினை அவதானிப்பதன் மூலம் நன்கு அறிந்து கொள்ள முடியும்.

காலை ஆறு மணிக்கெல்லாம் பணியாள் ஹென்றி வந்து விடுவான். காரியாலயத்தைத் திறந்து விடுவதெல்லாம் அவனது பணிகளிலொன்றுதான். வேலை தேடும் குடிமக்களெல்லாரும் அவனது வருகைக்காகக் காத்துநிற்பார்கள். காலை உணவை முடித்து விட்டுக் கைகளில் "காப்பி" யுடன் காத்து நிற்பார்கள். ஏழு மணிக்கெல்லாம் முகவன் பீற்றர் வந்துவிடுவான். அதன்பிறகு எட்டு மணியளவில்தான் கிறிஸ்டினா வருவாள். பீற்றர் வந்து விட்டால் ஒருவருமே அடிக்கடி இயற்கையின் கட்டாயத் தேவைகளுக்காக, உணவுக்காக அல்லது "காப்பி"க்காகவென்று அடிக்கடி வெளியில் செல்ல விரும்புவதில்லை. அதற்கொரு காரணமும் இருக்கத்தான் செய்தது. பீற்றர் வேலைக்குத் தெரிவு செய்யும்போது சில நடைமுறைகளைக் கைக்கொள்வான். அவற்றில் அவனது அவர்கள் மீதான அவதானிப்பும் அடங்கும். நாள் முழுக்க வேலைக்கான அழைப்புக்காகக் காத்து நிற்கும்போது அவனது பார்வை அடிக்கடி கூடத்தில் காத்து நிற்கும் அவர்கள் மீது படிந்து செல்வது வழக்கம். அத்தகைய சமயங்களில் அவன் அவர்களது குணாதிசயங்களை எடை போட்டு வைத்துக் கொள்வான். அவனது சேவைக்காகக் குரல் கொடுக்கும் பலவேறு வகையான உணவகங்களின் உரிமையாளர்களைப் பற்றி அவர்களது குணாதிசயங்களைப் பற்றியெல்லாம் தனது அனுபவத்தின் வாயிலாக அறிந்து வைத்திருந்த அவனுக்கு அவர்களுக்கேற்ற பணியாட்களைத் தெரிவு செய்வதற்கு அவனது இத்தகைய அவதானிப்புகள் கை கொடுத்தன. யாரெவர் மிகவும் அமைதியாகப் பொறுமையுடன் எப்பொழுதும் கலகலப்பான முகவாகுடன் இருக்கிறாரோ அத்தகையவர்களுக்கு அவனது நல்ல உணவகங்களில் வேலை செய்வதற்குரிய அதிஷ்டம் அடிக்கும். அடிக்கடி பொறுமையிழந்து வெளியில் போய் வருவோருக்கு, எந்த நேரமும் பேசிக் கொண்டிருப்போருக்கு சிரமத்தைத் தரக்கூடியதென்று கருதப்படும் உணவகங்களில்தான் வேலை வாய்ப்பு கிடைப்பதற்குரிய சந்தர்ப்பம் அமைவது வழக்கம். இது பற்றி கோஷ் இளங்கோவுக்கு முன்னரே எச்சரித்திருந்தான். இதன்பொருட்டுத்தான் பீற்றரின் பார்வையில் நன்மதிப்பைப் பெறுவதன் பொருட்டு இயலுமானவரையில் பொறுமையாகக் காத்திருக்கப் பழகியிருந்தார்கள் அவனிடம் வேலை பெறுவதற்காகக் காத்திருக்கும் குடிமக்களில் பலர். ஒரு சிலர் ஒரு நாளுடன் பொறுமையிழந்து அவனும் அவனது வேலையுமென்று முயற்சி செய்வதை விட்டு விட்டுப் போய் விடுவார்கள். இன்னும் சிலர் இரண்டாம் நாளுடன் பொறுமையிழந்து விடுவார்கள். இவ்விதமாக நாளொன்றுக்கு ஆளாளுக்குக் கழன்றுவிடப் நிலைத்து நிற்பவர்களில் சிலருக்கு அதிஷ்டம் அடிக்கும். ஒரு சிலருக்கு ஒரு நாளிலும் அவ்விதமான அதிஷ்டம் அடிப்பதுமுண்டு. இவ்விதமான அதிஷ்ட்ட தேவதை யின் கடாட்சம் பெற்றவர்களைப் பஸ் நிலையத்தில் அல்லது பாதாள இரயில் நிலையத்திற்குக் கொண்டு சென்று வழியனுப்புவது பணியாள ஹென்றியின் பிரதான பணிகளிலொன்று. அத்தகைய சமயங்களில் சில சமயங்களில் வேலை பெற்றுச் செல்லும் பணியாளர்களுக்குத் தனது அறிவுரைகளைக் கூறுவான் ஹென்றி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அபூர்வமாக வாய் திறக்கும் சந்தர்ப்பங்களவை.

இளங்கோவைப் பொறுத்தவரையில் இவ்விதமாக முகவன் பீற்றரின் காரியாலயத்தில் வேலைக்காகக் காத்து நின்று மூன்று நாட்களைக் கடந்து விட்டன. அன்று நான் காவது நாள். இன்னும் ஒரு நாள் மட்டும் முயற்சி செய்வ தற்கு முடிவு செய்து கொண்டிருந்தான். காலையிலிருந்து மாலை ஐந்து மணி வரையில் நீண்ட நேரமாக அவ்விதம் காத்துநிற்பது பெரிதும் சலிப்பினைத் தந்தது. இந்த வாரம் எவ்விதமாவது ஒரு வேலை எடுத்து விட வேண்டும். ஒரு சில வாரங்கள் செய்தாலே போதுமானது. அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை அடித்தளமாக வைத்து அடுத்த முயற்சியில் இறங்கி விடும் திட்டத்தில் அவனிருந்தான்.

இந்த மூன்று நாட்களில் அவனுக்கு ஆப்கானிஸ் தானைச் சேர்ந்த முஸ்தபாவும், கானாவைச் சேர்ந்த மைக்கலும் பேசிப் பொழுதினைக் கழிப்பதற்குரிய நண்பர் களாகவிருந்தார்கள். முஸ்தபா ஆப்கானிஸ்தானிலிருந்து அகதியாக நாட்டை விட்டு நீங்கிப் பல்வேறு நாடுகளைக் கடந்து ஒரு வழியாக அமெரிக்க மண்ணில் சட்ட விரோதமாகக் காலடி எடுத்து வைத்திருந்தான். மைக்கல் படிப்பதற்காக வந்தவன் அது முடிந்த நிலையில் திரும்பிச் செல்ல விரும்பாமல் சட்டவிரோதமாகத் தங்கியிருந்தான். எல்லோருக்குமே இப்புவியுலகின் சொர்க்கபுரியில் பணத்தை அள்ளிக் கோண்டு நாடு திரும்பவேண்டுமென்ற கனவிருந்தது.

மைக்கலும் சிறிது பொறுமையிழந்திருந்தான். அது அவர்களுடனான அவனது உரையாடலிலும் சிறிது தொனித்தது: "நண்பர்களே! இந்த மூன்று நாட்களாக இவ்விதம் காத்திருந்து இந்த வேலைக்குச் செல்ல வேண்டுமாவென்றிருக்கிறது. ஏதோ அவசரத்துக்கு விரைவாகக் கிடைக்குமென்று வந்தால்... இவ்விதம் நாட் களை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறானே. இவ்விதம் தெரிந்திருந்தால் நான் வந்திருக்கவே மாட்டேன்."

அதற்கு முஸ்தபா இவ்விதம் தனது கருத்தினை முன்வைத்தான்: " நீ சொல்வதும் சரிதான் மைக்கல். ஆனால் எங்கேயென்று வேலை தேடுவது. எங்கு போனாலும் சமூகக் காப்புறுதி இலக்கம் கேட்கிறார்களே.."

அதற்கு மைக்கல் இவ்விதம் கூறினான்: "இரு நூறு டாலர்கள் கொடுத்தால் கூறுகிற பெயரில் சமூகக் காப்புறுதி அட்டையையே இங்கு எடுத்து விடலாம். என் கையிலிருந்த காசெல்லாம் முடிந்து விட்டதால் குறுகிய காலத்தில் கொஞ்ச பணம் சம்பாதிக்கலாமென்று இவனிடம் வந்தேன். கையில் போதிய பணம் இருப்பில் வந்ததும் நான் அந்த வழியில்தான் செல்லப் போகின்றேன். இருப்பதே சட்ட விரோதமாக. அதில் இன்னுமொரு சட்டவிரோதச் செயலைச் செய்வதாலென்ன மேலதிக நஷ்டம் வந்து விடப் போகிறது? சமூகக் காப்புறுதி இலக்கமிருந்தால் இப்பொழுது கூடத் தொழிற்சாலை யொன்றில் மிகவும் இலகுவாக வேலையொன்றினை எடுத்து விடலாம்."

இளங்கோவில் நிலையில் அவ்விதம் வேலை செய்வதில் சிறிது சிக்கலிருந்தது. அவன் இவ்விதம் தன் நிலையினை அவர்களுக்கு எடுத்துரைத்தான்: "நானும் தற்பொழுது இங்கு சட்டவிரோதமாகத் தங்கியிருந்தாலும் சட்டரீதியாக நாட்டினுள் அடியெடுத்து வைத்தவன். அதனால் இப்பொழுது சட்டவிரோதச் செயலைச் செய்து தற்செயலாக அகப்பட்டு விட்டால் என் அகதிக் கோரிக்கை உடனடியாகவே நிராகரிக்கப்பட்டு விடலாம். ஆனால் அந்த வழி எனக்குச் சரி வந்து விடாது. ஆனால் மைக்கல் சொல்வது சரிதான். எனக்கும் தெரிந்த என் நாட்டவனொரு வன் கப்பலில் வந்து இங்கு இறங்கியவன் இப்பொழுது அவ்விதம்தான் சமூகக் காப்புறுதி அட்டை யெடுத்துத் தொழிற்சாலையொன்றில் வேலை செய்கின்றான்"

இவ்விதமாகச் சிலநேரம் அவர்கள் ஏனைய வழி முறைகள் பற்றித் தமக்கிடையில் உரையாடிக் கொண்டார் கள். இன்னுமொரு சமயம் முகவன் பீற்றரைப் பற்றி, கோப்பை கழுவும் பணி பற்றி, நியூயார்க் பற்றி யெல்லாம் பல்வேறு விதமான தமது கருத்துகளைப் பரிமாறிக் கொண்டார்கள். மேலும் சில சமயங்களில் பேசுவதற்குரிய பொருளெதுவுமின்றி சிநதனையில் ஆழ்ந்து கொள்வார்கள். அத்தகைய சமயங்களில் தங்களது தனிப்பட்ட வாழ்க்கை பற்றிய , ஊரில் விட்டு விட்டு வந்த குடும்பத்தவர், உற்றார் உறவினரைப் பற்றி, நாட்டு நிலைமையைப் பற்றி எனப் பல்வேறு விடயங்களைப் பற்றிய சிந்தனைகள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். ஆதிச் சமூகநிலை நிலவிய அன்றைய காலகட்டத்திலிருந்து இன்றைய காலகட்டம் வரையில் புலம்பெயர்தலென்பது மானுட சமுதாயத்தின் தப்பிப் பிழைத்தலுக்குரிய தவிர்க்க முடியாததொரு செயலாகத் தானிருந்து வருகிறது. சிலம்பு கூறும் "கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்களி"லிருந்து இன்று வரையில் எத் தனையோ காரணங்களுக்காகப் புலம்பெயர்தல் தொடரத் தான் செய்கிறது. சமூக, அரசியல், பொருளியல் காரணங் களுக்காக இன்றைய புலம்பெயர்தல் தொடர்கிறது. இவ்விதமான எண்ணங்கள் அவனை ஆக்கிரமித்தன. ஈழத்துக் கவிஞன் வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதையொன்றின் சில வரிகள் ஞாபகத்திலெழுந்தன.

"நானோ
வழிதவறி அலாஸ்கா
வந்து விட்ட ஒட்டகம்போல்
ஒஸ்லோவில்"

தற்போதைய அரசியல் சூழல்களால் புலம் பெயர்ந் திருக்கும் அனைத்து நாட்டவர்களுக்கும் பொருந்தக் கூடிய கவிதை. முஸ்தபாவும் சரி, மைக்கலும் சரி ஏன் அவனும் சரி இத்தகைய வழி தவறி வந்து விட்ட ஒட்டகங்களாகத்தான் இளங்கோவுக்கு அச்சமயம் தென்பட்டார்கள். ஆனால் நிஜ வாழ்வில் வழிதப்பி அலாஸ்கா வந்து விட்ட ஒட்டகங்கள் பிழைக்குமோ இல்லையோ இந்த மானுட ஒட்டகங்கள் நிச்சயம் பிழைத்துக் கொள்ளும். அல்லது பிழைத்துக் கொள்வதற்காவது வழிவகைகளை முடிந்த வரையில் முயன்று பார்க்கும்.

சிந்தனைகள் மேலும் மேலும் விரிந்தன. பால்ய காலத்து நினைவுகள் எப்பொழுதுமே அழியாதவை, பசுமையானவை. அதிகாலைகளில் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புப் பரீட்சைகளுக்காக நேரத்துடனெழுந்து படிப்பது நினைவுக்கு வந்தது. அப்பொழுதெல்லாம் அப்பா தவறாமல் தூக்கத்தினின்றும் எழுப்பி விடுவார். அம்மா சுடச்சுட பால் நிறைய விட்டுக் கலந்த தேநீர் கொண்டு வந்து தருவார். வளவிலிருந்த மாவிலிருந்து குயிலொன்று எப் பொழுதும் கூவும். புள்ளினங்களின் அதிகாலை ஆரவாரங் களால் சூழல் நிறைந்திருக்கும் இரம்மியமான காலைப் பொழுதுகள். அவ்வதிகாலைப் பொழுதுகளில் சுழன்றடிக் கும் காற்றில் அசைந்தாடும் பனைகளினோசைகள்

மெல்லக் காதில் வந்து விழும். மெல்லிய தென்றல் ஜன்னைலினூடு உள்ளே வந்து தாலாட்டும் தருணங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைவில் தெரியும் நிலாவின் தண்ணொளியில் நனைந்த படி படிப்பதிலுள்ள சுகமிருக்கிறதே... இப்பொழுது அம்மா இங்கிருந்தால் என்ன நினைப்பாரென்றொரு எண்ணமும் எழுந்தது. இளங்கோவின் இதழ்க்கோடியில் மெல்லியதொரு சிரிப்பு எழுந்து மறைந்தது. கோப்பை கழுவும் வேலையொன்றை எடுப்பதற்காக ஆடுமிந்த ஆட்டத்தை நினைத்தால் சிரிக்காமல் என்ன செய்வது? இந்த இருப்பில் எதுவும் எப்பொழுதும் சாத்தியப்படலாம். நடக்க முடியாதென்று நினைப்பவற்றையெல்லாம் காலம் மிக இலகுவாக மாற்றி வைத்து விடுமாற்றல் மிக்க தென் பதைப் புரிய வைப்பதாக அவனது நிகழ்கால மிருந்தது.

ஒருவழியாக ஐந்தாவது நாள், வெள்ளிக் கிழமை நண்பகல், முகவன் பீற்றரின் கடாட்சம் அவன் பக்கம் வீழ்ந்தது. அவன் அழைத்தபோது இளங்கோவின் மன நிலையினை விபரிப்பதற்கு வார்த்தைகளேது. அந்தக் குறுகிய நேரத்தில் அவன் மனது பின்வருமாறு எதிர் காலத்திட்டம் பற்றிய கணக்குகளைப் போட்டது:

1. இந்த வேலையை இயலுமானவரையில் தக்க வைத்துக் கொள்வது.

2. ஆகக் குறைந்தது ஒருவாரமாவது செய்தால்தான் அடுத்த சில வாரங்களுக்குத் தப்பிப் பிழைக்கலாம்.

3. வேலை புரியும் சூழல் பிடிக்குமிடத்தில் சிறிது காலம் அங்கு வேலை செய்து இயலுமானவரையில் காசைக் கொஞ்சம் சேமிப்பது.

4. அதே சமயம் சமூகக் காப்புறுதி இலக்கத்தினை சட்டரீதியான முறையில் பெறுவதற்குத் தொடர்ந்தும் முயற்சி செய்வது.

5. அகதிக் கோரிக்கைக்கான வழக்கினை இலாப நோக்கற்று சட்ட உதவிகளை வழங்கும் அமைப் பொன்றிடம் கையளிக்க வேண்டும். அதன் மூலம் சிறிதளவு பணத்தினையாவது சேமிக்கலாம்.

6. சமூகக் காப்புறுதி இலக்கம் கிடைத்ததும் ஓரளவுக்கு அவனது கல்வித் தகைமைகளுக்குரிய வேலைகளை முடிந்தவரையில் தேடுவது.

7. குறைந்தது ஒரு வருடமாவது அமெரிக்காவில் தங்கி முடிந்தவரையில் பொருளியல் ரீதியாக நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

8. அவ்விதமான திட்டம் நிறைவேறாது விடும்பட்சத்தில் கனடாவுக்குச் சென்று விடவேண்டும்.

9. மீண்டும் அங்கு தப்பிப் பிழைத்தலுக்கான போராட்டத்தினைத் தொடங்க வேண்டும்.

இவ்விதமான எதிர்காலத்திட்டங்களுடன் முகவன் பீற்றரின் அறையினுள் நுழைந்தான் இளங்கோ. அவனை வரவேற்ற முகவன் பீற்றர் அருகிலிருந்த ஆசனத்தில் அமரும்படி வேண்டினான்: "எனது இளம் நண்பனே! இங்கு ஆறுதலாக அமருவாயாக"

இளங்கோ ஆசனத்திலமர்ந்தவனாக முகவன் பீற்றரை நோக்கிக் காத்திருந்தான்.

முகவன் பீற்றர் தொடர்ந்தான்: "நண்பனே! உனக்கு நல்லதிருஷ்ட்டம் அடிக்க ஆரம்பமாகி விட்டது. இனி உன்பாட்டில் இராஜ யோகம்தான்."

இவ்விதம் கூறிய முகவன் பீற்றர் மேலும் தொடர்ந் தான்: "நான் உன்னை நியூஜேர்சி நகரிலுள்ள உணவக மொன்றுக்கு அனுப்பப் போகின்றேன். நல்ல உணவகம். கடல் உணவு தயாரிப்பில் சிறந்து விளங்குமொரு உணவகம். அதன் உரிமையாளரான நெப்போலியனே அங்கு பிரதான சமையல்காரனாகவும் பணி புரிகின்றான். அவனுக்குக் கீழ்தான் நீ வேலை செய்யப் போகின்றாய்".

இளங்கோ: "அப்படியா. மிகவும் நன்றி. என்னால் முடிந்த வரையில் நேர்மையாக, உங்களுக்கு விசுவாசமாக, உங்கள் பெயருக்குப் பங்கமெதுவும் ஏற்படாமல், கடுமை யாக வேலை செய்ய முயற்சிப்பேன்"

முகவன் பீற்றர்: "உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. குறிப்பாகக் "கடுமையாக வேலை செய்ய முயற்சிப்பேன்" என்று கூறினாயே அது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. செய்வேனென்று கூறாமல் முயற்சிப்பே னென்று கூறுவதில் உண்மை அதிகம் கலந்திருக்கிறது. நீ பிழைத்துக் கொள்வாய். நெப்போலியன் மிகவும் நல்லவன். ஆனால் சிறிது கண்டிப்பானவன். நன்கு வேலை செய்யும் பணியாட்களை அவன் மிகவும் மதித்து நடப்பவன். இன்னுமொன்று..."

என்ன என்பது போல் முகவன் பீற்றரை நோக்கினான் இளங்கோ. முகவன் பீற்றர் தொடர்ந்தான்:

"மூன்று நேரச் சாப்பாடும், தங்குவதற்குரிய இருப்பிட வசதியும் இலவசம். நீ செல்லும்போது உனக்காக அங்கு நெப்போலியன் போதிய தயாரிப்புகளுடன் காத்திருப்பான். உன்னை உன்னிருப்பிடத்தில் கொண்டு சென்று விடுவான். வேலை பற்றிய அத்தனை விபரங்களையும் விரிவாக விளக்குவான். வேலையில் ஏதாவது பிரச்சினைகளென்றால் நீ அவனிடம் முரண்டு பிடிக்காதே. எனக்கு நேரடியாகத் தொலைபேசியில் அழை. வேறென்ன. எண்பது டொலர்களைக் கிறிஸ்டினாவிடம் கொடுத்துப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொண்டு நீ போகலாம். ஹென்றி உன்னைப் பஸ் நிலையம் வரையில் வந்து வழியனுப்பி வைப்பான். உனக்கு என் வாழ்த்துக்கள். வேறு ஏதாவது கேள்விகளிருந்தால் இப்பொழுதே கேட்டு விடு."

பதிலுக்கு இளங்கோ "தற்போது எதுவுமில்லை. பின்னர் ஏதாவது தேவைப்பட்டால் உங்களுடன் தொடர்பு கொள்வேன். இந்த வேலை எடுத்துத் தந்ததற்கு என் நன்றி" என்று கூறிவிட்டுக் கிறிஸ்டினாவிடம் எண்பது டொலர்கள் கொடுத்துப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொண்டு, ஹென்றியுடன் நியூயார்க் பஸ்நிலையத்தை நோக்கிப் புறப்பட்டான்.

**அத்தியாயம் பதினொன்று:**
**இளங்கோ இலங்கா ஆன காதை!**

அந்தக் கடலுணவுக்குப் பெயர்பெற்ற உணவகம் நியூஜேர்சி மாநிலத்தின் "நிவார்க்" என்னும் நகரில் பிரதான கடைத்தெருக்கண்மையில் அமைந்திருந்தது. இளங்கோ அவ்விடத்தை அடைந்தபொழுது அப்பொழுது காலை நேரம் பத்தைத் தாண்டி விட்டிருந்தது. முன்னரே முகவன் பீற்றர் ஏற்பாடு செய்திருந்ததன்படி தலைமைச் சமையற் காரன் நெப்போலியன் அவனை எதிர்பார்த்துக் காத்திருந் தான். முதல் வேலையாக உணவகத்திற்குக் கூட்டிச் சென்றவன் அங்கிருந்த உதவிச் சமையற்காரன் "மார்க்"கை அறிமுகம் செய்து வைத்தான். நெப்போலியன் உருவத்தில் உண்மையான நெப்போலியனுக்கு எதிர்மாறான தோற்றத்தி லிருந்தான். ஆறடிக்கும் சற்று அதிகமான உயரத்தில், அடர்த்தியான நரைத்த மீசையுடன் ஒரு காலத்தில் "ஹாலிவூட்டி"னைக் கலக்கிய "சார்ள்ஸ் புரோன்சன்" போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றத்திலிருந்தான். அவனுக்கு எதிர்மாறாக இளைஞனாக அகன்ற, சிரிப்புடன் கூடிய வட்ட முகத்துடன் காணப்பட்டான் மார்க். பணிப்பெண்கள் சிலர் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

மார்க்கைப் பார்த்து நெப்போலியன் பின்வருமாறு இளங்கோவை அறிமுகம் செய்து வைத்தான்: "மார்க். உன் தலையிடி இன்றுடன் தொலைந்தது. இனிமேல் இவன்தான் உனக்கு உற்ற உதவியாளனாகவிருப்பான். இன்றைக்கே வேலையினை ஆரம்பிக்கின்றான். இவனுக்குரிய அன்றாட வேலைபற்றிய அனைத்துத் தகவல்களையும் தெளிவாக விளக்கி விடு. இவனுடைய பெயர் என் வாயில் நுழைவதற்குக் கஷ்டமானது. உன் பெயர் என்ன என்பதை இவனுக்குக் கூறு?"

"இளங்கோ" என்றான் இளங்கோ.

"இலங்கா.." என்று இழுத்து ஒருமுறை உச்சரித்துப் பார்த்தான் மார்க்.

"இலங்கா இல்லை. இளங்கோ" என்றான் இளங்கோ.

மீண்டும் மார்க்கும், நெப்போலியனும் ஒருமுறை "இலங்கா" என்றிழுத்தார்கள

"அதுவும் ஒருவிதத்தில் சரிதான். ஏனென்றால் நான் இலங்கையைச் சேர்ந்தவன். இலங்காவென்பதும் ஒரு விதத்தில் பொருத்தமாயிருக்கிறது" என்று இலேசாகச் சிரித்தான் இளங்கோ.

அச்சமயம் அவ்விடத்துக்குப் பணிப் பெண்ணொருத்தி ஓடி வந்தாள். "எமிலி" என்று அவளை அழைத்த நெப்போலியன் இளங்கோவிடம் "இலங்கா, இவள்தான் பணிப்பெண் எமிலி. மிகவும் நல்லவள். கலகலப்பானவள். இவளுக்கும் உன் உதவி மிகவும் தேவைப் படும். இவளைப் போல் இன்னும் சிலர் வேலை செய் கின்றார்கள். மேலும் சிலர் மாலையில் தான் வருவார்கள்" என்றான்.

எமிலியும் பதிலுக்கு அவனைப் பார்த்து சிநேகிதமான பார்வையொன்றினை வீசி "ஹாய்" என்று கூறி விட்டுத் தன் பணியில் மூழ்கி விட்டாள்.

நெப்போலியன் மார்க்கிடம் "மார்க். இலங்காவுக்கு வேலை பற்றிய எல்லா விடயங்களையும் விளக்கி விடு. வேலையை அவன் இப்பொழுதே ஆரம்பிக்கலாம்" இவ் விதம் கூறியவன் இளங்கோவிடம் "இலங்கா, என் அறைக்கு வா. உன்னிடம் இன்னும் சில விடயங்களைப் பற்றிப் பேச வேண்டும்" என்றான்.

அவனைத் தொடர்ந்து இளங்கோவும் அவனது காரியாலய அறைக்குச் சென்றான்.

அருகிலிருந்த இருக்கையினைக் காட்டியவன் "இருக்கலாம்" என்பதற்குரிய சைகையினைக் காட்டினான். இளங்கோ அமர்ந்ததும் இவ்விதம் கூறினான்: "இங்கு எல்லோரும் உனக்கு ஒத்துழைப்பார்கள். நீ மட்டும் உன் வேலையினை ஒழுங்காகச் செய்தால் போதுமானது. மூன்று நேரமும் இங்கு உன் சாப்பாட்டினை முடித்துக் கொள்ளலாம். இன்றிரவு வேலை முடிந்ததும் உன்னை உன்னிருப்பிடத்தில் கொண்டு சென்று விடுவேன். நாளை முதல் அங்கிருந்து நீ வேலைக்கு வரவேண்டும் நடந்தே வந்து விடலாம். அவ்வளவு தொலைவில்லை. எனக்குத் தெரிந்த வயது முதிர்ந்த தம்பதியின் வீடுதான். மாடியில் அறைகளை வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். உன்னைப் போல் வேறு சிலரும் அங்கு தங்கியிருக்கிறார்கள். நல்லவர்கள்"

இளங்கோ மௌனமாகவிருந்ததைப் பார்த்து நெப்போலியன் "இலங்கா! உனக்கு ஏதாவது கேள்விகள் இவ்விடயத்திலிருந்தால் இப்பொழுதே கேட்டு விடு" என்றான்.

அதற்கு இளங்கோ "வேலை நேரம், மற்றும் அதற்குரிய ஊதியம் பற்றியெதுவும் கூறவில்லையே.." என்றிழுத்தான்.

அதற்குரிய நெப்போலியனின் பதில் இவ்விதமாக அமைந்திருந்தது: "காலை 10 மணியிலிருந்து மாலை 10 மணிவரைதான் உனது வேலைநேரம். அதற்குள் உனக்குரிய வேலைகளையெல்லாம் முடித்து விட வேண்டும். அவ்விதம் முடிக்காவிட்டால் எவ்வளவு நேரம் சென்றாலும் முடித்து விட்டுத்தான் செல்ல வேண்டும். ஆனால் மேலிடத்தால் எனக்கிடப்பட்ட கட்டளையின்படி உனக்கு காலை பத்து மணியிலிருந்து இரவு பத்து மணிவரையில் தான் ஊதியம் வழங்குவார்கள். ஊதியமாக மணித்தியாலத்திற்கு மூன்று டாலர்கள் வழங்கப்படும். அதே சமயம் உனக்கு உணவு மற்றும் இருப்பிடம் எல்லாம் இலவசமாகக் கிடைப்பதையும் நீ எண்ணிப் பார்க்க வேண்டும். உனக்கு இவ்விடயத்தில் மேலதிகமாக ஏதாவது கேள்விகளிருந்தால் என்னிடம் அவ்வப்போது கேட்டுக் கொள்ளலாம். இப்பொழுது நான் உன்னை மார்க்கிடம் ஒப்படைக்கப் போகின்றேன். அவன் உனக்கு உனது வேலை சம்பந்தமான எல்லா விடயங்களையும் விளக்குவான்."

அதன்பிறகு நெப்போலியன் இளங்கோவை உதவிச் சமையற்காரன் மார்க்கிடம் கொண்டு சென்று ஒப் படைத்தான். அத்துடன் "மார்க் இலங்காவை உன்னிடம் ஒப்படைக்கின்றேன். நீ முன்பே கூறியதுபோல் எல்லா வற்றையும் விளக்கிவிடு" என்று மேலும் கூறிவிட்ட கன்றான்.

மார்க் இளங்கோவிடம் "இலங்கா, ஏதாவது சாப்பிட விரும்பினால் சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்" என்றவன் முட்டையும் வதக்கிய உப்பிடப்பட்ட பன்றி யிறைச்சியும் கூடிய வெண்ணெயிடப்பட்ட வாட்டிய பாண் துண்டுகளைக் கொண்டு வந்து வைத்தான். அத்துடன் குடிப்பதற்கு ஆரஞ்சுப் பழச்சாறும் கொண்டு வந்தான். அத்துடன் தனக்குக் குடிப்பதற்குத் தேநீர் கொண்டு வந்தான். சிறிது நேரம் இளங்கோ உண்பதைப் பார்த்துக் கொண்டிருந்தவன் இளங்கோவுக்குரிய நாளாந்தப் பணிகளை விபரிக்கத் தொடங்கினான்:

"இலங்கா, உன்னுடைய முக்கியமான வேலைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். முதலாவது முக்கியமான வேலை பணிப்பெண்கள் அவ்வப்போது கொண்டு வரும் கோப்பைகளை அதற்குரிய கோப்பை கழுவும் இயந்திரத்தில் உடனடியாகக் கழுவி வைப்பது. அப்பொழுது கோப்பைகளில் பாவிக்காமல் வரும் வெண்ணெய்க் கட்டிகள், பழக்கூழ் ("ஜாம்") போன்றவற்றை எறியக் கூடாது. அவற்றை இன்னுமொரு கோப்பையில் சேகரிக்க வேண்டும். அத்துடன் சில சமயங்களில் திரும்ப வரும் பெரு இறால்களின் ("லாப்ஸ்டர்") கோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் சேகரிக்க வேண்டும்.

அது முதலாவது முக்கியமான பணி. அதில் நீ தாமதித்தால் பணிப்பெண்கள் திணறிப் போவார்கள். எனவே ஒவ்வொரு முறை அவர்கள் கோப்பைகளைக் கொண்டு வந்ததுமே இயலுமானவரையில் உடனடியாகக் கழுவி வைத்து விட வேண்டும். இரண்டாவது முக்கியமான பணி எனக்கு நீ ஒத்துழைப்பதுதான். ஒவ்வொரு முறையும் மீன்கள், இறைச்சி வகைகள் போன்றவற்றைப் பொறித்து விட்டுக் கறிச்சட்டிகளை அதோ அந்தத் தொட்டிகளில் போட்டு விடுவேன். நீ கோப்பை கழுவும் சமயங்களில் அவ்வப்போது அந்தத் தொட்டியையும் கவனித்துக் கொள்ள வேண்டும். ஓரளவு நிறைந்ததுமே அவற்றைக் கழுவி வைத்தால் உனக்கும் வேலை இலகுவாகிவிடும். எனக்கும் பெரிய உதவியாகவிருக்கும். அடுத்த முக்கியமான பணியாக அவ்வப்போது அசுத்தமாகி விடும் சமையலறைத் தரையினைச் சுத்தம் செய்வது. சமையலறை மட்டுமல்ல, உணவகத்தின் தரையையும் கேட்கப்படும் பட்சத்தில் துப்புரவாக்கி விட வேண்டும். இறுதியாக இரவு உணவகம் மூடியதும், உணவகம் முழுவதையும் கூட்டித் துப்புரவாக்கி விட வேண்டும். குப்பைகளைக் கட்டி வெளியில் எடுத்துச் சென்று வைத்து விட வேண்டும். இவ்வளவும்தான் உனது பிரதான நாளாந்தக் கடமைகள். வேலை சிறிது சிரமமானது தான். ஆனால் அதனை இலகுவாக்குவது உனது கைகளில் தானுள்ளது"

மார்க்கின் விபரிப்பு இளங்கோவுக்குப் பிரமிப் பினைத் தந்தது. அவனது அதுவரையிலான வாழ்நாளில் அவன் உடல் உழைப்பினை வாழ்வுக்காகவென்று மேற்கொண்டதில்லை. இதுதான் முதலாவது தடவை அவ்விதம் மேற்கொள்ளப் போகின்றான். சிறு வயதி லிருந்தே அடிக்கடி வருத்தம் வந்து விடும் மெலிந்த உடல் வாகு அவனுடையது. உடல் பலகீனமாகிவிடும் சமயங்களி லெல்லாம் ஒருவிதமான மூட்டுவலியால் உபாதைப்படத் தொடங்கிவிடுவான். ஊரிலிருந்த காலகட்டத்தில் அவனது அம்மா தேங்காய் உரிப்பதற்குக் கூட அவனை அனுமதிக்க மாட்டாள். அவ்விதம் பொத்திப் பொத்தி அவனை வளர்த்திருந்தாள்.

அவனது மௌனத்தைக் கண்ட மார்க் கேட்டான்: "என்ன இலங்கா! பயந்து விட்டாயா? இதற்கு முன்பே உனக்கு இது போன்ற ஏதாவது அனுபவமிருக்கிறதா?"

இல்லையென்று கூறினால் ஒரேயடியாகக் அனுப்பி விட்டாலும் விடுவார்கள். எத்தனையோ நாட்கள் காத்திருந்து , "ஓடு மீன் ஓடி, உறு மீன் வருமளவும் வாடிக் காத்து நின்ற கொக்காக" நின்று பெற்ற வேலையல்லவா. அவ்வளவு இலகுவில் நழுவ விட்டு விடலாமா? எனவே இளங்கோ பின்வருமாறு பதிலிறுத்தான்:

"பயமா! எனக்கா! இந்த வேலைக்கா! எனக்குப் இந்த வேலை பழைய ஞாபகங்களை நினைவூட்டி விட்டன" என்றான்.

"பழைய ஞாபகங்களா..!" என்று வியந்தான் மார்க்.

"முன்பு ஒருமுறை உன்னவர்களினொருவனின் கப்பலில் இது போன்ற வேலையினைச் செய்திருக்கின்றேன். ஏன் இலங்கையில் இருந்த காலகட்டத்தில் கூட என்னூர் சுபாஸ் கபேயில் இது போன்ற வேலைகளைச் செய்திருக் கின்றேன் (வாழ்க சுபாஸ் கபே என்று மனது வாழ்த்தியது). அந்த நாள் ஞாபகங்கள் வந்து விட்டன" என்றான்.

மார்க் சிரித்தபடியே "நீ சொல்வது சரிதான். பழசு எப்பொழுதுமே பொன்தான்" என்றவன் தனக்குள் "ஆள் பார்வைக்குத்தான் மெலிந்து, ஒல்லியாகவிருக்கின்றான். உண்மையில் இந்த விடயத்தில் பழமும் தின்று கொட்டையையும் போட்டவனாகவிருக்க வேண்டும். முகவன் பீற்றர் சரியானவனைத்தான் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கின்றான். இவ்வளவு காலமும் கறிச்சட்டிக் கழுவ, கோப்பை கழுவவென்று இரண்டு பேரை வைத்துச் சிரமப்பட்டது போதும். அபபடியிருந்தே அந்தக் கள்ளன் களிருவரும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விட்டான்கள். நல்லவேளை இவனுக்கு அந்த விடயம் தெரியாது. தெரிந் திருந்தால் உண்மையில் பயந்திருப்பான். இவனெப்படி இந்த இரண்டு வேலையையும் செய்கிறானென்று பார்ப்போம்" என்றெண்ணிக் கொண்டான்.

இவை எதுபற்றியும் தெரியாத "இலங்கா"வென் கின்ற இளங்கோ பணிக்குரிய மேலங்கிகளை அணிந்து கொண்டு தன் பணியினை ஆரம்பித்தான்.

(தொடரும்)



காயத்ரியின் "இருட்டின் காதலி" கவிதைத்தொகுதி வெளியீட்டுவிழா 06.07.2024 அன்று யாழ்ப்பாணத்தில் கவிஞர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. நூல் அறிமுகவுரையை ஸ்ரீலேகா பேரின்பகுமாரும், கருத்துரையை வைத்தியகலாநிதி ம.அரவிந்தனும் நூல் மதிப்பீட்டுரையை கவிஞர் ச.முகுந்தனும் நன்றியுரையை நூலாசிரியரும் நிகழ்த்தினார்கள்.




அமரர் இரத்தினம் செல்லக்குட்டியின் 31 ஆம் நிகழ்வு 01.07.2024 அன்று அல்வாயில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது சைவப்பெரியார் க.சூரன் எழுதிய "இரத்தின வியோகம்" என்னும் நூல் வெளியீடு திரு க.பரணீதரன் தலைமையில் நடைபெற்றது. வெளியீட்டுரையை திரு.சி நிமலனும், சிறப்புரையை திரு இ.இராஜேஸ்கண்ணனும், கருத்துரையை திரு. த.அஜந்தகுமாரும், நன்றியுரையை திரு செல்லக்குட்டி கணேசனும் நிகழ்த்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மாவின் துணை



என் உயிரின் துணை நீ
எங்கிருக்கிறாய்! எங்கே! எங்கே
இரவே, முதுமையில் உறங்கவிடு என்றாய்
இப்போ இரவின் அமைதியில் விழித்திருக்கிறாயா
பரமாத்மாவின் கருணையில் தோய்ந்திருக்கிறாயா
பிரபஞ்சமாயையில் மனித கோலங்களைக்கண்டு
புன்னகையால் ஏளனம் செய்கின்றாயா
எங்கிருக்கின்றாய் நீ

அரிய நூல்களில் மனிதர்களின்
அறிவைத்தேடி அலைகின்றாயா
ஆலயத்தில் பூசை செய்கின்றாயா
ஆலடியான் அருட்பிரவாகத்தில்
திகழ்ந்திருக்கிறாயா
அல்லது உன் ஆசைக்கனவுகளை
இறைவனிடம் இன்னும் யாசிக்கிறாயா
காலக்கணிதப்படி காவியமாகி
காலத்தை வென்று, நீக்கமற நிற்கிறாயா

கல்விக்கடலின் கலங்கரை விளக்கே
கற்றோர் மத்தியில் பிரகாசிக்கிறாயா
கலைக்கூடங்களின் மகத்துவம் தெரிந்து
கடவுளைத் தோத்தரிக்கின்றாயா
நாம் முதலில் சந்தித்தது உனக்கு நினைவிருக்கிறதா
நலமான வார்த்தைகள் பேசி
நம்பிக்கையுடன் அடுத்தது காட்டும்
பளிங்குபோல வாழ்ந்தது ஞாபகமிருக்கிறதா

என் முகம் உனக்குத் தெரிகிறதா
அந்தமுகம் இப்போ என்னிடமில்லை
துயரத்தின் வடுக்களை
அடையாளங்களாகச் சுமந்திருக்கிறது
உன் அழகை எதிரொளித்த கண்கள்
துக்கித்துத் துவண்டுள்ளன
தனிமை கொடுமையாய், நிரந்தரமாய்
துன்பம் என்னை வென்று விட்டது

என் அழகுத் துருவ நட்சத்திரமே
தென்புலத்தார் சகாயம் எப்படியிருக்கிறது
ஸ்கந்தர், சண்டர், கணாதீசர், ஈசர்
சதாசிவர், சாந்தர், பிதாக்கள்
சேமத்தின் கரிசனையிலிருக்கிறாயா
பிதிரர் மனங்கோணா நற்றவா
இம்மை, மறுமை, அம்மை பிறப்பின்
ஆன்மபலத்தில் சிவபதம் பணி நின்றாயா

இயல், இசை, நாடகத்தில் மெருகுகூட்டி
அழகு காட்டி நல்வேஷமிட்ட
தில்லைக் கூத்தைச் சேர்ந்தாடுகின்றாயா

கல்வியைக் காக்க கைபேசியுடனும் கணினியுடனும்
காலமுழுதும் களித்த கரங்களில்
கைபேசி எண்ணையும் என்னையும்
இயந்திர இதயத்தையும் எங்கே தொலைத்தாய்
மதுரமொழிபேசி தேனிசை பொழிந்த பாவலனே
வாடி அலைகின்றேன் உன்குரலுக்காய்

காதல் எவ்வளவு மகத்தானது
என ஆற்றாமையைத் தூதுசொல்ல
உன்னிடம் தேவதைகள் யாருமுளரா?
என் இதயம் வெறுமையாகி
உன் அன்பு மட்டுமே பொக்கிஷமாய்
என்றென்றும் நிலைத்திருக்கும்
வாழ்க்கை தன் துணையாய்
உன்னையே தேர்வு செய்திருக்கிறது

என் உள்ளத்தின் பெருமூச்சை
உன்னால் உணர முடிகிறதா
புரியாத புதிரான வாழ்க்கை
தன் முதுகில் என்னைச் சுமக்கிறது
துயிலின் தோளில் சாய்ந்து
துயரம் போக என்னை உறங்கவிடு
தென்றலில் உன் சுந்தரப் புன்னகையைத்
தவழவிடு அது வாழ்விக்கும்
மரணம் என்னை நெருங்கும் வரை

- செல்வகலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கவிதை - 300.00





சிறுகதை - 500.00





கவிதை- 500.00




கட்டுரை - 600.00




கவிதை - 350.00




கவிதை - 400.00




சிறுகதை- 500.00




கட்டுரை - 300.00




சிறுகதை - 800.00




கட்டுரை - 200.00



கட்டுரை- 200.00




கவிதை - 200.00




கட்டுரை -1200.00



சிறுகதை - 400.00




கட்டுரை - 600.00




குறுநாவல் - 200.00




கவிதை - 600.00





கட்டுரை - 750.00



நாவல் - 300.00




கட்டுரை - 700.00




கவிதை- 500.00



சிறுகதை - 400.00




நாடகம் - 600.00




சிறுகதை - 450.00




சிறுகதை - 350.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுலாவு காதை பாகம் 2
நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2



9

வீட்டைச்சுற்றி பலர் ஓடுகிற சத்தம் அவர்களுக்கு பெரும் அச்சத்தை தந்தது. ஏன் சுற்றி வளைக்கிறார்கள் என்பதும் தெரிந்ததுதான். அவர்களை பெரும் பயங்கர வாதிகளாக எண்ணியே இந்த சுற்றி வளைப்பு என்பது அவர்களுக்கே தெரிந்தது. அவர்கள் நினைத்தமாதிரி அல்லாமல் உள்ளே மூன்று சிறுவர்களும் தாயான லெச்சிமியும் சிறிது பதட்டத்தோடு நின்றிருந்தனர்.

"எங்க உங்கட இயக்கத்துக்கு போன பிள்ளை" என்றான் ஒருவன் அதட்டலாக,

"போன திங்கட்கிழமை தாண்டிக்குளத்தில் கொண்டு போய் சரண்டர் பண்ணினன் இன்னும் அவனை திரும்ப அனுப்பேல்ல"

"ஓ... அப்ப புளொட்காறர் கொண்டு போனவன்"

"இவன்தான்... அவனையும் உங்கட ஆக்கள்தான் விட்டவை"

"சரி சரி இவனை நாங்கள் கூட்டிக்கொண்டு போறம். விசாரிச்சிப்போட்டு விடுறம்." என்றவன் "வா தம்பி ஏறு வாகனத்தில" என ஏற்றிக் கொண்டு கிளம்பி னார்கள். லெச்சிமியும் உடனேயே தன் மிதிவண்டியை எடுத்துக்கொண்டு அவர்களைத் தொடர்ந்தாள். என்ன வென்று சொல்ல முடியாத அச்சம் ஏக்கம் அவளது சுவாசத்தை உலர வைத்தது. கைகால்கள் நடுங்கின. வயிற்றைக்கலக்குவது போல ஓர் உணர்வு. இல்லை வாந்தி வருவது போல ஒரு ஆயாசம். மிதிவண்டியை இந்த வாகனத்தின் பின்னாலேயே வேகமாக உழக்கியபடி வந்தாள். அயற்கிராமமான சின்னப்புதுக்குளத்திலிருந்து றைம்பைக்குளம் செல்லும் வீதியில் ஒரு ஒழுங்கையில் புதிதாகக் கட்டப்பட்ட பெரிய கல்வீடு அவர்களின் பாவனைக்காக கைப்பற்றியிருந்தனர்.

அவள் இறங்கி உள்ளே நுழையும் முன்பே ஊரே அங்கு திரண்டு நிற்பது தெரிந்தது. எல்லா வீடுகளி லிருந்தும் இளைஞர்கள் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர் எல்லோருடைய முகங்களும் செத்துக்கிடந்தது. நடுக் கூடத்தில் ஒருவன் மேசை போட்டு அதன்மீது ஒரு பெரிய பதிவேடும் கையுமாக உட்கார்ந்திருந்தான். ஒவ்வொரு வராக அவன்தான் விசாரித்துக் கொண்டிருந்தான். சுதன் மெதுவாக நகர்ந்து மேசையருகே போய்விட்டாள். பெற்றோர் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. அவன் அருகே வந்த போது நிமிர்ந்து பார்த்த அந்த விசாரணை யாளன் அவனை அருகில் வர அழைத்தான். யன்னல் வழியாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த லெச்சிமி அவர்கள் உரையாடுவதை கவனித்தாள். பின்னர் அவன் எதையோ தன் பதிவேட்டில் எழுதிவிட்டு, அவனிடம் ஒரு அட்டையை கொடுத்தான். சுதன் மற்றவர்களை விலக்கிக் கொண்டு வெளியே வந்தான். லெச்சிமி ஓடிச் சென்று அவனை அணைத்தாள். சுதனுக்கு வேதனையாக இருந்தது தன் தாய் அந்த பயங்கரமான சூழலிலும் இருளில் தன்னை தொடர்ந்து வந்திருப்பதை எண்ணி அவன் கண்கள் கசிந்தது.

"வாங்கோ இதில நிண்டு கதைக்க வேண்டாம். வீட்டபோய்க்கதைப்பம்"என்றபடி சுதன் மிதிவண்டியை எடுத்தான்.

"நான் ஓடுறனே" என்ற தாயை தவிர்த்து விட்டு அவனே இருக்கையில் அமர்ந்தான். லெச்சிமி பின்னால் ஏறிக் கொள்ள மிதி வண்டி அமைதியாக சென்றது. வீட்டில் யாரும் உறங்கவில்லை எல்லோரும் விழித்திருந்தார்கள். இவர்களைக்கண்டபின்பே கந்தப்பு நிம்மதியானார். காந்தனும் அவன் மனைவியும்கூட வீட்டில் காத்திருந்தனர். சுதன் வாய்திறந்தான். மகன் பிரபா என்னோடதான் கோவில்குளம் பள்ளிக்கூடத்திலயும், மகாவித்தியால யத்திலும் படிச்சவன். போனவரிசம் இயக்கத்துக்கு போயிற்றான். அவனுக்கு இயக்கப்பெயர் மஞ்சுவாம். அவன்தான் விசாரணையில இருக்கிறான். அவன் இந்த ஊரவன் எண்டதால அவனைப் போட்டிருக்கினம். என்னை ஒண்டும் விசாரிக்கேல்ல. நானா சொன்னதுதான் எல்லாம் உண்மை எண்டு எழுதிற்று இந்த "காட்" தந்தவன். இனி யாரும் வந்து கேட்டா இதைக்காட்டட்டாம். பிரச்சனை யில்லயாம்.

"அப்பாடா" என்றிருந்த லெச்சிமிக்கு அது இன்னும் கொஞ்ச நாட்களுக்குத்தான் என்பது தெரிய வில்லை.

மக்கள் முழுமையாக நகரத்தை இழந்திருந்தனர். தோட்டச் செய்கையாளர்கள் வெகுவாகப் பாதிக்கப் பட்டனர் அவர்களுடைய சந்தை முற்றாக மூடப்பட்டு விட்டது. பிரேமதாஸவுக்கும், புலிகளுக்குமான விவாக ஒப்பந்தம் கேள்விக்குறியாகி விவாகரத்தில் முடிந்து விட்டது இப்போது தாம் போராடாமலே பெற்ற வவுனியா நகரை தக்கவைக்கும் முயற்சியில். புலிகளும், அதை மீட் டெடுக்கும் முயற்சியில் சிறீலங்கா ராணுவமும் போருக் கான முயற்சிகளை முன்னெடுத்தனர். பொதுமக்கள் அன்றாட உணவுப் பொருட்களை வாங்கவேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தையாக சின்னப்புதுக்குளம் சந்தி மாறியது. மாமடு கெப்பிடிபொளாவ போன்ற இடங்களிலிருந்து சிங்கள வியாபாரிகள் வந்து தோட்டக்காரரிடம் நேரடியாகவே பொருட்களை பெற்றுச் சென்றனர். அவர்கள் வரும்போது சீனி மூடைகளையும் தேயிலை பால்மா, கோதுமைமா முதலிய சந்தைப் பொருட்களை அவர்களுடைய பிரதேசத்தி லிருந்து கொண்டு வந்து நல்ல விலைக்கு விற்றனர். ஓமந்தைக்கு அப்பால் எந்தப் பொருளும் போகாதவகையில் இருந்த தடைகளை மக்கள் உடைத்தனர். சின்னப் புதுக்குளம் ராணிமில் ஒழுங்கை வழியாக வவுனியாக் குளத்தின் அலைகரை வழியே பொருட்களை பூந்தேட்டம் வழியாக கடத்தினர். வடபகுதிக்கான முழு விநியோகமும் மிதி வண்டிகளிலேயே நடந்தது.

வவுனியாக்குளம் வற்றியிருந்தது. இப்போது அந்தக்குளவேளி ஒரு சந்தையாக திகழ்ந்தது. மக்கள் வீட்டின் பெறுமதியான பொருட்களை ராணுவக்கட்டுப் பாட்டிலிருந்து மாற்றி புலிகளின் பிரதேசத்துக்குள் மாற்றினர். அங்கிருந்து மடுமாதா கோவில் ஒரு பாதுகாப்பு வலாயமாக இருந்ததால் அங்கு பெரும் தொகையில் மக்கள் குவிந்தனர்.

வவுனியா நகரில் இராணுவம் போரில் நின்றது புலிகளும் தாண்டிக்குளம் நெழுக்குளம் பகுதிகளில் யுத்த சன்னத்தராக நின்றனர். மக்கள் எந்த தலைமையும் இன்றி தாமாகவே சந்தையையும் விநியோகத்தையும் நடத்தினர் வாழப்பயந்த ஏராளமான மக்கள் நகர்ப்பகுதியிலிருந்து வெளியேறி இந்த குளவெளிப்பாதையால் நீண்ட தூரம் நடந்துசென்று யாழ்ப்பாணத்தையோ ஏனைய இடங் களையோ சென்றடைந்தனர். இன்னும் ஏராளமான மக்கள் கால்நடையாகவே மடுமாதா கோவிலை அடைந்து, அங்கிருந்து மன்னாருக்கு கால்நடையாகவே சென்று படகேறி இந்தியாவை சென்றடைந்தனர்.

மன்னார் யாழ்ப்பாண வீதிகளிலும் மடுத்திருப்பதி யிலும் வீதிகளின் இருமருங்கும் வீட்டுப்பாவனைப் பொருட்கள் கொட்டி வைத்து விற்கப்பட்டன. சட்டி பானை அண்டா குண்டா வெற்றிலைத்தட்டம் விவசாய உபகரணங்கள் நீரிறைக்கும் யந்திரம் தையல் இயந்திரங்கள் என கொள்ளை மலிவாக விற்கப்பட்டன. புத்தம் புது நீரிறைக்கும் இயந்திரம் வெறும் ஆயிரம் ரூபாவிற்கு விற்பனையானது. எல்லாம் மக்கள் இந்தியாவுக்குச் செல்லும் நோக்கோடு செய்தார்கள் அப்படியே போயும் சேர்ந் தார்கள்.

இங்கே கோவில்குளம் சந்தைக்கென ஒதுக்கப் பட்டகாணியில் ஒரு சந்தை தோற்றம் பெற்றது. ஆசிகுளம் பகுதி இளைஞர்கள் தமக்கு பின்னேயிருந்த சிங்களக் கிராமங்களிலிருந்து சீனிமூடைகளையும் மா மூடைகளை யும் ஏற்றிவந்து விற்றார்கள். லெச்சிமியின் மூத்தமகளை திருமணம் செய்திருந்த செல்வன் அந்த சந்தைக்குள் ஒரு கடையைப் போட்டு மரக்கறி விற்பனையில் ஈடுபட்டான். முதல் இரண்டு மூன்று நாட்களுக்கு தனது தோட்டக் காய்கறிகளைப் போட்டவன். பின்படிப்படியாக வருகிற பொருட்களையும் வாங்கி விற்றான். தோட்டத்தில் லெச்சிமி நட்டிருந்த வேதாள வெங்காயம் விளைவை நெருங்கிக் கொண்டிருந்தது.

சுதனை மேலும் இங்கே வைத்திருப்பது ஆபத்து என கருதிய லெச்சிமி அவனை யாழ்ப்பாணத்துக்கு கோவில் வேலைகள் செய்யும் ஒரு குழுவுடன் அனுப்பி யிருந்தாள். அப்போது புலிகளும் ராணுவமும் நட்பாக இருந்தார்கள். அவன் அராலியிலுள்ள ஒரு பிரபலமான கோவிலில் சிற்ப வேலைகளுக்காக சென்றிருந்தான். இப்போது நிலைமை சுமுகமாக மாறத் தொடங்கியதால். அவள் "சுதனையும் வீட்ட கூட்டி வருவம், எல்லாரும் ஒரிடமாக இருக்கிறதுதான் நல்லது" என்ற தன்முடிவை தந்தையிடம் சொன்னாள். அவரும் அதை ஏற்றுக் கொண்டார் எனவே அவள் தன் மிதிவண்டியில் அராலிக்குப் போக முடிவெடுத்தாள். அதை மூத்தவளான மலரிடம் சொல்லிவிட்டு இருக்கிற பிள்ளைகளையும் அப்புவையும் பார்த்துக் கொள்ளு நான் போறதும் வாறதுமா வந்திடுவன் என்றாள்.. அப்போதுதான் அங்கு வந்த செல்வன். "அட நான் இருக்கிறன்தானே நீங்கள் ஏன் அவ்வளவு தூரம் சைக்கிள்ள போக... நான் போய் கூட்டிக் கொண்டாறன். நீங்கள் நான் வருமட்டும் கடையப் பாத்துக் கொள்ளுங்க இடம் போனால் பிறகு பிடிக்கேலாது" என்றான். லெச்சிமி ஒப்புக்கொண்டு மரக்கறி வியாபாரியாக மாறினாள். செல்வன் யாழ்ப்பாணம் அராலிக்கு மிதி வண்டியில் பயணமானான்.

*10*

வவுனியா நகருக்கான முழு பொருட்களுக்கான சந்தையும் கோவிற்குளத்தின் தற்போதைய அகிலாண்டேஸ் வரி கோவிலின்முன் அமைந்துள்ள கிராமிய சந்தையில் நடந்தது. சீனி எரிபொருள், மா போன்ற கடைப்பொருட் களை ஆசிகுளத்தின் இளைஞர்களே செய்தனர். மற்றப்படி தோட்டச் செய்கையாளர்களின் உற்பத்திகளும் அமோக மாக விற்பனையானது.

ஓமந்தை அதற்கு அப்பாலுமான மக்கள் வவுனியாக் குளத்தின் அலைகரை வழியாக சந்தைக்கு வந்தார்கள். கொண்டுவந்த அனைத்துப் பொருட்களும் விற்றுத் தீர்ந்தது. பன்னிரண்டு மணியளவில் கடைகள் காலியாகின. லெச்சிமிக்கு இது புதிய அனுபவமாகினும் மரக்கறிச் சந்தை யின் நெளிவு சுழிவுகளை அவள் படிப்பதற்கு முன்பாகவே கரன் சுதனை அழைத்துக் கொண்டு வந்துவிட்டான். பழையபடி அவர்கள் தோட்டச் செய்கையில் கவனம் செலுத்த ஆரம்பித்தனர்.

ஒரு வாரம் ஆகியிருக்காது. அன்றைக்கு சுதன் வந்து ஆறுநாட்கள்தான் ஆகியிருந்தது. காலை உணவை சாப்பிடாமலே சந்தைக்குப்போன கரனுக்கு சாப்பாடு கட்டி சின்னவன் சிவாவிடம் கொடுத்து அனுப்பினாள் மலர். ஒரு கிலோமீட்டர் தூரத்திலே அமைந்திருந்த சந்தைக்கு சிவா சென்ற போது வழியில் ஒருவன் வழிமறித்து, "டேய், இஞ்ச நில்லடா எங்க போறாய்?" என்று கேட்டான். சிவா தடுமாறிப் போனான். அவன் புளொட் இயக்கத்தின் ஒரு முக்கிய பொறுப்பாளர்.

சிவா திருதிருவென முழிப்பதை பார்த்த அவன் "உங்கதான் இருக்கிறியளோடா?" என்றான். சிவா ஆமெனத் தலையசைத்தான். "எங்க போறாய்"

"சந்தைக்கு அத்தானுக்கு சாப்பாடு கொண்டு போறன்"

"சரி சரி போ நாங்கள் பிறகு வாறம்" என்றபடி அவன் அருகிலிருந்த வளவிற்குள் நுழைந்தான்.

சிவா பதறிப்போனவனாக சந்தைக்குப் போனான் சாப்பாட்டைக் கொடுத்த போது சந்தைக்குள் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மூன்று புளொட் அமைப்பை சேர்ந்தவர்கள் இராணுவத்தினருடன் பேசிக் கொண்டு நிற்பதைக் கண்டான். அவர்கள் அருகிலிருந்த அரிசி ஆலைக்குள் போனார்கள்.

கரன் சிவாவிடம் ரகசியமாக, "நீ ஓடிப்போய் அம்மாவையும் சுதனையும் எங்கையாவது போய் ஒழியச் சொல்லு இவங்கள் வந்து பிடிச்சாலும் பிடிப்பாங்கள். இனி ஆமிக்காறனுகளுக்கும் இவங்களுக்கும் மில்லுக்க பாட்டி நடக்கப்போகுதாம். கோழிச்சேவலுகள் கொண்டு ஒருதன் போறான் மற்றவங்கள் போத்தலுகள் கொண்டு போறாங்கள்." தனது எட்டுவயதேயான தன் மகனை தன்னுடன் வைத்துக் கொண்டு சிவாவை திருப்பி அனுப்பினான்.

அவர்கள் எதிர்பார்த்தபடி பதினொரு மணியளவில் சந்தைக்கு ஒரு இராணுவ ட்றக் வண்டி வந்து நின்றது. அனைத்து வியாபாரிகளையும் அதில் ஏறச் சொன்னான். ஒரு ராணுவத்தான். கரன் மகனிடம் பயப்பிடாதை காசு பத்திரம் மரக்கறி போனா போகட்டும் காசை எடுத்துக் கொண்டு வீட்டபோ" என்றான்.

தினேஸ் காசுகளை அப்படியே உட்கார்ந்திருந்த சாக்கு மடிப்பிற்குள் சொருகிவிட்டு சில மரக்கறிகளையும் அதனுடன் சேர்த்து தந்தையின் மிதிவண்டியில் கட்டினான். வளர்ந்தவர்களை வாகனத்தில் ஏற்றும் முயற்சியில் அவர்கள் சிறுவர்களை கவனிக்கவில்லை. தினேஸ் மிதிவண்டியை உருட்டியவாறே வேகமாக நடந்து வீடு வந்து சேர்ந்தான். தாயிடம் நடந்ததை சொல்லி பணத்தையும் மரக்கறிகளையும் கொடுத்தான்.

இதற்குள் லெச்சிமியும் அவளுடன் இருந்த மகன் சுதனும் சிவாவும் புறப்பட்டு மறைவிடம் தேடி வயல் பக்கமாக ஓடினர். அப்போது அவர்களைப்போலவே மேலும் பலர் விமானத்தளத்தின் பின்புறமுள்ள பற்றைக் காட்டை நோக்கி வந்தனர். புலிகளிடம் விசாரணைக்காக சென்று விடுவிக்கப்பட்டவர்களில் சிலரும் இருபுறமும் அகப்படாமல் தப்பித்தவர்கள் சிலருமாக அந்த பொட்டல் காட்டு பற்றைக்குள் பம்மியிருந்தனர். மத்தியான உணவும் இல்லை. தண்ணீருக்காக வயலின் கழிவு நீரோடை இருந்தது. "சந்தைக்காறர் எல்லாரையும் ஏத்திக் கொண்டு போயிட்டாங்களே ஐயோ என்ன பண்ணப் போறாங்களோ என்று அயிரா அழுதாள். அவளுக்கு திருமணமாகி ஒன்பது நாட்களாகியிருந்தது. அவளுடைய கணவனும் பிடிபட்டிருந்தான்.

மனித நடமாட்டமே அற்றிருந்த வவுனியா சந்தையின் நவீன சந்தைக்கட்டடத்தின் பின்புறமாக அவர்கள் இறக்கி விடப்பட்டனர். ஒவ்வொருவருடைய பெயரும் தொழிலும் விசாரித்து எழுதினார்கள். வெயில் கொழுத்திக் கொண்டிருந்தது. தாகம் நாக்கை வரட்டியது. ஆனாலும் யாரும் பேசவில்லை. சில நாட்களுக்கு முன்பு தான் சாம்பல் தோட்ட கொலைகள் நடந்திருந்தது. அதை எண்ணி நமக்கும் அதே கதிதான் என புலம்பினர் சிலர். விசாரணை முடிந்ததும் பின்புறமிருந்த ரயர் கடையிலிருந்து டயர்களை உருட்டி வரும்படி அவளை அழைத்தான் ஒருவன். அவர்களுடைய ரத்தநாளங்கள் உறைந்து போயின "எங்களை ரயர் போட்டு கொழுத்தப் போறாங்களே" எனப் பரிதவித்தனர். ரயர்களை குவித்த பின் அவர்களை உட்கார வைத்துவிட்டு யாரையோ எதிர் பார்த்து காத்திருந்தார்கள். சுமார் நான்கு மணியிருக்கும் ஒரு வாகனத்தில் ஒருவன் வந்தான். எல்லோரையும் தீர்க்கமாக பார்த்தவன் "எல்லாரும் சுவரைப்பாத்து நில்லுங்க" என்றான். அவர்கள் திரும்பினர் எந்த நேரமும் முதுகை குசுண்டு துளைக்கலாம் என்ற நிலையில் அவர்களில் பலர் அழ ஆரம்பித்தனர்.

வந்தவன், "எல்லாரும் நிமிர்ந்து நில்" என்றான். பின்னர், "அப்படியே திரும்பிப் பார்க்காம ஓடுங்க" என்றான். ஓடவிட்டு சுடப்போறானா எல்லோரும் தம்மால் இயன்றளவு வேகமாக ஓட ஆரம்பித்தனர் சிலர் மடங்கி ஒழுங்கைகளூடாக ஓடினர். "சிதறி ஓடுங்கடா" என்றொருவன் கத்தினான். ஏற்கெனவே அவர்கள் சிதறித்தான் ஓடினார்கள்.

வேகமாக வந்து திண்ணையில் விழுந்த கரனைக் கண்டு மலர் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். ஆனாள் இன்னும் பற்றைகளுக்குள் இருக்கும் தாயையும் தம்பியரையும் எண்ணிக்கலங்கினாள். இராணுவம் மக்கள் போக்குவரத்து செய்த ராணிமில் ஒழுங்கையில் தடைஅரண் போட்டது அங்கு போகவர உள்ளவர்களை விசாரணை செய்தது. லெச்சிமியின் தம்பி பெரியவன் பற்றைக் காட்டுக்கு வந்தான். எல்லாரும் போயிற்றாங்கள். வீட்ட போய் கட்டக்கூடிய சாமான்களை கட்டுங்கோ இப்பிடியே மடுக்கந்தை ரோட்டால போய் காத்தார் சின்னக்குளம் வழியா பாதை இன்னும் இறுக்கயில்லை. நாளைக்கு முற்றா அடைப்பான் அதுக்குள்ள வெளியால போயிருங்க நான் தெற்கிலுப்பைக்கள ரோட்டால மாமடுவுக்கை விடுறன்" என்றான்.

எல்லாரும் விரைந்து வீடு திரும்பினர். ஒரு சாக்கில் கத்தரிக்காய் மிளகாய் தேங்காய் என தோட்டத்திலிருந்த உணவுப்பொருட்களையும் உடைகளையும் கட்டி ஏற்றினான். ஒருவர் உடைகளுடன் அவசர சமையலுக்கான பாத்திரங்கள் தீப்பெட்டி மண்ணெய் போன்றவற்றை எடுத்தான் சுதன் ஊதையேன்ரா என்றான் மூத்தவன் காந்தன். அவனும் தனது மனைவி பிள்ளையுடன் இவர்களோடு புறப்பட்டான். "ஏனோ இருட்டப்போகுது வழியில நிக்கிற இடத்தில ஒரு அடுப்பு மூட்ட வேண்டாமே". என்றான்.

"போடா மடையா, நேர பாப்பாக்கா வீட்ட போவம் அதுதான் புத்தி அங்க போயிற்று பிறகு என்ன செய்யிறதெண்டு முடிவெடுப்பம்."

"எடேய் பம்பமடு தாண்டினா யானையள் எல்லாம் ரோட்டிலதான் நிக்கும். இப்ப இருட்டில அந்த காட்டுக்கு எப்படி போறது". அவர்களுடைய தர்க்கத்து முற்றுப்புள்ளி வைக்க மாமன்காறன் ஓடிவந்தான், "வெளிக்கிடுங்க வெளிக்கிடுங்க இப்பதான் ரோட்டு கிளியர் உங்களை பூந்தோட்டம் சந்திவரைக்கும் விட்டிட்டா பிறகு திட்டம் போடுங்க கெதியா கெதியா" பெரியவன் வைத்த சத்தத்துடன் ஒவ்வொரு மிதிவண்டியாக வீதிக்கு இறங்கியது. காந்தன் அவனது மனைவி குழந்தை கட்டிய மூடை ஒரு மிதிவண்டி. சுதன் ஒரு மூடையும் கான்டிலில் கொழுவிய சுமைகளுமாக ஒரு மிதிவண்டி. லெச்சிமி சிவாவையும் கான்டிலில் கொஞ்சம் பொருட்களும், கரியரில் கட்டிய மரக்கறி மூடையுமாக ஒரு மிதி வண்டி இப்போது இந்திரனை அவனது மிதி வண்டியில் தன் தந்தையை ஏற்றி வரும்படி சொல்லிவிட்டு பெரியவனைத் தொடர்ந்தனர் கோவிற் புதுக்குளம் சுடலை வீதி வழியாக தெற்கிலுப்பைக்குளம் சென்று அங்கு பிரதான வீதி வழியாக வெளிக்குளம் மாமடுச் சந்தியை அடைந்த பின் பாதையை பெரியவன் மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டான். அவர்கள் திகைத்து நிற்க திடீரென அங்கே சிறிசேன வந்தான். "அக்கே.கொஹெத யன்னே" என்றான் லெச்சிமியின் நண்பன் அவன் வைத்தியசாலையில் வேலை செய்தான் இங்கே மாமடு வீதியில் வாடகை வீட்டிலிருந்தான். அவனிடம் தனது நிலையை சொன்னாள் லெச்சிமி. அவன் தாமதிக்காது ஓடிப்போய் ஒரு மிதி வண்டியுடன் வந்தான். அவர்களுக்கு வழிகாட்டி பத்திரமாக பூந்தோட்டம் சந்தியில் கொண்டுவந்து விட்டான். அவள் நன்றி சொன்னாள். அவன் பெருந்தன்மையாக "கமன்நே" என்று விட்டு சென்றான். பெரியவனும் விடைபெற்றான். "தம்பி இந்திரனை அப்புவைக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னனான். நாங்கள் போறமெண்டு வரச் சொல்லிவிடு" அவன் தலையசைத்துவிட்டு விரைந்தான். பகல் முழுதும் எரித்த சூரியனின் தாக்கம் குறைந்து மறைந்தும் போனான்.

அவர்கள் அப்படியே தாண்டிக்குளம் குளக்கட்டின் வழியாக கல்மடு வீதியை அடைந்து பின் குழுமாட்டுச்சந்தி வழியாக, இடைவெட்டி பட்டகாடுவழியாக சாம்பல் தோட்டத்தில் மிதந்து அப்படியே பம்பமடுவை சேர்ந்த பொழுது நன்றாக இருட்டிவிட்டது. ஒரு குப்பிலாம்பின் உதவியுடன் தேநீர்க்கடையொன்று திறந்திருந்தது. அவரிடம் போய்ஆறு தேநீர் கேட்டனர் அவர் அதை ஊற்றிக் கொடுக்க அரைமணிநேரமாயிற்று. பம்பமடு ஒரு குட்டி கடைத்தெருவாக இருந்தது காரணம் அதுதான் வவுனியா நகரத்தை கடந்தபின் வரும் முதலாவது கடைகள். அதற்குள் எதுவும் இல்லை. இந்தியாவுக்கு அகதியாக போக முயலுவோர் தமது வீட்டுப் பொருட்களை கொட்டி விற்கும் சந்தையாக இந்த இடம் இருந்தது.

தேநீரை தந்தவாறே அந்த கடைக்காரர் "எங்கே போகிறீர்கள்" என்று கேட்டார்.

"மடுக்குளம் பக்கத்தில சிவபுரம் கிராமம்"

"ஏயப்பா ஆனை ரோட்டிலேயே படுத்திருக்குமே" என்றவர், "சத்தமில்லாத போவாதீங்க சத்தமா பேசிக்கிட்டே போங்க அவுக வழிவிடுவாக."என்றார். தேநீருக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு லெச்சிமி திரும்பினாள் இனி அவையளோடதானே வாழ வேணும் பழகலாம். என நினைத்துக் கொண்டாள்.


(தொடரும்)

## அஞ்சலி | எழுத்தாளர், யூனியன் கல்லூரி முன்னாள் அதிபர் கதிர்.பாலசுந்தரம்



யூனியன்கல்லூரி, 1816 ஆம் ஆண்டளவில் வட அமெரிக்காவிலிருந்து மதம் பரப்ப வந்த திருச்சபையினர் வட பகுதியில் ஆரம்பித்த முதல் ஆங்கிலப் பாடசாலை ஆகும். இந்தப்பாடசாலையின் அமெரிக்க வெள்ளை முதல்வர்களை அடுத்து வந்த நான்காவது சுதேச அதிபர் கதிர்.பாலசுந்தரம் ஆவார். இவர் "Saturday Review" என்னும் ஆங்கிலவாரச் சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கத்தினால் யாழ் குடாநாட்டின் அதிசிறந்த அரசாங்க பாடசாலை அதிபர் எனப் போற்றப் பட்டவர். யாழ்ப்பாணம் ஆவரங்கால் என்னுமிடத்தில் பிறந்த கதிர்.பாலசுந்தரம், அறுபதுகளின் நடுப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று கலைப் பட்டதாரியானார். பின்னர் லண்டன் பல்கலைக்கழக இடைக் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றவர். இலங்கையின் பல்வேறு பாகங்களில் பல்வேறு தொழில்கள் புரிந்த இவர், 1951 முதல் அரசினர் பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றினார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 1972 ஆம் ஆண்டு ஆசிரியராகப் பணியைத் தொடங்கி, 1979 முதல் யூனியன் கல்லூரியில் ஒரு தசாப்தகாலம் கல்வி நிர்வாக சேவை அதிபராகப் பணிபுரிந்தவர்.

சிறுகதை, வானொலி நாடகம், மேடை நாடகம், நாவல், வாழ்க்கை வரலாறு என்று பல்துறையிலும் தடம் பதித்த எழுத்தாளர். இவர் எழுதி நெறிப்படுத்திய நாடகங்களில் "விஞ்ஞானி என்ன கடவுளா?", "சாம்பல் மேடு", "விழிப்பு" என்பவை வித்தியாசமான சமூகப்பார்வை கொண்டவை. "விஞ்ஞானி என்ன கடவுளா?", "விழிப்பு" என்ற நாடகங்கள் வானொலி நாடகங்களாக வந்து பாராட்டுப் பெற்றவை. எழுபதுகளின் ஆரம்பத்தில் இவரது படைப்புகள் சிரித்திரன், றோசாப்பூ போன்ற சஞ்சிகைகளில் பிரசுரமாகின. "அந்நிய விருந்தாளி" சிறுகதைத் தொகுப்பு "மறைவில் ஐந்து முகங்கள்", "கனடாவில் ஒரு நவீன சாவித்திரி", "சிவப்பு நரி", "வன்னி", "வாரிசுகள்" நாவல்கள், "பொற்காலம்" (யூனியன் கல்லூரி நினைவுகள் பதிவுகள்), "தங்கத் தாரகை"(ஆண்டுகள் 200யூனியன் கல்லூரி வரலாறு), "அமிர்தலிங்கம் சகாப்தம்", "சாணக்கியன்" (வன்னியசிங்கம் 100வது ஆண்டுமலர்), "சத்தியங்களின் சாட்சியம்" ஆய்வு நூல் மற்றும் "The Five









Hidden Faces", "His Royal Highness, The Tamil Tiger", "Blood and Terror", "A Militant's Silence" என்ற ஆங்கில நாவல்களையும் படைத்துள்ளார்.

யாழ் இலக்கியவட்ட வெளியீடாக வந்த "அந்நிய விருந்தாளி" என்ற சிறுகதைத்தொகுதிக்கு முன்னுரை எழுதிய பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன் "இவரது கதைகளை வாசிக்கும் ஒருவருக்குச் சமகால யாழ்ப்பாண மண்ணின் மணம் நன்கு புலனாகும். நாம் மண்ணில் அன்றாடம் சந்திக்கும் மாந்தரைக் கதாபாத்திரமாக்கி ஆசிரியர் நடமாடவிட்டுள்ளார். பிரதேசப் பேச்சுவழக்கு ஆசிரியருக்கு நன்கு கைகொடுத்து உதவியுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. கதைகளை அமைக்கும் முறையிலே வெவ்வேறுவகை உத்திகளை ஆசிரியர் கையாண்டுள்ளார். பெரும்பாலும் ஒவ்வொருகதையும் ஒவ்வொரு உத்தியில் அமைந்துள்ளது" என்கின்றார்.

தமிழ் அரசுக்கட்சியின் முன்னைநாள் அபிமானியாகிய இவர், "அமிர்தலிங்கம் சகாப்தம்", "சாணக்கியன்" என்ற புத்தகங்களின் மூலம் இரு அரசியல் தலைவர்களது சாதனைகளைப் பதிவு செய்துள்ளார். "சாணக்கியன்" என்னும் நூல் தமிழ் அரசுக்கட்சியின் ஆரம்பகால வரலாற்றைச் சொல்லும் தமிழ் அரசுக்கட்சியை வளர்த்த வன்னியசிங்கம் அவர்களைப் பற்றிப் பேசும் நூல்.


அயராமல் இயங்கிக் கொண்டிருந்த மூத்த தலைமுறை எழுத்தாளரான இவர் தனது 96 வது வயதில் கனடாவில் (01.06.2024)காலமானார். மனித உரிமைவாதி (Human Rights Defender) என்ற அளவில் அமையும் இவரது நூல்கள் இலக்கிய உலகில் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை.

- கே.எஸ்.சுதாகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.